
ஸ்ரீ
கிருஷ்ண
லீலா

# ஸ்ரீ கிருஷ்ண லீலா

எஸ். என். ஸ்ரீராம தேசிகன்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : டிசம்பர் 1989
(C) வானதி பதிப்பகம்

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 12-00

அச்சிட்டோர் :
துர்காதேவி பிரிண்டர்ஸ்
13, பாரதிதாசன் தெரு, குமரன் காலனி
சைதை, சென்னை—600 015.

# முன்னுரை

பரமன் புவியில் கண்ணனாக அவதரித்தான். பரமனின் பத்து அவதாரங்களில் கிருஷ்ணாவதாரம் சாலச் சிறந்தது. பரமன் புவியில் கண்ணனாகப் பிறந்து வளர்ந்து பல லீலை களைப் புரிந்து பல அற்புதங்களையும் நிகழ்த்தி உலகிற்கு நல்வழி காட்டி கீதோபதேசம் செய்து தன் அவதார ரகசியத்தை வெளிப்படுத்தினான். பல்லாயிரம் ஆண்டு களாக முனிவர்கள், பக்தர்கள், கவிஞர்கள் யாவரும் அவன் நிகழ்த்திய லீலைகளையும் அவனுடைய புனிதசரிதத்தையும் வாயாரப் பாடி மகிழ்ந்து புகழ்ந்து பல நூல்களை இயற்றி யுள்ளனர். அவைகள் இன்றுவரை புனித நூல்களாகப் போற்றிப் புகழப்பட்டு அழியாச் செல்வங்களாக நமக்கு இருந்து வருகின்றன.

பொதுவாக கண்ணனின் சரிதத்தைப் பார்க்கும்போது அவன் மாயாவி, வஞ்சகன், பொய்யன், தூய்மையற்றவன், பிற பெண்களுடன் உறவு கொண்டவன் என்பது போன்ற ஓர் ஐயப்பாடு மக்களுக்குத் தோன்றலாம். தத்துவக் கண்கள் கொண்டு தர்ம சூக்ஷ்ம அடிப்படையில் அந்நிகழ்ச்சிகளின் பின்னணிகளையும் வைத்துப் பார்க்கும்போது, அவ்வையப் பாடு நீங்கி எளிதில் அதற்கு விடையையும் காணலாம். தூய குணங்களுக்கு இருப்பிடமான ஒருவனை நாம் கடவுளாக ஏற்று அந் நிகழ்ச்சிகளைப் புனிதமானவைகளாகக் கருதிப் போற்றி வருகிறோம். அவன் காட்டிய மற்ற வழிகளைப் பின்பற்றும் நாம், ஐயப்பாட்டிற்கிடமான அவனுடைய சில செயல்களை மாத்திரம் பின்பற்றலாகாது என்ற ஒரு கட்டுப் பாட்டோடு இருந்தும் வருகிறோம் என்றால், இப்புனித அவ

தாரத்தின் தனிப் பெருமையையும், தனித் தன்மையையும் என்னென்று சொல்வது !

பொதுவாக புராணக் கதைகளைப் படிக்கும்போது அவை களின் பின்னணி உட்கருத்து அவற்றில் புதைந்திருக்கும் தத்வார்த்தங்கள் ஆகியவற்றை மனதில் கொண்டால் பொது வாகத் தோன்றும் இவ்வையப்பாட்டிற்கு இடமே இராது.

கண்ணன் பிறந்து வளர்ந்து நிகழ்த்திய லீலைகளை பாகவதம் தசம ஸ்கந்தம் பரக்கப் பேசுகிறது. வடமொழி மூல நூலை அப்படியே பின்பற்றி அவன் பிறந்தது முதல் ருக்மிணி கல்யாணம் வரையாக நிகழ்ந்த சரிதத்தை 1943வது ஆண்டு 'பாரத தேவி' என்னும் நாளிதழில் தொடர்ந்து பதினைந்து தலைப்புகளில் கட்டுரையாக எழுதி வந்தேன். அவைகளைத் தொகுத்து 'கிருஷ்ண லீலா' என்னும் பெயரில் புத்தகமாக வெளியிடவேண்டும் என்ற நோக்கோடு 'வானதி' பதிப்பகத்தின் உரிமை யாளர் திரு. திருநாவுக்கரசு அவர்களை வேண்டிக் கொண் டேன். நல்ல காரியங்களை உடனடியாகச் செய்து முடிக்கும் நல்லெண்ணங் கொண்ட என் இனிய நண்பரான அவர் இதை வெளியிட்டு உதவியதற்காக என் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

கண்ணன் கதையை அனைவரும் சுலபமாகத் கொள்ள இந்நூல் பயனுள்ளதாக இருக்கும் என எண்ணு கிறேன்.

சென்னை-17. எஸ். என். ஸ்ரீராம தேசிகன்

# பதிப்புரை

'தர்மம் நசிந்து அதர்மம் தலைவிரித்தாடும் போது, அதை ஒழித்து தர்மத்தைக் காப்பாற்ற யுகம் தோறும் அவதரிக்கிறேன்' என்பது பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணனின் கூற்று.

நமது அவதாரங்கள் எல்லாமே தர்மத்தை நிலை நாட்டவே ஏற்பட்டவை. இவற்றுள் ராமாவதாரமும் கிருஷ்ணாவதாரமும் தனிச் சிறப்புடையவை.

ராமனையும் கிருஷ்ணனையும் இந்துக்களுடைய உணர்விலிருந்து நாம் பிரித்துப்பார்க்க முடியாத விதத்தில் அவர்கள் மக்களுடைய சிந்தையில் நிலைத்து விட்டவர்கள்.

ராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்த பரமன் மனித உருவில் மக்களோடு கலந்து வாழ்ந்தவர்கள். உன்னத மனித இயல்பில் நின்றவன் ராமன். ஆனால் சாதாரண மக்களுக்கிருக்கும் ஆசை, அபிலாஷைகள் கொண்டவனாக விளங்கியவன் கண்ணன். அதனாலேயே தங்களில் ஒருவனாகவே கண்ணனைக் கருதிப் போற்ற முடிகிறது.

பாரதி உருவகப்படுத்தியது போல கண்ணன் தாயாய், தந்தையாய், நல்லாசிரியனாய், காதலனாய், காதலியாய், சேவகனாய் மக்களின் உள்ளத்தில் குடி கொண்டிருக்கிறான். கண்ணனுடைய ஒவ்வொரு செயலும் சுவையான கதைப் போக்குடன் தொடர்பு கொண்டவை. அதனாலேயே 'கிருஷ்ண லீலை' என்று அது சிறப்பித்துக் கூறப்படுகிறது.

அவதாரம் எடுத்த நாளிலிருந்து கடமை முடித்து வைகுண்டம் திரும்பிய வரை பரமன், கண்ணனாக நிகழ்த்திய லீலைகள் மிகவும் சுவையானவை. படிப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தக் கூடியவை. பக்தி சிரத்தையுடன் அவற்றைப் படிக்கும் போது, காக்கும் கடவுள் எடுத்த அவதாரமான—ஸ்ரீகிருஷ்ண னின் அருள் அவருக்கு கிடைக்கும்.

இறைவனை வழிபடுவதற்கும் அவன் பாதத்தைச் சென்றடைவதற்கும் எந்தச் சடங்கும் தேவையில்லை. 'கிருஷ்ணார்ப்பணம்' என்று பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து விட்டு உங்கள் கடமைகளை பலனை எதிர்பாராமல் செய்து கொண்டிருங்கள் என்ற எளிய வழியைக் காட்டியவன் கண்ணன்.

இந்த சரணாகதி தத்துவமே பக்தி மார்க்கத்துக்கும் வழியமைத்துக் கொடுத்தது. இந்து சமயத்தின் சாரமாக விளங்கும் பகவத் கீதை தன் அவதாரக் கடமையை முடிக்க வந்த கிருஷ்ணன் என்றும் நிலைத்திருக்கும்படியாக நமக்குத் தந்துள்ள இணையற்ற பொக்கிஷம்.

கிருஷ்ணன் பிறந்து வளர்ந்து வாழ்ந்து புரிந்த அற்புதச் செயல்களைச் சுவைபட இந்நூலில் சுருக்கமாகத் தருகிறார் ஆசிரியர் ஸ்ரீராம தேசிகன் அவர்கள். இந்நூலை வெளியிட அனுமதியளித்த ஆசிரியர் அவர்களுக்கு நன்றி.

வானதி ஏ. திருநாவுக்கரசு

# ஸ்ரீ வைகுண்டம்

**வை**குண்டத்தில் பரமன் பாம்பணை மீது வீற்றிருக்கிறான் ; திருமகள் அவன் திருவடிகளைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். நித்தியஸூரிகள் மிக்க ஆனந்தத்துடன் சாமகானம் செய்து கொண்டு பகவானைத் துதிக்கிறார்கள். அச்சமயம் பிராட்டியார் சிறிது கோபம் கொண்டவள்போல் தோற்றம் அளிக்கிறாள். அதன் காரணத்தை அறிய ஆவல் கொள்கிறான் பரமன். ''நமது குழந்தைகளான பல ஜீவன்கள் சம்ஸாரக் கடலில் வீழ்ந்து பரிதவிக்கின்றன. அவைகளும் நம்மையடைந்து நித்திய ஸூரிகளைப்போல் ஏன் பரமானந்தத்தை அனுபவிக்கக் கூடாது ? அவ்வாறு செய்வதால் என்ன குறை உங்களுக்கு உணடாகும் ? அப்படிச் செய்வதால் துழாய் மாலையோன் ஜீவன்களிடம் மிக்க கருணை கொண்டவன் என்று உலகம் தங்களைப் புகழாது என்ன செய்யும் ?'' என்று, பிராட்டி தனது கோப காரணத்தைத் தெரிவிக்கிறாள். மலராள் மணவாளன், அவள் விருப்பப்படி அங்கிருந்தவாறே ஜீவர்களைக் கரையேற்ற நான்முகனைக் கொண்டு வேதம் என்னும் நல்வழியைக் காட்டருளுகிறான்.

இதைக் கொண்டும் கரையேறாது சம்ஸாரச் சுழலிலேயே அகப்பட்டுக் கிடந்துறங்கும் ஜீவன்களை மறுபடியுங் கரையேற்ற எண்ணிப் பல புராணங்களை வெளியிட்டருளுகிறான். அவைகளையும் புறக் கணித்து அவ்வுலகத்திலேயே சுழன்று கொண் டிருக்கும் அவர்களை நாம் பூலோகம் சென்று பல அவதாரங்களெடுத்துக் காப்பதைத்தவிர வேறு வழி யில்லை என்று கருதி மீனாய், ஆமையாய், பன்றி யாய், தசரத ராமனாய்ப் புவியில் தோன்றினான். படாத பாடுகளைப் பட்டான். மனைவியைத் துறந்தான். அரசினை இழந்தான். இராஜ கிருகத்து இருந்து பல போகங்களை அனுபவிக்கவிருந்தும் வனஞ்சென்று கிழங்கு முதலியவைகளைத் தின்று காலத்தைக் கழித்தான். இவை யாவும் எதற்காக ? ஜீவன்களெல்லாம் பாவஞ் செய்யாது நல்வழியைக் கைப்பற்றி நன்மையடைய வேண்டுமென்பதற்காக வன்றோ ? என்ன ஆச்சரியம் ! அவன் கருணைதான் என்னே ! தன் நலத்தைச் சிறிதும் கருதாமல் பிறர் நலனையே எப்பொழுதும் நினைக்கும் அத்தூயோ னின் நற்குணத்தை நாம் என்னென்போம் ?

இவ்வளவு செய்தும் என்ன பயன் ? அப்பொழு தாவது ஜீவன்கள் நல்வழியிற் திரும்பினார்களா ? இல்லவே இல்லை. வழக்கம்போல் இயற்கையாகிய மாயையில் அகப்பட்டு மறுபடியும் பாவங்களையே செய்யத் தொடங்கினார்கள். சம்ஸாரமே சுகமென் றெண்ணி இதிலேயே உறங்கினார்கள். அந்தோ ! ஸர்வேச்வரனின் மிக்க முயற்சிகள் வீணாயின.

அவன் மனமும் சற்றுக் கலங்கியது. தனது முயற்சிகள் வீணானதால் தன்னிருப்பிடமே சென்றான். ''நம்முடைய முயற்சி அடியோடு வீணாகாமல் ஏதோ சில ஜீவர்களாவது நல்வழியைக் கைப்பற்றி, நம் அவதார உண்மையை அறிந்து நம்மையடைந்தார்களே'' யென்றெண்ணி ஒருவாறு மனத்தேர்ச்சியடைந்தான். திருமகளும் இவ்வாறே யெண்ணிச் சமாதானம் அடைந்தாள்.

|ப்படி ஸ்ரீவைகுந்தத்தில் திவ்விய தம்பதிகள் ஆலோசிக்கும் சமயம் பூதேவி அலங்கோலத்துடன் கண்ணீர் மல்கப் பிரம்மாதி தேவர்களுடன் வந்து பரமனின் திருவடிகளைப் பணிகிறாள். கம்ஸன் முதலிய அரக்கர்களின் அட்டூழியங்களால் தனக்கு ஏற்பட்டிருக்கும் பாரத்தைப்போக்க இவனை வேண்டுகிறாள். ''நம் எண்ணம் நிறைவேற இதுவே தக்க காலம். கடைசியாகத் தரணியில் கிருஷ்ணனாக அவதரித்துத் துஷ்டர்களைப் போக்கி நல்லோரைக் காத்து கீதையென்னும் உயர்ந்த சாஸ்திரத்தை வெளியிட்டுப் பக்தி, பிரபத்தி என்ற இரண்டு உபாயங்களையும் தந்தருளுவோம். பரம சுலபமான இச்சரணாகதி யென்னும் உபாயத்தைச் செய்தாவது உலகம் நன்மை அடையட்டும்'' என்ற தயாள எண்ணத்தோடு ''பிரியே! நீ கவலைப்படாதே. உன் துன்பங்களை நான் நன்கு அறிவேன். சீக்கிரத்திலேயே உனது விருப்பத்தைப் பூர்த்திசெய்கிறேன்'' என்று சொல்லிப் பூதேவியைச் சமாதானம் செய்தான் பரமன்.

## தேவர்கள் இடையர்களாகப் பிறத்தல்

பிறகு தேவர்களைப் பார்த்து, ''நான் வசு தேவனுக்குப் புதல்வனாக அவதரிக்கப் போகிறேன். எனக்குத் தோழர்களாக நீங்கள் அனைவரும் கோகுலத்தில் இடையர்களாகப் பிறந்திருங்கள். வெகு நாட்களாக என்னைத் தரிசிக்கக் காத்திருக்கும் முனிவர்களும் யோகிகளும் பாலைக் கொடுத்து என்னைத் திருப்தி செய்ய பசுக்களாகப் பிறக்கப் போகிறார்கள். ஆதிசேடன், பலராமன் என்ற பெயருடன் எனக்குத் தமையனாக அவதரிக்கப் போகிறான். என் மாயையும் சில காரியங்களின் பொருட்டுக் கோகுலத்தில் தோன்றப் போகிறாள்'' என்று சொல்லித் தேவர்களைதேற்றி விடை கொடுத்து அனுப்புகிறான். இப்புவியில் கண்ணானாக அவதரிக்கப் போகும் செய்தியைச் சொல்லிப் பிராட்டி யாரிடம் விடை கேட்கிறான். தங்களைப் புதல் வனாக அடைய ஆவலுடன் பல பக்த சிகாமணிகள் இருக்க வசுதேவனுக்குப் பிள்ளையாகத் தோன்றப் போவதன் காரணம் யாதெனப் பிராட்டி கேட்கிறாள்.

''ஒரு சமயம் பிரம்மா, பிரச்னி என்பவரை சுதை பையுடன் சேர்ந்துப் பிரஜோற்பத்தி செய்யக் கட்டளை இட்டார். அதன்படியே அவ்விருவர்களும் காடு சென்று இந்திரியங்களையடக்கி ஆகாரமின்றிப் பரம சுத்தர்களாய் எப்பொழுதும் என்னையே மனத் திற்கொண்டு பல ஆண்டுகள் தவஞ் செய்தார்கள். அதற்கு மெச்சி, நான் அவர்கள் முன் தோன்றி,

வேண்டிய வரத்தைத் தெரிவிக்கக் கேட்டேன். இவர்கள் என் மாயையால் மூடப்பட்டு முக்தி வேணு மென்று என்னைக் கேளாமல் என்னைப் போல ஒரு புதல்வன் வேண்டுமென்று வேண்டினார்கள். எல்லா வற்றிலும் என்னைப்போன்ற ஒருவனைக் காணாமல் நானே அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தேன். மறுபடியும் இரண்டாம் பிறவியில் கச்யபர், அதிதி என்ற பெயர்களுடன் தோன்றிய அவர்கட்கு நான் உபேந்திரன் என்ற பிள்ளையாகப் பிறந்தேன். இப்பொழுது பிரச்னி என்பவரே வசுதேவராகவும், சுதபை என்பவளே தேவகியாகவும் பிறந்திருக் கிறார்கள். ஆகவே அவர்களுக்கு இப்பிறவியிலும் கண்ணனாகப் பிறக்கப் போகிறேன்'' என்று சொன்னார். பிராட்டியும் பகவானுக்கு விடை கொடுத்தனுப்புகிறாள். பகவானும் விடை பெற்று மானிட உலகத்தில் தோன்றுகின்றாள்.

## வசுதேவர்—தேவகி திருமணம்

யாதவர்களுக்குத் தலைநகராகிய வடமதுரையை போஜவம்சத்தில் தோன்றிய சூரசேனன் என்பவன் அரசாண்டு வந்தான். இவனுக்குக் கம்ஸன் என்றொரு புதல்வனும் தேவகியென்றொரு பெண் ணும் இருந்தார்கள். கம்ஸன் என்பவன் மிகவும் கொடியவன். இராக்ஷஸர்களைப்போல் சாதுக்களை வருத்துவதில் இவன் கருத்துள்ளவன். ஒரு சமயம் தேவகிக்கும் வசுதேவர்க்கும் விமரிசையாக விவாகம் நடந்தது. விவாகம் ஆனபிறகு மணக்கோலத்துடன் தம்பதிகளை தேரில் ஏற்றிக் கொண்டு வெகு உற்சா

கத்துடன் தங்கையைப் பிறந்த அகத்திற்கு அழைத்துச் செல்கிறான் கம்ஸன். அநேகம் குதிரைகள், தேர்கள், யானைகள், காலாட்கள் எல்லாம் இவளுக்கு வரிசையாகத் தொடர்ந்து செல்கின்றன.

## கம்சனுக்கு ஆகாயவாணி எச்சரிக்கை

தேர் சிறிது தூரம் செல்ல, வழியில் யாவரும் வியக்க, ''ஓ கம்ஸா? நீ எவளை மிக்க உற்சாகத்தோடு அழைத்துச் செல்கிறாயோ, அவளுடைய எட்டாவது பிள்ளை உன்னைக் கொல்லப்போகிறான்'' என்று ஓர் ஆகாயவாணி தோன்றியது. இதைக் கேட்டான் கம்ஸன்; ஒன்றும் மனத்தில் தோன்றவில்லை. இதுவரை அவனுக்கிருந்த உற்சாகமெல்லாம் மாயமாய் மறைந்தன. இனி, தேவகியைக் கொன்றாலொழிய நமக்குப் பிழைக்க வழி கிடையாது என்றெண்ணித் துணிந்து அவ்வாறே செய்யத் தொடங்கினான். வசுதேவருடைய மனம் பதற்றம் அடைந்தது. இவளைக் கொல்லாமலிருக்க, ''இவள் உனது தங்கை. அதிலும் மிகச் சிறியவள். இதுவோ நல்ல சுபசமயம். நீயோ மிகச்சிறந்த போஜ வம்சத்தில் தோன்றியவன். இப்படியிருக்க, நீ உனது தங்கையான இவளைக் கொல்லலாமா?'' என்றெல்லாம் கம்ஸனுக்கு எவ்வளவோ உபதேசங்கள் செய்கிறார் வசுதேவர். இதில் சிறிதளவும் அவன் செவியில் விழவில்லை. இனி எப்படியாவது இவளை இக்கோர விபத்திலிருந்து மீட்கவேண்டும் என்று கருதிய வசுதேவர், ''இவர்களுடைய குழந்தைகளை

உனக்கு அளித்துவிடுகிறேன்'' என்று சொல்லி அவளை மீட்கிறார். கம்ஸனும் வீடுசென்று இவர்களுக்குப் பிறக்கப்போகும் பிள்ளைகளிடமிருந்து தான் உயிர் தப்புவதற்காக இவர்களைச் சிறைச் சாலையில் வைக்குமாறு உத்தரவிடுகிறான். ப்படியே சில தினங்கள் கழிந்தன.

## கம்ஸனின் சிசுக்கொலைகள்

தேவகியும் கீர்த்தி மந்தன் முதலாகப் பல புதல்வர்களைப் பெற்றாள். சத்தியசந்தனான வசுதேவர் தான் முன் சொன்னபடி எல்லாக் குழந்தைகளையும் கம்ஸனிடம் ஒப்புவித்தார். இப்படியே தேவகியினுடைய ஆறு குழந்தைகளும் கம்ஸனால் கொல்லப்பட்டன. பிறகு, தேவகி ஏழாவதாக ஆதி சேடாவதாரமான பலராமனைக் கருப்பத்தில் தரித்தாள். பிரசவகாலம் கிட்ட, ''நம்முடைய லீலையின் பொருட்டு இக்குழந்தையை எப்படியாவது கம்ஸனிட மிருந்து காப்பாற்றவேண்டும்'' என்று எண்ணினான் பரமன். அவன் விருப்பம் நடக்காமலுமிருக்குமோ? அப்படியே பகவான், தனது மாயையைப் பார்த்து, ''வசுதேவருடைய பத்தினி ரோகிணியென்பவள் கோகுலத்தில் வசித்து வருகிறாள். தேவகியின் கருப்பத்திலிருந்து பலராமனை எடுத்து, ரோகிணியின் கருப்பத்தில் வைத்துவிடு. நான் வசுதேவருக்குப் புதல்வனாகப் பிறக்கிறேன். அதே சமயத்தில் நீயும் நந்தகோபனுடைய பத்தினி யசோதைக்குப் பெண்ணாகப் பிறக்கப் போகிறாய்'' என்று சொன்னார். மாயையும் அவ்வாறே செய்து முடித்தாள்.

## 2. ஸ்ரீ கிருஷ்ணாவதாரம்

பரமன் உலகம் உய்யுமாறு வசுதேவருக்குப் பிள்ளையாக அவதரிக்க எண்ணங்கொண்டு தேவகியின் வயிற்றில் எட்டாவது கருப்பமாகப் பிரவேசித்தார். ஸ்ரீதேவியின் பதியான நாராயணனை புதல்வனாக அடையத் தேவகி என்ன பாக்கியம் செய்தாளோ! அவளுடைய கருப்பம் முறையே வளர்ந்து வந்தது. அவள் பரமனை வயிற்றில் கொண்டிருந்ததனால் மிகச் சோபையோடு விளங்கினாள். அவளைக் கண்ட கம்ஸனின் உள்ளம் மிகத் துடித்தது. ஆகாயவாணி சொல்லியபடி இக்குழந்தையே நம்மைக் கொல்லப் போகிறது என்று அவன் மனதில் உறுதியாகத் தோன்றியது. இவளுடைய பிரசவ காலத்தை உடனே தெரிந்து கொள்ளப் பல தூதர்களைக் காவல்புரிய ஏவினான். பிரம்மா முதலிய தேவர்கள் கிருஷ்ணாவதாரத்தால் உலகத்துக்கேற்படும் நன்மையையறிந்து தேவகி கருப்பத்திலுள்ள பரமனைப் பலவாறு துதித்துச் சென்றார்கள். பிரசவ காலமும் கிட்டிவிட்டது. கண்ணபிரான் அவதரிக்கப் போவதை அறிந்து திக்குகளெல்லாம் மிக்க பிரஸன்னமாயிருந்தன.

நதிகளில் நீரும் கலக்கமின்றித்தெளிவாயிருந்தது. காட்டிலுள்ள மரங்களெல்லாம் தாமாகவே மலர் களைப் பொழிந்தன. அப்ஸரப் பெண்கள் நடனம் செய்தனர். நான்கு சமுத்திரங்களும் மெல்லக் கர்ச்சித்தன. இச்சமயத்தில் இரவு 12 மணிக்கு உரோகிணி நக்ஷத்திரத்தில் பகவான், சங்கம் சக்ரம் முதலியவைகளுடன் தேவகியின் புதல்வனாகத் தோன்றினார். வசுதேவரும் தேவகியும் மிக்க மகிழ்ச்சியுடன் பகவானைப் பணிந்து துதித்தார்கள். ஸ்ரீதேவியின் மணாளனே தமக்குப் புத்திரனாகத் தோன்றியிருப்பதை நினைத்து மகிழ்ந்தார்கள்.

கம்ஸனிடமிருந்து குழந்தை கண்ணனுக்கு ஏதாவது ஆபத்து வருமோவெனப் பயந்து தேவகி யானவள் இப்பொழுதிருக்கும் பரம புருஷ வேஷத்தை மாற்றிக்கொண்டு சாதாரணக் குழந்தை யாக மாறிவிடப் பகவானை வேண்டுகிறாள். அடியார்கடியவனான பகவானும் சாதாரணக் குழந்தையாக மாறினான். ''இனி, நான் இவ் விடமே இருந்தால் கம்ஸனிடமிருந்து தப்புவது கடினம். ஆகவே, கோகுலத்தில் நந்தகோபனுடைய பத்தினி யசோதையிடம் என்னைக் கொண்டுவிட்டு, இப்பொழுதே அவளுக்குப் பிறந்திருக்கும் பெண் குழந்தையை இங்கு கொண்டு வந்துவிடுங்கள்,'' என்று பகவான் சொல்ல, வசுதேவரும் அவ்வாறே செய்தார். கோகுலத்தில் யசோதை பகவன் மாயை யால் மோகிக்கப்பட்டவளாய்த் தனக்குப் பிறந்த குழந்தையை ஆணா, பெண்ணா என்பதையுங்

அறிந்துகொள்ளவில்லை. பகவன் மாயையால் மூடப்பட்டு அங்குள்ள காவலாளிகள் இச்செயல்களைச் சிறிதும் அறியவில்லை. கதவுகளெல்லாம் பழையபடி மூடிக்கிடந்தன.

## கம்ஸன் ஏமாறுதல்

குழந்தையின் அழுகைக் குரலைக்கேட்ட காவலர்கள் விழித்துக்கொண்டு, குழந்தை பிறந்த செய்தியைக் கம்ஸனுக்கு அறிவித்தனர். கம்ஸனும் மிக்க அலங்கோலத்துடன் இவர்களிடம் ஓடிவந்து தனக்கு வாக்களித்தபடி இக்குழந்தையைக் கொடுக்குமாறு கேட்கிறான். பாவம் தேவகி வருந்தி, ''இப்பெண் குழந்தையையாவது விட்டு விடு'' என்று கேட்கிறாள். கொஞ்சமும் இரக்கமற்ற அப்பாவி, குழந்தையை எடுத்துக் கல்லில் அறைகிறான். அப்பெண் குழந்தை அவன் கையை விட்டு விலகிக் கோர ரூபத்துடன் ஆகாயத்தையடைந்து, ''கம்ஸா, என்னைக் கொன்று உனக்கு என்ன பயன்? உன்னைக் கொல்லப்போகிறவன் வேறோரிடத்தில் பிறந்துள்ளான்'' என்று கூறி மறைந்தது. கம்ஸன் இதைக்கேட்டு மிக மனம் நொந்து இவர்களை விலங்கிலிருந்து விடுவித்துத் தனது பிழைகளை மன்னிக்க வேண்டுகிறான். அவர்களும் களிப்புற்றனர்.

## துர்மந்திராலோசனை

பிறகு கம்ஸன் வீடு சென்று நடந்தவற்றை மந்திரிகளிடம் சொல்லி, இனிச் செய்யவேண்டிய

காரியத்தைப் பற்றி ஆலோசனை செய்கிறான். ஆசுரத் தன்மை வாய்ந்த மந்திரிகள், ''தேவர்கள் நமக்கு அனாதியாகப் பகைவர்கள். நம்முடைய நாசத்தில் கண்ணும் கருத்தும் கொண்டவர்கள். பலதடவை நமக்கு தீங்கை விளைவித்திருக்கிறார்கள். ஆகவே, பகவானே இப்பொழுது உன்னைக் கொல்லப் போகிறான். இவர்களைப் பூண்டோடு ஒழிக்கவேண்டும். பிராமணர்கள், முனிவர்கள் முதலியோர் தேவர்களுக்கு நட்புடையோர். ஆதலினால் இவர்களை முதலில் நாசஞ் செய்தால் தேவர்கள் ஒழிந்துவிட்டதாகவே கருதலாம். தவிர, ஆங்காங்கு ஊர்களிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் கொன்று விட்டால் உனக்கு ஒருபோதும் அபாயம் நேரிடாது'' என்று கூறினார்கள். கம்ஸனும் அதன்படியே பல அரக்கர்களை மாறுவேடம் பூண்டு குழந்தைகளையும் சாதுக்களையும் உபத்திரவம் செய்ய ஏவினான்.

# 3. கோகுலவாசிகளின் மகிழ்ச்சி

## இடம் : நந்தகோகுலம்

வசுதேவர், பரமனின் கட்டளைப்படி கண்ணனை இரவில் கொண்டுவந்து யசோதையிடம் விட்டு விடுகிறார். பகவானுடைய மாயையினால் மோகிக்கப்பட்டுக் கோகுலவாசிகள் இச்செய்தியை அறியவில்லை. சூரியனின் தோற்றத்தின் பின் குழந்தையின் அழுகைக் குரலைக் கேட்டு அனைவரும் விழித்துக் கண்ணனைக் காண் கிறார்கள். உடனே இச்செய்தியை மிக்க சந்தோஷத்துடன் நந்தனுக்குத் தெரிவிக்கிறார்கள். அவனுக்கு மிக்க களிப்பு உண்டாகிறது. பல பிராமணர்களை அழைத்துக் குழந்தையின் பொருட்டுச் சாஸ்திரப்படி செய்ய வேண்டியவை களைச் செய்து வைத்தான் நந்தன். ஆயர்பாடியில் எங்கு பார்த்தாலும் ஒரே சந்தோஷம். கோகுலம் முழுதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு மிக்க தோற்றப் பொலிவோடு விளங்கியது. ஆய்ச்சியர், கண்ணன் பிறந்ததனால் உண்டான மகிழ்ச்சியினால் ஒருவருக்கொருவர் தயிர் முதலியவைகளை வாரி

அப்பிச் சந்தோஷத்தைத் தெரிவிக்கின்றனர். வரிசையாக நந்தனுடைய அகத்திற்குச் சென்று குழந்தையைக் கண்டு ஆசி கூறிவரும் இடைச்சியர் தம் தோற்றம், கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. கண்ணபிரான் அவதரித்தது முதல் கோகுலம் பலவகைச் செல்வங்களுடன் விளங்கிற்று. ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனே கோகுலத்தில் கண்ணனாக அவதரிப்பதற்கு அங்குள்ளவர்கள் செய்த பாக்கியம்தான் என்னே !

## பூதகியைக் கொன்ற வரலாறு

பூதகி என்பவள் ஓர் அரக்கியர் மகள். இவள் கமஸனின் தூதை. ஆங்காங்குள்ள குழந்தைகளைக் கொல்வதற்காக ஊரூராகச் சென்று வந்தாள். ஒரு சமயம் ஆயர்களுடைய மனத்தைப் பறிக்கக்கூடிய அலங்காரத்துடன் பெண் வடிவுகொண்டு நந்த கோபன் அகத்தினை அடைந்தாள். மெத்தென்னும் பஞ்சணையில் கண்ணன் படுத்திருக்கிறான். குழந்தைக்கு ஏதாகிலும் தீங்கு நேரிடுமோ என்றெண்ணி அஞ்சி யசோதை இமை கொட்டாமல் குழந்தையின் பக்கத்தில் அமர்ந்திருக்கிறாள்.

பூதகியும் குழந்தையின் அருகில் வருகிறாள். இவளுடைய வேடத்தால் இவளைச் சாதாரண மானிடப் பெண் என்று கருதி யாரும் அவளைத் தடுக்கவில்லை. பரமனே இங்கு கண்ணனாக அவதரித்திருக்கும் உண்மை இவளுக்கு எட்டவில்லை. சாதாரணக் குழந்தையாகவே நம் கண்ணனை என்

ணினாள். பரமயோகிகளே அவனையறியாது அல்லும் பகலும் அவன் நினைவாயிருக்கப் பாப காரியத்தையே நோக்கமாகவுடைய இவள் உணர்தல் எவ்வாறு முடியும்? கெட்ட எண்ணத்துடன் இங்கு பூதகி வந்திருப்பதையறிந்தும் கண்ணன் ஒன்றும் அறியாதவன்போல் இருக்கிறான். பூதகி, மாயக் குழந்தையை எடுத்துத் தன் மடியில் வைத்து விஷத் தால் நிரம்பிய தன் ஸ்தனங்களைக் கொடுத்துக் கொல்ல முயல்கிறாள். அவளுடைய ஸ்தனத்தை உண்பதுபோல் பாசாங்கு செய்து உயிரையே உண்டான். பூதகி, வேதனை தாங்கமாட்டாது தன் இயற்கை வடிவோடு கீழே விழுந்து மாய்கிறாள். வெகு தூரம்வரை பரவிக்கிடந்த இவளுடைய பயங்கர மான உருவத்தைக் கண்டு அச்சம் கொண்டு குழந் தையை மிகப் பரபரப்புடன் யசோதை எடுத்து வாரி யணைத்து குழந்தை அச்சமடைந்துவிட்டதோ என்று பயத்தால் குழந்தையைக் குளிப்பாட்டிப் பயம் நீங்கு முபாயமாக ரக்ஷை முதலியவற்றைக் கட்டிவைத் தாள். கண்ணனைக் கொல்லவேண்டுமென்று கெட்ட எண்ணங்கொண்ட பூதகியும் பகவத் ஸம் பந்தத்தால் நற்கதியடைந்தாள். பரம பாதகியான பூதகியையுங் காத்த பரமனின் கருணையன்றோ கருணை!

## சகடாசுரனை மாய்த்த வரலாறு

கண்ணனுக்கு ஒரு வயதாயிற்று. ஆண்டு நிறைவு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடு கிறார்கள். யசோதை குழந்தையை மங்கள நீரால்

நீராட்டி ஆணிப்பொன்னால் செய்த தொட்டிலில் கண் வளரச் செய்கிறாள். மாயக் குழந்தை பசி தாங்காமல் கால்களைத் தொட்டிலின்மேல் உதைத்துக்கொண்டு அழுகிறது. உத்ஸவப் பரபரப்பில் வருவோரையும் போவோரையும் விசாரிப்பதில் ஈடுபட்டிருக்கின்றாள் யசோதை. அழுகை அவள் செவியில் விழவில்லை. அருகிலும் ஒருவர்கூட இல்லை. எவரோ சில இடைக் குழந்தைகள் மட்டும் அங்கு விளையாடிக்கொண்டிருந்தனர். ஓர் அசுரன் வண்டி வடிவமாய்க் கண்ணனைக் கொல்ல ஆகாய மார்க்கமாய்த் தொட்டிலின்மேல் தோன்றுகிறான்.

இவனையும் தன் திருவடி ஸம்பந்தத்தால் காக்கத் திருவுள்ளங்கொண்டு மாயக்கண்ணன் தனது இரண்டு கால்களாலும் அச்சகடத்தை உதைத்தான். அதுவும் பல துண்டங்களாகிச் சிதறிக்கிடந்தது. யசோதை முதலியவர்கள் மிகப் பரபரப்புடன் ஓடி வந்து கண்டார்கள். சகடம் ஒடிந்துபோன காரணம் இவர்களுக்கு விளங்கவில்லை. ''தொட்டிலிலுள்ள குழந்தைதான் இதனை ஒடித்தது'' என்று சமீபத்திலிருந்த இடையர் குழந்தைகள் சொல்லியும் இவர்கள் நம்பவில்லை. கண்ணனை மனிதக் குழந்தையென்று எண்ணிவரும் இவர்களுக்கு அவன் சக்தி எவ்வாறு தெரியும்? யசோதை குழந்தையை எடுத்துக்கொண்டு கெடுதல்கள் அணுகாவண்ணம் ரக்ஷை முதலியவைகள் செய்வித்தாள். சகடாசுரனும் முக்தியடைந்தான் என்றால் இதில் என்ன வியப்பு இருக்கின்றது? மனிதன் நல்லவனானாலும் கெட்டவனா

னாலும் பரமனின் ஸம்பந்தம் ஏற்பட்டால் அதுவே அவனை முக்தியடையச் செய்யப் போதாதோ ?

## திருணாவர்த்தனை கொன்ற வரலாறு

யசோதை தன் குழந்தையை மடிமேல் ஏந்தி அமர்ந்திருக்கிறாள். தாயை வரப்போகும் ஆபத்தி லிருந்து காக்க மாயக் குழந்தை தன்னைத் தாங்க முடியாதபடி அவளுக்குப் பளுவை உண்டுபண்ணு கிறது. இதைத் தாங்கமாட்டாது யசோதா, ''என்றுமிராமல் இக்குழந்தை இவ்வளவு பளுவா யிருக்கிறது. என்ன தீங்கு நேரிடுமோ'' வென்று வருந்திக் குழந்தையைக் கீழே விட்டுவிட்டு, வீட்டுக் காரியங்களை கவனிக்கச் செல்கிறாள். உடனே எங்கும் புயற்காற்று வீசுகிறது. கண்ணுக்கெட்டிய வரை ஒன்றும் புலப்படவில்லை. மண்ணையும் கல்லையும் வாரி இறைக்கிறது. இக்காற்றிலிருந்து வெளிவந்து ஓர் அரக்கன் கண்ணனை யெடுத்து ஆகாயத்தில் செல்கிறான். சிறிது நேரத்திற்கெல் லாம் காற்று நின்று அமைதி நிலவியது. கண்ண னைக் காண யசோதை உள்ளேயிருந்து ஓடிவரு கிறாள். குழந்தையைக் காணோம். உடனே, பாவம்—புலம்புகிறாள். இச்சம்பவத்தையறிந்து கோபியர்கள் ஓடி வந்து இவளைத் தேற்றியும் கேட்கவில்லை.

திடீரென எங்கோ குழந்தையின் குரல் கேட் கிறது. எல்லோரும் வேகமாக ஓடுகிறார்கள். ஆகாயத்தில் ஓர் அரக்கன் தொங்குகிறான். இம்

மாயக் குழந்தை அவன் கழுத்தை விடாமல் கட்டிக் கொண்டிருக்கிறது. இதன் பாரத்தை தாங்க மாட்டாமல் தவிக்கிறான் ராக்ஷஸன். மேலேயும் போக முடியவில்லை. குழந்தையைக் கீழே உதறித் தள்ளவும் முடியவில்லை. அப்படியே ஒன்றும் செய்ய முடியாமல் குழந்தையோடு தரையில் ஒரு பாறையின் மேல் விழுகிறான். அரக்கனின் தேகம் பல சுக்குநூறு களாயின. குழந்தை ஓர் அபாயமுமின்றி தப்பியது. அவன் மார்பின் மேல் விளையாடிக் கொண்டிருக் கிறது. இதைக் கண்டு கோபியர்கள் சந்தோஷ மடைந்து குழந்தையை எடுத்து யசோதையிடம் கொடுக்கிறார்கள். எல்லாருக்கும் மிக்க சந்தோஷம். இவ்வளவு சம்பவங்களாலும் கண்ணனைப் பரமன் என்று ஒருவரும் உணர்ந்து கொள்ளவில்லை. விதி வசத்தினால் இவ்வாறெல்லாம் நடந்தனவென்பது அவர்கள் கருத்து. பரமனை அறிவது சுலபமாகுமா?

## புரோகிதரைக் கொண்டு நாமகரணம் செய்வித்தல்

ரோகிணி என்பவள் வசுதேவருடைய மனைவி. இவள் கம்ஸனுடைய கொடுமையைத் தாங்கமாட்டா மல் வெகு நாட்களாக நந்தகோபனின் வீட்டில் வசித்து வந்தாள். பகவன் மாயையால் தேவகியின் ஏழாவது கருப்பம் இவள் வயிற்றையடைய இவளிடம் முன்னமேயே பலராமன் பிறந்திருந்தான். பலராம னும் கண்ணனும் நந்தகோபன் வீட்டில் சேர்ந்து

வளர்ந்து வருகிறார்கள். இதையறிந்த வசுதேவர் குழந்தைகளுக்கு நாமகரணம் செய்துவருமாறு தனது புரோகிதரான கர்க்கர் என்பவரைக் கோகுலத்திற்கு அனுப்புகிறார். கர்க்கரும் கோகுலம் வந்து நந்தனிடம் விடைபெற்று ரோகிணியின் புதல்வனுக்கு பலராமன் என்றும், யசோதையின் பிள்ளைக்கு கிருஷ்ணன் என்றும் பெயர் சூட்டி கண்ணனின் விசேஷங்களை எடுத்துக் கூறி மதுரைக்குச் சென்றார்.

### மனதை மயக்கும் மன்மத உருவம்

கண்ணபிரானுக்குப் பால்யம் வந்தது. அவன் கண்டோர்களுடைய மனத்தைக் கவரும் வண்ணம் இருந்தான். அவன் திருமேனியின் அழகை நாம் என்னென்போம்? கருமேகம்போல் கருத்த திருமேனி. தாமரை போன்ற நீண்ட கண்கள். கோவைக் கனியைப் பழிக்கும் உதடுகள். வில் நாண் போல் வளைந்த புருவங்கள். பருவச் சந்திரனைப் பழிக்கும் திருமுக மண்டலம். பாம்புபோல் நீண்ட மிருதுவான கைகள். சங்குபோல் நீண்ட கழுத்து. தாமரைகள் போல் சிவந்த இரு திருவடிகள். இவ்வழகிய மன்மத உருவமே மனதைக் கவரப் போதுமானது. தவிரவும் யசோதை குழந்தைக்கு கால் தொட்டு முடிவரை இரத்தின மயமான ஆபரணங்களைப் பூட்டி வைத்திருக்கிறாள்.

இந்த அற்புத சித்திரத்தைப்படிக்கும் நம் மனமே சற்று மயங்குகின்றதெனில், நேரிற் கண்டோர்

தன்மை கூறவும் வேண்டுமோ? இத்திவ்ய மங்கள விக்கிரகத்தைக் கண்டு கோபியர்கள் மெய் மறந்து தமது வீட்டு வேலைகளையும் விட்டு எப்பொழுதும் அவனையே காண ஆசைப்படுவதில் வியப்பென்ன? இம்மாயக் குழந்தையை வாரியணைத்துப் பால் கொடுத்த யசோதை பெற்ற பேறு அல்லவோ சிறந்தது? தேவகி கண்ணனைப் பத்து மாதங்கள் சுமந்து பெற்றதுதான் மிகுதி. அவனைக் கண்ணாரக் கண்டு களிக்கும் பேறு யசோதைக்கே வாய்த்தது. பரமனைக் குழந்தையாகப் பெற்றால் மாத்திரம் என்ன பயன்? அவனுடைய திவ்ய லீலைகளை நேரில் கண்டு களிப்பதே கண்கள் பெற்றதன் பெரும்பயன். கோகுலவாசிகளான கோபர்களுமல்லவா அவன் லீலையைக் காணக் கொடுத்துவைத்தார்கள்!

## யசோதையிடம் ஆய்ச்சியர் முறையீடு

கண்ணன் தினந்தோறும் பலராமனையும் மற்றும் அநேக இடைச் சிறுவர்களையும் அழைத்துக் கொண்டு வீடுதோறுஞ் சென்று அங்கிருக்கும் வெண்ணெய், தயிர், முதலியவைகளைக் களவாடித் தனது நண்பர்களுக்கும் கொடுத்துத் தானும் சாப்பிடுவது வழக்கம். இதுமாத்திரமின்றி வீடுகளில் தூங்கும் குழந்தைகளைக் கிள்ளி எழுப்பிவிடுவான். தயிர்ப்பானைகளை உடைத்துவிடுவான். கன்றுகளை அவிழ்த்துப் பசுக்களிடம் விட்டுவிடுவான். ஊரிலுள்ளவர்களால் இவன் தொல்லை பொறுக்க

முடியவில்லை. பல நாட்கள் பொறுத்துப் பார்த்தும் அவன் தனது செயல்களை நிறுத்திக்கொள்ள வில்லை. கோபியர்களனைவரும் கூடி யசோதை யிடம் ஒவ்வொருவரும் முறையிடுகிறார்கள்.

''யசோதை! கேட்டனையா உங்கள் கண்ணன் செய்த அநியாயத்தை. பாலைக் காய்ச்சி ஓர் அறை யில் உறியின்மேல் வைத்துவிட்டு சமைத்துக்கொண் டிருந்தேன். ஓசை உண்டாகாமல் கண்ணன் பிள்ளைகளோடு உள்ளே நுழைந்து பாலை எடுத்துக் குடித்து, மிகுந்த பாலைப் பூனைக்கு வைத்துவிட்டு, உன்னிடம் ஒன்றுமறியாதவன்போல் வந்து நிற் கிறான்'' என்றாள் ஓர் ஆய்ச்சி.

''அம்மா யசோதை! நன்றாயிருக்கிறது உன் பிள்ளை செய்யும் வேலை. தினமும் என் அகத்திற்கு வந்து கண்ணன் வெண்ணெயைத் திருடிவிடுகிறா னென்று அவனுக்கெட்டாமல் உறிமேல் வெண் ணெயை வைத்துவிட்டு நீராட யமுனைக்குச் சென்றி ருந்தேன். ஒருவருமிராததை யறிந்த இம்மாயக் கண்ணன் பிள்ளைகளுடன் வந்து வெண்ணெயை எடுக்க முயன்றான். அவனுக்கு எட்டவில்லை. வெண்ணெய் அகப்படாத கோபத்தால் அங்குத் தூங்கிக்கொண்டிருந்த என் குழந்தையைக் கிள்ளி யெழுப்பிவிட்டு ஒன்றுமறியாதவன்போல் பாவனை செய்கிறான்'' என்று கோபத்துடன் கூறினாள் மற்றொருத்தி.

''யசோதை! என் பெண் சகுந்தலை என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள். உன் பிள்ளை கண்ணன் அங்கு வந்தான். அப்பொழுது ஓர் கிழவி வீதியோடு நாவற்பழம் விற்றுவந்தாள். அங்கிருந்த குழந்தை சகுந்தலையைப் பயமுறுத்தி அவள் கைகளிலிருந்த பொன் வளைகளைக் கழற்றிக் கிழவியிடம் கொடுத்து, அதற்குப் பதிலாக நாவற் பழங்களை வாங்கிச் சாப்பிட்டுவிட்டான். உடனே குழந்தை அழுதுக் கொண்டு உள்ளே வந்தது. காரணம் என்னவென்று கேட்டேன். கண்ணன் மிரட்டி என்னுடைய பொன் வளைகளைக் கழற்றிக் கொண்டுவிட்டான் என்று அழுதாள். இப்படியா அநியாயம் செய்வது? நீயும் இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறாயே'' என்று பரபரப்புடன் பேசுகிறாள் மற்றோர் இடைச்சி.

''யசோதை! நன்றாகப் பெற்றனை இத் தன்மையுடைய பிள்ளையை! எங்கள் வீட்டில் மாப்பிள்ளை வரப்போகின்றானென்று முறுக்கு, சீடை, சிற்றுருண்டை எல்லாம் செய்து தெரியாதபடி பானைக்குள் வைத்திருந்தேன். கண்ணன் சமயம் பார்த்து அவ்வளவையும் தின்றுவிட்டு ஒன்றுகூட மிகுதியாகாதபடி செய்திருக்கிறானென்றால், அதை யார்தான் பொறுத்துக்கொள்வார்கள்?'' என்று கூச்சலிடுகிறாள் ஓர் ஆயர் மகள்.

''நான் உறியில் வெண்ணெயை எட்டாதபடி வைத்துவிட்டு, என் வீட்டின் பின்பாகத்தில் இருந்

தேன். உன் பிள்ளை மற்றப் பிள்ளைகளோடு அங்கு வந்து வெண்ணெயை எடுக்க முயன்றான். அவனுக்கு அது எட்டவில்லை. மற்றப் பிள்ளைகளை ஒருவன்மேல் ஒருவனாகக் குனிய நிற்கவைத்து விட்டுத் தான் அவர்கள் மேலேறி அதை எடுத்துக் கொண்டிருந்தான். இதை நான் பார்த்துவிட்டேன். ''அடே கண்ணா! இப்படியும் செய்யலாமா?'' என்று மிரட்டினேன். ''இல்லை மாமி, எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டி காணாமல் போனதால் அதனைத் தேடுவதற்கு வந்தேன்'' என்று ஏதோ சமாதானம் சொன்னான். ''பசுங்கன்று அகப்படா விட்டால் அடுப்பங்கரையில் வந்தா தேடுவது? அதுவும் உறியிலுள்ள சட்டியிலா மறைந்திருக்கும்?'' என்று கேட்டதற்குப் பதில் சொல்ல முடியாதபடி ஓடிவிட்டான். இனி நாங்கள் பொறுக்கமாட்டோம்'' என்றாள் ஓர் ஆய்ச்சி.

இவ்வாறாகக் கோபியர்கள் கண்ணன்மேல் சொன்ன குற்றங்களை அறிந்திருந்தும் யசோதை தன் அருமையான பிள்ளையைக் கோபிக்கவில்லை. குழந்தையின் அருமை அவளுக்கன்றோ தெரியும்!

## யசோதைக்கு விச்வரூபம் காட்டியது

நடுத்தெருவில் சிறுவர்கள் கண்ணனுடன் கூடி கண்ணாம்பூச்சி விளையாட்டு விளையாடுகிறார்கள். மாயக் கண்ணன் மண்ணைத் தின்றுவிடுகிறான். பிள்ளைகள் இதை யசோதையிடம் தெரிவிக்கின்றனர். அவள் குழந்தைக்குத் தீங்கு வராமல்

காக்க அவனை மிரட்டுகிறாள். ''வீணாக இவர்கள் பொய் சொல்லுகிறார்கள். நான் மண்ணைத் தின்னவே இல்லை. வேண்டுமானால் என் வாயைப் பார்'' என்று பாசாங்கு செய்கிறான், மாயன். யசோதை, ''வாயைத் திறந்து காட்டு'' என்கிறாள். கண்ணனும் வாயைத் திறந்து காட்டுகிறான். அதைக் கண்ட யசோதைக்குப் பெரு வியப்பு உண்டாயிற்று.

என்ன ஆச்சரியம்! உலகம் முழுவதையும் அவன் வாயினுள் அவள் கண்டாள். மிகப் பெரிய மலைகள், எட்டுத் திக்குகள், நக்ஷத்திரங்கள், சந்திரன், சூரியன், அக்கினி முதலிய ஐந்து பூதங்கள், ஏழு கடல்கள், கோகுலம், தான், கண்ணன் இவை எல்லாம் அவன் வாயில் காணப்பட்டன. ஒன்றும் இவளுக்குத் தோன்றவில்லை. பலவிதமாக யோசனை செய்தும் இதற்குக் காரணம் புலப்படவில்லை. கடைசியாக, ''பரமனே இக்கோலத்துடன் நமக்குப் புதல்வனாகத் தோன்றியிருக்கிறான் இவனே அப்பரம்பொருள்'' என்று தெளிந்து அக் கண்ணனைப் பணிந்தாள் யசோதை. இவர்கள் நம்மை உள்ளபடி அறிந்துகொண்டால் நம் விருப்பம் நிறைவேறாது என்றெண்ணிப் பரம புருஷன் யசோதைக்கு உண்டான நல்லறிவைப் போக்கித் தன் மாயையால் பழையபடி தன்னைச் சாதாரணக் குழந்தையாகவே நினைக்குமாறு செய்துவிட்டான். யசோதைக்கு நடந்த விஷயங்களெல்லாம் மறந்து பழைய நினைவு வந்துவிட்டது. குழந்தையை

எடுத்து பால் கொடுக்கிறாள். பரம யோகிகளும் காண அரியதான அவன் திவ்ய ரூபத்தை யசோதை அன்று கண்டாள்.

## கண்ணன் உரலில் கட்டுண்டது

நந்தனுடைய அரண்மனை. ஓர் அறையில் யசோதை தயிர் கடைகிறாள். குழந்தை பசியோடு ஓடிவந்து தயிர் கடையும் மத்தினைப் பிடுங்குகிறது. அவளும் குழந்தையை மடிமேல் கொண்டு பால் கொடுக்கிறாள். அடுப்பில் பால் பொங்கி வழிவதை யறிந்த யசோதை குழந்தையைத் திடீரென கீழே விட்டுவிட்டு சமையலறைக்கு ஓடுகிறாள். கண்ணனுக்கு அடங்காத கோபம் உண்டாகிறது. உதடுகள் துடிக்கின்றன. பார்த்தான். கல்லால் தயிர்ப் பானையை ஓங்கி உடைத்துவிட்டு வெண்ணெயை எடுத்துக்கொண்டு போய்விடுகிறான்.

இதற்குள் யசோதை போய் வேலையை முடித்துக் கொண்டு திரும்பிவந்து பார்க்கிறாள். தயிர்ப்பானை உடைந்து வெள்ளமாய்க் கிடக்கிறது. கண்ணன் அருகிலுள்ள உரல்மேல் உட்கார்ந்து கொண்டு மிகுந்த வெண்ணெயைப் பூனைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறான். இதைக் கண்டு மிகுந்த கோபத்தோடு தடியைக் கையிலேந்தி அவனைப் பிடிக்க ஓடுகிறாள் யசோதை. கண்ணன் உரலைவிட்டு இறங்கி கைக்கு அகப்படாமல்

ஓடுகிறான். பெரு மூச்சு விட்டுக் கொண்டு மிக்க களைப்போடு ஓடிவரும் தாயைக் கண்டு மனமிரங்கி அவள் கையில் அகப்படுகிறான். மிக்க பயந்தவன் போல் பாவனை செய்கிறான். யசோதை குழந்தையை அடிக்க மனமிராமல் அருகிலிருந்த உரலோடு இவனைக் கயிறுகளால் கட்டிப் பிணிப்புறச் செய்கிறாள். பக்த பராதீனனான பகவானும் உரலில் கட்டுண்டான். யசோதை குழந்தையைக் கட்டிவிட்டு வீட்டுக் காரியங்களைக் கவனிக்கச் செல்கிறாள்.

## குபேரப் புதல்வர்களின் சாபவிமோசனம்

குபேரனுக்கு நளகூபரன், மணிக்கிரீடன் என்றிரண்டு புதல்வர்கள் உண்டு. இவர்கள் ஒரு சமயம் இமயமலைக்கு அருகிலுள்ள மந்தரகிரியின தீரத்தில் கள்வெறியினால் பல ஸ்திரீகளுடன் நிர்வாணமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். நாரதமுனி, பல இடங்களுக்குச் சென்று தற்செயலாக அவர்கள் இருக்குமிடம் வந்தார். இவரைப் பார்த்த பின் வெட்கத்தால் அப்பெண்கள் ஆடைகளை அணிந்துகொண்டனர். குபேரப் புதல்வர்கள் கள்ளுண்ட வெறியால் ஆடையின்றி அவ்வாறே நின்றார்கள். இதைக்கண்ட முனிவருக்குக் கோபம் வந்துவிட்டது. ''பணச்செருக்கால் என்னை அவமதித்ததால் நீங்கள் இருவரும் மரங்களாய்ப் பிறவியடையுங்கள்'' எனச் சபித்துப் ''பல வருஷங்

கள் கழித்துக் கண்ணபிரான் சம்பந்தத்தால் உங்கள் சாபம் தீரும்'' என்று சமாதானங் கூறிச் சென்றார். அவர்களும் அதுமுதல் கோகுலத்தில் இரட்டை மரங்களாக இருந்துவந்தார்கள்.

இவ்விரு மரங்களையும் உரலில் கட்டுண்டவாறே கண்டான் கண்ணன். அவர்களைச் சாபத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற எண்ணம் அவன் மனத்திலுதித்தது. உடனே கட்டின உரலை இழுத்துக்கொண்டே மெள்ளமெள்ள நகர்ந்து அவ்விரு மரங்களின் நடுவே நுழைந்தான். உரலால் தடுக்கப்பட்டு அவ்விரு மரங்களும் கீழே முறிந்து விழுந்தன. அவைகளிலிருந்து இரு கந்தர்வர்கள் மிக்க ஒளியுடன் தோன்றி சாபம் ஒழிந்து பரமனைத் துதித்துத் தம் இருப்பிடம் ஏகினர். இச்சத்தத்தைக் கேட்டுக் கோபர்கள் ஓடிவந்து இதைக் கண்டார்கள். மரம் முறிந்து விழுந்ததற்குக் காரணம் என்னவென்று அவர்களுக்குப் புலனாகவில்லை. நந்தன் குழந்தையை விடுவித்து வீடு சென்றான்.

## கோபர்கள் பிருந்தாவனம் சென்றது

அசுரர்கள் கண்ணனுக்குப் பல தீங்குகளைச் செய்துவந்தனர். பரமன் தப்பி இனிது வளர்ந்து வந்தான். ஒருசமயம், கோகுலத்திலுள்ள கோபர்அனைவரும் ஒன்றுகூடி, கண்ணன் பிறந்தது முதலாகக் கோகுலத்துக்கு விளைந்த தீமைகளைக் கூறி இதற்கு வேண்டிய பரிகாரத்தை நினைக்கலானார்கள்.

அப்பொழுது உபநந்தன் என்ற ஓர் இடைக்குலக் கிழவன் ''இனியும் நாம் இவ்விடமே இருந்தால் கண்ணனுக்கு இன்னும் பல துன்பங்கள் நேரிடும். சமீபத்தில் யமுனைக் கரையில் பிருந்தாவனம் என்ற ஓர் காடு இருக்கின்றது. அது வசிப்பதற்கு மிகச் சிறந்தது. ஆகவே, நாம் அனைவரும் மாடு கன்று களுடன் அவ்விடமே செல்வோம்'' என்றான். எல்லோரும் அவ்வாறே சம்மதித்தனர். பிரயாணமும் சித்தமாயிற்று. பசு, மாடு, கன்று முதலிய பரிவாரங் களுடனும் பிருந்தாவனம் சென்று அங்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொண்டு இடைக்குலம் முழுவதும் வசித்து வந்தது. இவர்கள் பிருந்தாவனம் சென்றால் மாத்திரம் என்ன? விதிவசத்தால் வருந் தீவினைகளை எங்கு சென்றாலும் அனுபவித்துத் தானே தீரவேண்டும்! விதி மனிதனை விட்டு விடுமா!

# 4. பிருந்தாவனம்

பிருந்தாவனம். சுற்றிலும் சிறிய காடுகள். எங்கும் செழிப்பான புல் பூமியை மறைத்துக்கொண்டிருக்கிறது. மரங்கள், மலர்களைத் தாங்காமல் கீழே அவற்றை உதிர்க்கின்றன. குயில்கள் கூவுகின்றன. அழகுடைய மயில்கள் தம் தோகையை விரித்து உல்லாசமாக ஆடுகின்றன. யமுனை நதி மிக்க கம்பீரத்துடன் ஓடுகிறாள். எங்கும் மணற் குன்றுகள். செடி, கொடி, மரம் முதலியவைகளால் மூடப்பட்ட கோவர்த்தன மலையின் தோற்றம் மனத்தைப் பறிக்கிறது. ஆங்காங்கு காடுகளில் பசுக்கள் புல் மேய்ந்து கொண்டு மெல்ல மெல்ல செல்லுகின்றன. சிறிய கன்றுகள் அவற்றைத் தொடர்ந்து கத்திக்கொண்டே ஓடுகின்றன. இடைச் சிறுவர்கள், மாடு கன்று ஆகியவற்றை மேயவிட்டு மரங்களிலும் குன்றுகளிலும் ஏறி விளையாடுகிறார்கள். மரத்திலிருந்து கீழே குதிக்கிறார்கள். பசுக்கள்போல் தம்மை எண்ணி, கால் முட்டிகளால் நடந்து சென்று விளையாடுகிறார்கள். கிளைகளில் உட்கார்ந்து வேணுகானம் செய்கிறார்கள். யமுனையிலிருந்து குடங்களில் நீர் ஏந்தி, தலைகளில் வைத்துக் கொண்டு வரிசை வரிசையாகச் செல்லும் கோப ஸ்திரீகளின் தோற்றம் மனதைக் கவரும்படியாக இருந்தது. பிருந்தாவனத்தின் இயற்கை யழகு என்னே! அங்கு புல்லாகவாவது

பிறந்து கண்ணபிரானின் திவ்ய லீலைகளைக் கண்டு களிக்கும் பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கக் கூடாதா ?

## வத்ஸாஸுரனைக் கொன்றது

குழந்தை கண்ணனுக்குப் பால்யம் வந்தது. யசோதை கண்ணனை இடைச் சிறுவர்களுடன் மாடு கன்றுகளை மேய்த்துவர அனுப்புகிறாள். கண்ணன் சிறுவர்களுடன் கன்றுகளை ஓட்டிக்கொண்டு காடு சென்று அவர்களுடன் விளையாடிக்கொண்டிருக் கிறான். கம்ஸ தூதனான ஓர் ராட்சஸன் கன்று வடிவத்துடன் கன்றுகளோடே கன்றாகச் சேர்ந்து மேய்வது போல் நடிக்கிறான். தனிப்பட்ட சில குறிப்புக்களால் ராட்சஸன் என்று அறிந்து மாயக் கண்ணன் மாயக் கன்றின் பின் கால்கள் இரண்டை யும் பிடித்துச் சுழற்றி, விளாமரத்தின்மேல் எறி கிறான். அவ்வரக்கன் கோர உருவத்தோடு விழு கிறான். இதைக்கண்ட சிறுவர்கள் கண்ணனை மிகவும் கொண்டாடுகிறார்கள். பரம பாபிகளான ஜீவன்களையும் தனது ஸம்பந்தத்தால் காப்பாற்ற அவதரித்த கண்ணபிரானின் ஸம்பந்தத்தைப் பெற்ற அவ்வசுரனும் நற்கதியடைந்ததில் என்ன சந்தேகம் !

## பகாசுரனின் வாயைப் பிளந்தது

நந்தகுமாரன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறான். யசோதை, குழந்தைக்கு சோற்று மூட்டையைக் கட்டிக்

கொடுத்துக் கன்று முதலியவைகளுடன் காட்டுக்கு அனுப்புகிறாள். மற்ற இடைச் சிறுவர்களும் கன்று களை ஓட்டிக்கொண்டு கண்ணனைத் தொடர்கிறார் கள். கன்றுகளும் மேய்ந்தாயிற்று. சூரியன் உச்சிக்கு வந்தான். கண்ணன் விளையாட்டுக்களை முடித்துக் கொண்டு அவர்களுடன் மடுவிற்குச் சென்று, உல்லாஸமாக எல்லோருடனும் சேர்ந்து ஒன்றுகூடிச் சாப்பிட்டுக் கன்றுகளையும் நீர் குடிக்கச் செய்து எல்லோருடனும் வீட்டிற்குப் புறப்படுகிறான்.

கம்ஸ தூதனான ஓர் அரக்கன் கொக்கு வடிவத் துடன் பெரு மலைபோல் எதிரில் வந்து நிற்கிறான். சிறுவர்கள் அஞ்சுகிறார்கள். அசுரன் ஓடி வந்து மூக்குகளால் கண்ணனை எடுத்து விழுங்குகிறான். நெருப்புப்போல் எரிக்கும் பரமனை விழுங்கி வயிற்றில் தாங்க முடியாமல் அவன் கீழே உமிழ்ந்துவிடுகிறான். பரமனுக்குச் சிறு ஆபத்தும் உண்டாகவில்லை. மறு படியும் அவ்வரக்கன் ஓடிவந்து கண்ணனைக் கொல்ல முயல்கிறான். கண்ணன் மிக்க கோபத்துடன் கொக்கின் இரு அலகுகளையும் பிளந்து தூரத்தில் எறிகிறான். சிறுவர்கள் இச்செய்தியை யசோதை யிடம் தெரிவிக்கிறார்கள். இன்னும் பரமனின் பரத் துவத்தை எவரும் அறியவில்லை. பகவன் மாயை யால் மூடப்பட்டிருக்கும் இவர்கள், பாவம்! இதை எவ்வாறு அறியப் போகிறார்கள்!

## அகாசுரனை வதைத்த வரலாறு

கண்ணபிரானுக்கு ஐந்தாவது வயது நடக்கிறது. ஒருநாள், அவன் அதிகாலையில் எழுந்திருந்து தனது

நண்பர்களை எழுப்பிக்கொண்டு கன்றுகளை மேய்க்கக் காடு சென்றான். அங்கு வெகு சந்தோஷத்தோடு இவர்கள் விளையாடுகிறார்கள். ஒருவன் மரத்தில் உட்கார்ந்து வேணுகானம் செய்கிறான். மற்றொருவன் மரத்திலிருந்து தொங்கும் குரங்கின் வாலை இழுக்கிறான். இன்னும் ஒருவன் குரங்குகளோடு மரமேறி, இவைகளுக்கு அழகு காண்பிக்கிறான். மரத்தில் குரங்குபோல் தலை கீழாகத் தொங்குகிறான். இப்படியெல்லாம் இவர்கள் சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருக்கும் போது அகாசுரன் என்பவன் அநேக யோசனை தூரமுள்ள பெரும்பாம்பின் வடிவோடு குகைபோல் வாயைத் திறந்துகொண்டு இவர்களின் வழியை அடைத்துக் கொண்டு நிற்கிறான். கண்ணனைத் தவிர மற்ற எல்லா சிறுவர்களும் கன்றுகளும் வழி இராமல் அவ்வசுரனின் வாய்மூலம் அவன் வயிற்றுள் சென்றுவிடுகிறார்கள். இதைக் கண்ட கண்ணனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. நம்மை நம்பிவந்த இவர்களை விட்டு விட்டு நாம் எவ்வாறு தனியே வீடு செல்வது என்று ஆலோசித்துத் தானும் அவ்வரக்கனின் வயிற்றில் நுழைந்து மலைபோல் பெரும் உருவத்தை எடுக்கிறான். அரக்கனால் வேதனை தாங்க முடியவில்லை. அவன் உடல் வெடித்துப் பிராணன் வெளிக்கிளம்பியது. கண்ணபிரான் சிறுவர்களையும் கனறுகளையும் மீட்டு அதன் வழியாக வெளிவந்தான். கொடுஞ் செயல்களைச் செய்த இவ்வசுரனுக்கும் நற்கதி கிடைத்தது.

## கன்றுகளை மீட்டல்

சிறுவர்கள் அகாசுரனிடமிருந்து தப்பினார்கள். கண்ணபிரான் அவர்களை அழைத்துக்கொண்டு நதிக்கரைக்கு வருகிறான். பொழுது உச்சியடைந்தது. அவர்களுக்குப் பசி தாங்கமுடியவில்லை. "கன்றுகள் நதியில் நீர்ப்பருகி சமீபத்திலேயே மேய்ந்துகொண்டிருக்கட்டும். நாமும் இவ்வழகிய மணலில் உட்கார்ந்து உல்லாஸமாக உண்டு பின் வீடு செல்வோம்" என்று எல்லோரும் தீர்மானித்தனர். கண்ணபிரான் நடுவே உட்காருகிறான். மற்றவர்கள் அவனைச் சுற்றி உட்கார்ந்து அவரவர்கள் கொண்டு வந்த போஜனத்தைக் கூடி உண்கிறார்கள். பரமனுடன்கூடி உண்ணும் பாக்யம் இவ்விடைச் சிறுவர்க்கல்லவா கிடைத்தது? அப்பொழுது பிரம்மா, பரமனின் மற்றொரு லீலையைக் காண அவாவுடையவராய் அங்கு வந்து கன்றுகளைத் தன் இருப்பிடம் மாயமாய்க் கொண்டு செல்கிறார். சாப்பிட்டுக் கொண்டே கண்ணன் கன்றுகளைத் திரும்பிப் பார்க்கிறான். அவைகள் கண்ணுக்கெட்டியவரை காணவில்லை. சிறுவர்களை அங்கேயே இருக்கச்சொல்லி அவைகளைத் தேடிச் செல்கிறான் பரமன். அச்சமயம் பிரம்மா இடைச்சிறுவர்களையும் தன்னுடன் கூட்டியழைத்துச் செல்கிறார். கண்ணன் எங்கு தேடியும் கன்றுகளைக் காணாமல் இருப்பிடமே வருகிறான். அங்கு சிறுவர்களைக் காணோம். சற்று சிந்தித்துப் பார்த்து, இது பிரம்மாவின் செயல் என்றறிந்து கொண்டான். அதற்குள் மாலைப் பொழுதாகி விட்டது.

சிறுவர்களையும் கன்றுகளையும்விட்டுத் தனியாக நான் வீட்டிற்குச் சென்றால் அவரவர் தம் தாய்மார்கள் மிக வருந்துவார்கள் என்று கருதி தானே அவ்வளவு சிறுவர்களாகவும், கன்றுகளாகவும் வேடங்கொண்டு கண்ணன் அவர்களுடன் வீடு செல்கிறான். இவ்வாறே ஒரு ஆண்டு கழிந்துவிடுகிறது. ஊரிலுள்ளோர்க்கு இவ்வுண்மை தெரியவில்லை. கன்றுகள் போவதும் வருவதும், சிறுவர்கள் வழக்கம்போல் போவதும் வருவதும், பசுக்கள் பால் கொடுப்பதும் பகவன் மாயையால் அவ்வாறே நடந்து வந்தபடியால் அவர்கள் இவ்வுண்மையை உணரவில்லை. பிரம்மா கன்றுகளையும் சிறுவர்களையும் மறைத்து வைத்து விட்டுத் தன்னிருப்பிடம் செல்கிறார். அங்கு தன் ஆசனத்தில் தன்னைப் போல் ஓர் போலி பிரம்மா உட்கார்ந்திருப்பதையும் அங்குள்ளவர்கள் தன்னை மதியாமலிருப்பதையும் கண்டு இது பகவானின் விசித்திர லீலையே என்றெண்ணிக் கோகுலத்திற்கு வருகிறார். பழையபடி கன்றுகளும் சிறுவர்களும் அங்குக் காணப்பட்டனர். இங்கிருந்து நாம் கவர்ந்த கன்றுகளும் சிறுவர்களும் நம் வசம் இருக்க, இவைகள் இங்குக் காண்பதற்குக் காரணம் யாது என்று சிந்திக்கலானார். கன்றுகளும் சிறுவர்களும் சங்கு, சக்கரம் முதலியவைகளுடன் எல்லாம் பரம்பொருளாகவே பிரம்மாவுக்குத் தோன்றியது. பிரம்மா, இதெல்லாம் பரமனின் மகிமை என்றுணர்ந்து வெட்கப்பட்டு, கவர்ந்தவைகளைத் திருப்பிக் கொடுத்துப் பரமனைத் துதித்துச் சென்றார். மாயக் கன்றுகளும் மாயச் சிறுவர்களும் மாயமாய் மாயனுள் மறைந்தன.

# 5. காளியமர்த்தனம்

நந்தகுமாரனுக்கு ஆறாவது வயது நடக்கின்றது. அவன் காலையில் இடைச் சிறுவர்களுடன் யமுனைக் கருகாமையில் கன்றுகளை மேயவிட்டு மரங்களிலும் செடிகளிலும் தாவி சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருக்கிறான். சூரியன் உச்சிக்கு வந்துவிட்டான். ஆனிமாத வெயில் பிரமாதமாகக் கொளுத்துகிறது. தாகம் தாங்காமல் சிறுவர்களெல்லோரும் கன்றுகளை ஓட்டிக்கொண்டு சமீபத்திலிருந்த மடுவிற்குச் செல்கிறார்கள். காளியம் என்னும் ஆயிரம் தலையுடைய பாம்பு கருடனிடமிருந்து பயந்து தனது மனைவி குழந்தைகளுடன் வெகு நாட்களாக இம்மடுவில் வசித்து வந்தது. இவைகள் இங்கிருப்பதால் ஜலம் முழுவதும் விஷமாகிவிட்டது. குடிப்பதற்கு உபயோகப்படுவதில்லை. ஆகாய மார்க்கமாகப் பறந்து செல்லும் பட்சிகளும் இவ்விஷக் காற்றுபட்டு சுருண்டு இம்மடுவில் விழுவது வழக்கம். இவ்வுண்மையை அறிந்துகொள்ளாமல் இடைச் சிறுவர்களும் கன்றுகளும் ஓடிவந்து இம்மடுவில் ஜலத்தைக் குடித்து உயிரை யிழந்து கரையில் விழுந்து கிடந்தன. இதைக் கண்டான் கண்ணன். மனம் கலங்கியது. உடனே அவன் மிக்க கருணை கொண்டு தனது கடைக்கண் பார்வையால் கன்றுகளையும் சிறுவர்களையும் உயிரடையச் செய்கிறான். பிள்ளைகளுக்கு மிகுந்த வியப்பு உண்டாயிற்று.

கோகுலவாசிகளுக்கும் இப்பாம்பினிடமிருந்து தீங்கு வராமல் காக்க அப்பாம்பைக் கொல்ல எண்ணங்கொண்டு நந்தகுமாரன் அருகாமையிலிருந்த கடம்ப மரத்தின் மேல் ஏறி மடுவில் குதிக்கிறான். ஜலம் மேல் கிளம்பி கரை மூலமாக வெளியில் வழிகிறது. அதில் இருந்த அந்நாகமும் கோபங் கொண்டு கண்ணனை வளைந்து இறுகக் கட்டிவிடுகின்றது. கண்ணனும் கை கால்களை அசைக்க முடியாமல் கட்டுண்டு கிடக்கிறான். கரையிலுள்ள இடைப்பிள்ளைகள் இதைக்கண்டு புலம்புகின்றனர். கண்ணனுக்கு இப்படிப்பட்ட ஆபத்து வந்துவிட்டதேயென்று ஒருவருக்கொருவர் துக்கத்தினால் மோதிக் கொள்ளுகின்றனர். பசுக்களும் கன்றுகளும் கண்ணனைக் கண்டு தம் கண்களால் கண்ணீரை விட்டு ஒன்றுங்கூற இயலாமல் தம் வருத்தக் குறிப்பைத் தெரிவித்தன. இப்படியே சிறிது நேரஞ் சென்றது. பாம்பும் இவனை விட்டுவிடவில்லை. துக்கம் தாங்க மாட்டாமல் பிள்ளைகளெல்லாம் மூர்ச்சையடைந்து கரையில் பிணங்கள்போல் விழுந்துவிட்டனர். இதே சமயத்தில் இடைச்சேரியில் சில ஆபத்துக் குறிகள் உண்டாயின. இதைக் கண்ட ஆயர்கள் கன்றுகளை மேய்க்கச் சென்றிருக்கும் கண்ணனுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்றெண்ணிக் குழந்தைகள் முதல் வயோதிகர்வரை கோகுலவாசிகள் அனைவரும் மாடுகள் சென்ற அடையாளத்தைத் தெரிந்துக் கொண்டே மடுவிற்கு வருகின்றார்கள்.

கண்ணன் பாம்பிடம் அகப்பட்டுக் கிடக்கிறான். சிறுவர்களெல்லாம் கீழே மடிந்து கிடக்கிறார்கள்.

இதைக் கண்ட அவர்களுக்கு ஒன்றுந் தோன்ற வில்லை. உலகம் முழுவதும் அவர்களுக்குச் சூன்ய மாகவே தோன்றிற்று. என்ன செய்வதென்றறியா மல் சிறிது நேரம் கண்ணீர் விட்டுக் கொண்டு பைத்தியம் பிடித்தவர்கள் போல் நிற்கிறார்கள். ''என் அருமைப் புதல்வன் இப்படி இருக்க நான் இப்பூமியிலிருந்துதான் என்ன பயன்?'' என்று யசோதை தானும் மடுவில் விழுந்து பிராணனை விட முயல்கிறாள். அனைவரும் அவளைத் தடுக்கிறார் கள். அப்பொழுது மாயக் கண்ணன் அப்பாம்பைக் கொல்ல எண்ணங்கொண்டு பெரும் உருவத்தை எடுக்கிறான். இவனை வளைத்து கட்டமுடியாமல் அந்நாகமும் கண்ணனை விட்டுத் தனது ஆயிரம் படங்களையும் எடுத்துக் கொண்டு சீறுகிறது. மாயக் கண்ணன் அதன் படங்களின்மேல் ஏறி அழகாகக் கூத்தாடுகிறான். இவனைத் தன் படங்களால் தாங்க மாட்டாத அப்பாம்பு தனது வாய்களால் இரத்தத்தையும் விஷத்தையும் கக்கி, இறக்கும் தறுவாயை அடைந்தது. இதைக் கண்ட நாகபத் தினிகள் கண்ணபிரானைப் பரமனென்றறிந்து, தனது நாதனைக் காக்க அவனைச் சரணடைகிறார் கள். சரணாகத் ரக்ஷகனான பரமன் அந்நாகத்தை விட்டுக் கீழே இறங்கி அதை இம்மடுவை விட்டு இரமணகம் என்னும் தீவுக்குப் போகுமாறு பணிக் கிறான். அன்று முதல் மடுவிலுள்ள ஜலம் சுத்தமாய் அங்குள்ளவர்களுக்கு மிகவும் பயனளிக்கக்கூடியதாய் இருந்தது.

யசோதை முதலியோர் கண்ணனை வாரி யணைத்துக் களிக்கிறார்கள்.

## பிரலம்பாசுரன் மடிந்தது

கண்ணனுக்கு ஏழாவது வயது வந்தது. அரையில் பீதாம்பரம். இடுப்பில் ஓர்புறம் புல்லாங்குழல். மற்றொரு புறத்தில் மாடு மேய்க்கும் கோல். தோளில் கம்பளம். தலையில் மயில் தோகை. கால்களில் சதங்கை. கைகளில் பொன் வளைகள். இக்கோலத்துடன் மாயக் கண்ணன் சிறுவர்களோடு காட்டில் கன்றுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான். வன சோபையை என்னவென்று சொல்வோம். எங்கும் மரங்களில் மலர்கள் மலர்ந்திருக்கின்றன. எங்கும் தடாகங்களில் தாமரைகள் மதுவைப் பெருக்குகின்றன. மயில்கள் களித்து ஆடுகின்றன. குயில்கள் மாந்தளிர்களைத் தின்று இனிது பாடுகின்றன. அழகிய தென்றல் உயிர்கட்கு ஆனந்தம் உண்டாக்க மிருதுவாய் வீசிக்கொண்டிருக்கிறது. மலையருவிகளிலிருந்து கிளம்பிய நீர்த்துளிகள் காற்றோடு கலந்து மிக்க குளிர்ச்சியை அளிக்கின்றன. கிரீஷ்ம காலமும் பகவன் மகிமையால் வசந்தம் மிக்க மகிழ்ச்சியை அளித்தது. சிறுவர்களும் கண்ணனும் ஒன்றுகூடி விளையாடுகிறார்கள்.

ஒரு சமயம் கண்ணன் அழகாய் நடனமாடுவான். அப்பொழுது மற்றோர் இனிமையாகப் பாடுவர். மற்றோர் சமயம் சிறுவர்களை ஆடவிட்டு இனிமை மிக்க வேணுகானம் செய்வான். ஒருவருக்கொருவர்

கனிகளைப் பறித்து அடித்துக் கொண்டு விளையாடு வார்கள். ஒருவனுடைய கண்ணை மூடிவிட்டு மற்றோர் ஓடி மறைவார்கள். ஒருவர்க்கொருவர் பரிகாசஞ் செய்வார்கள். பசுக்களைப்போல் தவழ்ந்து நடப்பார்கள். பட்சிகளைப் போல் உயரப் பறக்க முயல்வார்கள். இப்படி அவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும்போது பிரலம்பன் என்ற ஓர் அரக்கன் இடைச் சிறுவன் வேஷம் பூண்டு அவர்களுடன் விளையாட வருகிறான். கண்ணனும் அவனைக் கொல்ல எண்ணங்கொண்டு தங்களுடன் விளையாடச் சேர்த்துக்கொள்ளுகிறான். கண்ணனுடைய கட்கி. ராமனுடைய கட்சி என்று பிரித்துச் சில சிறுவர்களை கண்ணனுடைய கட்சியிலேயும் மற்றவர்களை இராமனுடைய கட்சியிலேயும் சேர்த்து, எந்தக் கட்சிக்காரர்கள் விளையாட்டில் தோற்றுவிடுகிறார்களோ அவர்கள் ஜயித்த கட்சிக் காரர்களை ஒவ்வொருவராகத் தோளில் சுமந்து செல்லவேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டு விளையாடத் தொடங்கினர். அப்பொழுது கண்ணன் கட்சி தோற்றுவிட்டது. இவர்கள் ஒவ்வொருவராக ராமனுடைய கட்சியில் சேர்ந்த ஒவ்வொருவரையும் தோளிற் சுமந்து சென்றனர். அப்பொழுது கண்ணனுடைய கட்சியிற் சேர்ந்த இவ்வசுரன் பலராமனைத் தோளில் சுமந்து வெகுதூரம் சென்று கோர ரூபமெடுத்து, பலராமனைக் கொல்ல முயல்கிறான். பலராமனும் தனது ஓங்கிய கைகளால் அவனை அடித்துக் கொன்றுவிடுகிறான்.

## காட்டுத் தீயை விழுங்கியது

பிரலம்பாசுரனைக் கொன்ற பிறகும் சிறுவர்கள் வீடு செல்லாமல் காட்டிலேயே விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். பசுக்கள் மேய்ந்துகொண்டே கண்ணுக்கெட்டாத தூரம் சென்றுவிடுகின்றன. சிறுவர்கள் தமது விளையாட்டை முடித்துக்கொண்டு வீடு செல்ல, கன்றுகளைத் திரும்பிப் பார்க்கிறார்கள். அவைகள் கண்ணுக்கெட்டியவரை புலப்படவில்லை. அனைவரும் ஆங்காங்கு சென்று தேடியும் அவைகளைக் காணோம். கடைசியில் கண்ணன் மரத்தின் மேலேறி உரத்த குரலில் பெயரிட்டு அவைகளைக் கூப்பிடுகிறான். இவன் குரலை அறிந்த பசுக்கள் வெகு தூரத்திலிருந்து பதில் குரல் கொடுத்தன. இச்சமயம் காட்டுத்தீ திடீரென்று சுற்றிலும் தோன்றி பசுக்களையும் சிறுவர்களையும் வாட்டுகிறது. இதன் உபத்திரவம் தாங்காமல் அவர்கள் கண்ணனைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறார்கள். பரமனும் இவர்களிடம் கண்களை மூடிக்கொள்ளுமாறு சொல்லி விட்டு அத் தீயையெடுத்து விழுங்கிவிடுகிறான். உடனே அனைவரும் பசுக்களோடு வீடு செல்லுகிறார்கள். இவ்வாறு கண்ணனின் பல விசித்திர லீலைகளைக் கண்ட சிறுவர்களுக்கும் கோகுலவாசிகளுக்கும் ''கண்ணன் சாதாரணக் குழந்தையல்ல, பரமனின் அவதாரமே'' என்ற எண்ணம் இப்பொழுது தான் சிறிதளவு உண்டாயிற்று.

# 6. குழலோசை

மழைக்காலங் கழிந்து சரத்காலம் தொடங்கிற்று. ஓடை, நதி முதலியவைகளில் ஜலம் முத்துக்கள் போல் தெளிந்திருக்கின்றது. ஆகாயம் மேகமின்றிச் சுத்தமாய் விளங்குகின்றது.

மலைகளிலிருந்து கலக்கமின்றி நீர் பெருகுகின்றது. பூமியில் சேறெல்லாம் உலர்ந்து வருகின்றன. குடியானவர்கள் வயல்களில் நீரைப் பாயவிடுகின்றனர். ஆகாயத்தில் சந்திரன் நட்சத்திரங்களுடன் சோபையுடன் விளங்குகிறான். இதுவரை மழையால் தடைபட்டிருந்த வியாபாரிகள் வழக்கம் போல் வண்டிகளை ஓட்டிக்கொண்டு வியாபாரம் செய்யச் செல்கின்றார்கள். இச் சரத்காலம் அங்குள்ளவர்களுக்கு மிக்க சந்தோஷத்தை அளிக்கக் கூடியதாய் இருந்தது. கண்ணன் வழக்கம்போல் காட்டில் கோபர்களோடு பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கிறான். சிறுவர்கள் அவனைச் சுற்றி வட்டமாய் நிற்கிறார்கள். நடுவில் மாயக் கண்ணன் புல்லாங்குழலைக் கையில் ஏந்தி வலது காலை இடது கால்மேல் ஒற்றச் செய்து வெகு அழகாக நிற்கிறான். தலையில் மயில் தோகை. இடுப்பில் பீதாம்பரம். கழுத்தில் வனமாலை. திருவடி முதல் திருமுடி வரை இரத்னாபரணங்கள். குழலை அதரத்தில் வைத்து, இரு கரங்களையும் ஊன்றி அழகாகக்

கானாமிர்தம் வழங்குகிறான். இனிய குழலோ எல்லாத் திசைகளிலும் பரவுகிறது. குழலோசையின் இனிமைதான் என்னே!

புல் மேய்ந்துகொண்டிருக்கும் பசுக்கள் இத்திவ்ய கீதத்தில் மயங்கி ஆனந்த நீர் பெருக்கி சித்திரத் தைப் போல் அப்படியே நின்றன. கன்றுகள் பசுக் களின் மடிகளில் வாய் வைத்து பால் குடிக்காமல் வாயைத் திறந்து இவ்வரிய கீதத்தில் ஈடுபட்டு நின்றன. பசுக்களின் காம்புகளினின்றும் பால் மழைத்தாரைபோல் கீழே பெருகுகின்றது. மரங் களெல்லாம் இவ்வோசையில் மயங்கித் தம்மையு மறியாது ஆனந்த நீர் பெருக்கின. மலர்களைக் கீழே சொரிந்தன. பட்ட மரங்களும் முன்போல் தளிர்த்த மரங்களாயின. குகைகளிலும் மலை களிலும் இருந்த மயில்கள் தம்மை உணராது தோகையை விரித்தாடுகின்றன. மான்கள் மதி மயங்கி கண்ணனை நோக்கிக் கொண்டே மெய் மறந்து நிற்கின்றன. ஆகாயத்திற் செல்லும் தேவ கன்னிகைகள் மன்மத வேதனையால் என்ன செய்வ தென்றறியாமல் தவிக்கிறார்கள். பட்சிகள் இதைப் பருகி ஒன்றுமறியாது பித்துப் பிடித்தாற்போல் ஆயின. ஆங்காங்கு காடுகளிலும் குகைகளிலும் அமர்ந்திருந்த முனிவர்கள் இவ்வேணுகானத்தில் ஈடு பாடுடையவராய் அதனில் மூழ்கித் தங்கள் தியானத் தைச் சிறிதுநேரம் நிறுத்திக் கொண்டனர்.

கோகுலத்திலுள்ள இடைச்சிமார்கள் இதைக் கேட்டு பைத்தியம் பிடித்தாற்போல் அலைகிறார்

கள். என்ன செய்வதென்று உணரவில்லை. வீட்டு வேலைகளை யெல்லாம் நிறுத்திவிடுகிறார்கள். கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு கண்ணனை நோக்கிய வண்ணம் அப்படியே தங்களை மறந்து நிற்கிறார்கள். உலக முழுவதுமே மாயனின் திவ்ய வேணுகானத்தில் மயங்கி அசைவற்று நின்று விட்டது. இவ்வழகிய கானத்தை நேரில் கேட்டோர் என்ன பாக்கியம் தான் செய்தார்களோ? அங் கிருந்த மரங்களுமல்லவா இதைக் கேட்க பாக்கியம் பெற்றிருந்தன! அதுவுமன்றோ நமக்குக் கிடைக்க வில்லை! இவ்வினிய குழலோசையைக் கேட்டுக் களிக்கும் பாக்கியம் என்றுதான் நமக்குக் கிடைக் குமோ?

## சேலைகளை

உத்தமமான மார்கழி மாதம். கண்ணன் தனது லீலைகளால் கோபியர் தம் மனதைக் கொள்ளை கொள்ளுகிறான். இடைச் சிறுமிகட்கும் பருவ வயது வந்தது. அவர்களும் கண்ணனுடைய ஜகன் மோகனாகாரம் கண்டு அவனிடத்தில் காதல் கொள் ளுகின்றனர். அவனைக் கணவனாக அடைந்து அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. அதற்கு வழி என்னவென்று யோசிக்கிறார்கள். காத்தியாயனி யென்னும் நோன்பு நோற்றால் நம் விருப்பம் கைகூடுமென்று கருதி தோழிமார் அனை வரையும் எழுப்பிக்கொண்டு எல்லோரும் கூடி யமுனைக்குச் சென்று நீராடி இவ்விரதத்தைச்

செய்துவந்தனர். இப்படியே ஒருமாதம் கழிந்தது. கடைசி நாள் சிறுமிகள் அதிகாலையில் எழுந்து கண்ணனுடைய லீலைகளை வாயாரப் பாடிக் கொண்டு யமுனைக்குச் சென்று தம்முடைய சேலை களைக் கரையில் அவிழ்த்து வைத்துவிட்டு அதில் நீராடுகின்றார்கள். பக்த பராதீனனான கண்ணன் அதை அறிந்து தனது தோழர்களுடன் யமுனைக் கரைக்கு வந்தான். ஜலக்கிரீடையில் ஈடுபட்டிருந்த அப்பெண்மணிகள் அவன் வந்திருப்பதை அறிய வில்லை. அவன் சமயம் பார்த்து, கரையில் வைத் திருந்த சேலைகளையெல்லாம் எடுத்துக்கொண்டு கடம்ப மரத்தின் மேலேறி உட்கார்ந்தான்.

அவர்கள் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு திரும்பிப் பார்க்கிறார்கள். சேலையைக் காணோம். கண்ணன் சேலைகளை வைத்துக்கொண்டு மரத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறான். இதைக் கண்ட கோபி யருக்கு ஒருபுறம் வெட்கம், மற்றொருபுறம் வெகு நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கண்ணன் வந்துவிட்டான்; நம்முடைய விரதத்திற்குப் பல னேற்பட்டது என்று சந்தோஷம். வெட்கத்தால் ஒன்றும் சொல்லாமல் அப்படியே ஜலத்தில் நிற்கிறார் கள். கண்ணன் மரத்திலிருந்து புன்சிரிப்புடன், ''பெண்மணிகாள்! உங்கள் சேலை வேண்டுமா னால் என்னிடம் வந்து வாங்கிக் கொள்ளுங்கள். ஏன் வெட்கப்படுகிறீர்கள்?'' என்றான். சிறுமிகள் ஜலத்திலிருந்தவாறே ''கண்ணா! நீ நந்தகோபனு டைய புதல்வன். நீயே எங்களெல்லோருக்கும்

தலைவன். உனக்குத் தெரியாத தர்மம் கிடையாது. நாங்கள் ஆடையின்றி எவ்வாறு உன்னிடம் வந்து கேட்பது? நாங்கள் உனக்கு அடிமையல்லவா? உனக்கு வேறு எது வேண்டுமானாலும் செய்கிறோம். ஆடைகளை மாத்திரம் கொடுத்துவிடு. இல்லா விடில் நந்தகோபனிடம் இதைச்சொல்லிவிடுவோம்'' என்று கண்ணனை வேண்டினார்கள். ''நீங்கள் எனக்கு அடிமையாக இருந்தால் நான் சொன்னபடி யன்றோ கேட்கவேண்டும்! என்னிடம் வந்து கேளுங் கள்; ஆடைகளைக் கொடுத்துவிடுகிறேன்'' என்றான் கண்ணன். அப்படியே கோபியர்கள் கரையேறி வந்து கேட்கிறார்கள்.

''என்னை அடைவதற்காக நீங்கள் இவ்விரதத் தைச் செய்கிறீர்கள். ஆடையின்றி புண்ணிய நதி யில் நீங்கள் நீராடியதால் உங்களுடைய விரதத் திற்கு மாசு ஏற்பட்டுவிட்டது. பரமனான என்னை இருகரமும் கூப்பிப் பணிந்தால் உங்கள் விரதம் நிறைவேறும். ஆகவே என்னைப் பணிந்து ஆடை களை வாங்கிக் கொண்டு போங்கள்'' என்றான் பரமன். விரதபங்கத்திற்குப் பயந்து கோபியர்கள் ஒரு கரத்தால் அவனைப் பணிகிறார்கள். ''ஒரு கையால் பகவானை பணிந்தால் அவனுடைய கையை வெட்டிவிட வேண்டுமென்பது சாஸ்திர முறை. ஆகவே இருகைகளாலும் என்னைபணிந்து ஆடைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றான் கண்ணன். பாவம்! பெண்களுக்கு வெட்கம். ஆயினும் தமது விரதம் பூர்த்தியாகும் பொருட்டு இரு

கரங்களையும் கூப்பி, ஆடைகளைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

இவ்வளவு நடந்தபோதிலும் கண்ணனிடத்தில் இவர்களுக்குச் சிறிதும் கோபம் உண்டாகவில்லை. அவனுடன் கூடி விளையாடக் காத்திருக்கும் கோபிகளுக்கு இது மிக்க சந்தோஷத்தையல்லவோ அளித்தது. அவர்களுக்குச் சேலைகள் கிடைத்துவிட்டன. ஆனாலும் அவர்கள் அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. அவனுடன் கூடி விளையாட வேண்டுமென்னும் ஆவலுடன் அவனைக் கடைக் கண்களால் நோக்கித் தலை குனிந்து நிற்கிறார்கள். சர்வக்ஞனான கண்ணன் அவர்கள் விருப்பத்தை யறிந்து, ''பெண்மணிகாள்! நீங்கள் எதற்காக இவ்விரதத்தைச் செய்தீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். வரும் இரவுகளில் நீங்கள் என்னுடன் கூடி விளையாடி உங்கள் தவப் பலனை அடையப் போகிறீர்கள்'' என்று சொல்லி இவர்களைத் திருப்பி விடுகிறான். கோபியர், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் தாம் செய்த விரதத்திற்கும் பயன் கிடைத்துவிட்டதென்று எண்ணி வீடு சேர்ந்தனர்.

## கோவர்த்தனத்தைக் குடையாய் ஏந்தியது

கோகுலவாசிகள், மழை பெய்து பசுக்களும், கன்றுகளும் சுபீட்சமாக இருப்பதற்காக வருடத்திற்கு ஒரு முறை இந்திரனுக்குப் பூஜை செய்வது வழக்கம். இது வெகு நாட்களாக அங்கு நடந்து வந்தது.

வழக்கம்போல், அவ்வருஷமும் எல்லோரும் ஒன்று கூடி இந்திர பூஜை செய்யத் தொடங்கினார்கள். எங்கும் ஒரே பரபரப்பு. வீதிகள் தோறும் தோரணங் கள். எங்கும் வாத்திய முழக்கம். வீடுகளில் நைவேத் தியம் செய்வதற்காக அன்னம், பாயஸம் முதலிய வைகளை சமைக்கின்றனர். இக்கோலாகலத்தைப் பார்த்தான் கண்ணன். இவ்விசேட நிகழ்ச்சிக்குக் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. அங்கு கூடி யிருந்த நந்தன் முதலிய கோப விருத்தர்களை இதற்குக் காரணம் என்ன வென்று கேட்டான். ''வருஷ தேவதையான இந்திரனுக்குப் பூஜை செய் தால் நன்றாக மழை பெய்து பசு முதலியவைகள் சுபிட்சமாய் இருக்கும். இதை நாங்கள் வெகு நாட் களாகவே செய்து வருகின்றோம்'' என்று அவர்கள் பதிலளித்தார்கள்.

கேட்ட கண்ணன், அவர்களைப் பார்த்து, ''பெரியோர்களே! உலகில் எல்லாம் அவர வர்களின் வினையின் பயனாகவே நடந்துவருகிறது. அவரவர் செய்த வினைக்கொத்து பலனளிக்கப் பகவான் ஒருவனிருக்க இந்திரனொருவனால் என்ன செய்யமுடியும்? உங்கள் கர்மத்தை மாற்றி அவன் புதிதாக என்ன செய்துவிடப்போகிறான்? உங்கள் கர்ம வசத்தால் மழைபெய்ய வேண்டுமென்றிருந்தால் இந்திரன் தடை செய்ததால் அது நின்றுவிடப் போகிறதா? அல்லது உங்கள் கர்ம வசத்தால் மழை பெய்ய வேண்டாமென்றிருந்தால் இந்திரன் மனது வைத்ததனால் மாத்திரம் அது பெய்துவிடப் போகி

றதா? சந்திர சூரியர்களைப்போல் பரமனின் கட்டளைப்படி மேகங்கள் சித்தமாகத் தமது வேலைகளைச் செய்ய இருக்கும்போது உங்களால் என்ன ஆகப் போகிறது? இந்திரன்தான் இதில் நடுவில் என்ன செய்யப் போகிறான்? ஏன் உங்களுக்கு இதில் வீண் மோகம்?

தவிர நாம் என்னமோ காட்டிலேயே வசித்து வருகிறோம். நமக்குப் பசுக்களே செல்வம். அவைகளும் மலை, காடு முதலியவைகளில் மேய்ந்து ஜீவித்து வருகின்றன. ஆகவே பசுக்களுக்கும் மலை, காடு முதலியவைகளுக்கும் பிராமணர்களுக்கும் நீங்கள் பூஜை செய்தால் இதுவே போதுமானது. இப்பொழுது இந்திர பூஜைக்குச் சித்தமாயிருக்கும் பொருள்களைக் கொண்டு இதைச் செய்து முடியுங்கள். இதுவே உசிதம் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்று பதிலளித்தான். கண்ணன் சிறுவனாக இருந்தபோதிலும் அவன் சொல்வது மிக உசிதமே என்றெண்ணி கோபவிருத்தர்கள் அவ்வாறே செய்யத் தொடங்கினார்கள். பிராமணர்களுக்கும் பசுக்களுக்கும் விசேஷமாகப் பூஜை நடந்தது. பிறகு எல்லோரும் ஒன்றுகூடி கோவர்த்தன பர்வதத்திற்குச் சென்று அதைப் பூஜித்து அன்னம் முதலியவற்றை நைவேத்தியம் செய்தனர். கண்ணபிரான் இவர்களுடன் இருந்தவாறே மற்றோர் உருவமெடுத்து நைவேத்தியங்களைப் புசிக்கிறான். கோபர்களெல்லோரும் இதைக்கண்டு சந்தோஷமடைந்து வீடு திரும்புகிறார்கள்.

## இந்திரனின் கோபம்

தனக்குக் கண்ணனால் ஏற்பட்ட அவமானத்தைப் பார்த்தான் இந்திரன். அடங்காத கோபம் கொண்டான். ஒன்றுமறியாத இடைப் பையன் தேவர்களுக்குத் தலைவனான என்னையா அவமானஞ் செய்வது என்று சீறுகிறான். கண்ணன் பரம புருஷன் என்பதை இந்திரனும் உணரவில்லை. பகவன் மாயை யாரைத்தான் விட்டது! அந்தோ! எப்படியாகிலும் கோகுலம் முழுவதையும் அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று எண்ணங் கொண்டு இந்திரன் சம்வர்த்தம் முதலிய பெரிய மேகக்கூட்டங் களை ஏவி, கல் மழைகளைப் பெய்து கோகுலத்தை நாசஞ் செய்து வருமாறு கட்டளையிடுகிறான். கோகுலத்தில் எங்கு பார்த்தாலும் விடாமழை. பெரும் இடி முழக்கம். சுழல் காற்று எங்கும் வீசியது. யானையின் துதிக்கையளவு ஒவ்வொரு மழைத் தாரையும் விழுந்தது. கற்களையெல்லாம் வாரி இறைக்கின்றது. மகாப் பிரளயம் உண்டாகியதுபோல் ஆகிவிட்டது. இத்தொல்லையைத் தாங்க முடியாமல் கோகுலவாசிகள் தவிக்கிறார்கள். குழந்தைகள் எல்லாம குளிர் தாங்காது அழுகின்றன. பசு மாடுகள் யாவும் மழையைத் தாங்காமல் கதறுகின்றன. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. கடைசியாக எல்லோரும் கண்ணனிடத்தில் கத்திக் கொண்டு சரணடைகின்றார்கள். சரணாகத ரட்சகனான அவனும் இது இந்திரன் செய்த வேலை என்றுணர்ந்து அவனுடைய கர்வத்தையடக்கத்

திருவுள்ளம் பற்றி கோவர்த்தனம் என்னும் பெரிய மலையைப் பிடுங்கி தனது இடது கைச் சுண்டு விரலால் அதைக் குடைபோல் தூக்கிப் பிடிக்கிறான்.

கோகுலவாசிகளெல்லோரும் பசு மாடுகளோடு அதனுட்புகுந்து கண்ணபிரானின் மகிமையால் பசி தாகமின்றிச் சுகமாக இருந்து வருகிறார்கள். ஏழு நாட்கள்வரை சிறிதும் விடாமல் மழை பெய்கிறது. வைத்த காலையும் வைத்த கையையும் அசைக்காமல் கண்ணன் அம்மலையை விரலில் ஏந்தி நிற்கிறான். இதைப் பார்த்தான் இந்திரன். இனி நம் முயற்சி கள் வீண் என்று மழையை நிறுத்தி விடுகிறான். மழை நின்றபின் அங்கிருந்த எல்லோரையும் தூரே செல்லச் சொல்லி சிறிதும் சிரமமின்றிக் கண்ணன் அம்மலையை விளையாட்டாகக் கீழே வைத்து விடு கிறான். அனைவரும் ஒருங்கு கூடி வீடு செல் கிறார்கள். இதுவரை கண்ணனின் பரத்துவத்தைக் கண்டு கொள்ளாத இடையர்களுக்கு இவ்வரிய செயலைக் கண்ட பிறகுதான் அவன் பரம புருஷன் என்ற எண்ணம் நிலையாக உண்டாயிற்று. பரமனின் நிலையை உள்ளபடி அறிவதற்குக் குறிப்பிட்ட கால மல்லவோ வரவேண்டியிருக்கின்றது!

## ஸ்ரீ வைகுண்டத்தைக் காட்டியது

உதயமானால் துவாதசி. முதல் நாள் ஏகாதசி உபவாஸம். உதயமான சில விநாடிகளுக்குள் பாரணை செய்யவேண்டிய காலம் வந்துவிடுகிறது. அதைத் தவறாமல் செய்வதற்காக நடு இரவிலேயே எழுந்து நந்தன் யமுனைக்கு நீராடச் சென்றான். வருண தூதனான ஓர் அரக்கன் அசுர வேளையில் நீராடிக் கொண்டிருந்த நந்தனைத் தூக்கிக்கொண்டு

வருணலோகம் போய்விடுகிறான். சூரியோதயம் ஆனபிறகும் நந்தனைக் கோகுலத்தில் காணோம். கோபர்கள் அனைவரும் இதைக் கண்ணனிடம் சொல்லி முறையிட்டார்கள். வருணதூதனால் கொண்டு போகப்பட்டதையறிந்த கண்ணன் வருண லோகமே சென்றான். ஸ்ரீபதியான கண்ணபிரான் நேரில் வந்திருப்பதையறிந்த வருணனுக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாயிற்று. பரமனைப் பலவாறு துதித்து, தன் பிழைகளைப் பொருத்து, நந்தனை அழைத்துச் செல்லுமாறு வேண்டுகிறான் வருணன். அவ்வாறே நந்தனை அழைத்துக் கொண்டு கண்ணன் கோகுலம் வருகிறான்.

நந்தனும் வருண லோகத்தில் நடந்த செய்திகளைக் கோபர்களுக்குத் தெரிவிக்கிறான். எல்லோருக்கும் பரமனின் பரத்துவம் நன்கு தெரிகிறது. ஸ்ரீவைகுந்தத்தைக் காண அவர்கள் ஆவல் கொள்ளுகிறார்கள். அவர்களின் விருப்பத்தையறிந்து கொண்ட கண்ணன் எல்லா உலகங்களைக் காட்டிலும் மேற்பட்டதும், நித்தியானந்தமயமும் பரமயோகிகளாலும் விரும்பத் தகுந்ததும், நித்திய விபூதியென்று சொல்லப்படுவதுமான ஸ்ரீவைகுந்தத்தையும் அங்கு தான் வீற்றிருப்பதையும் அவர்களுக்குக் காண்பித்தான். பரம யோகிகளும் வெகுநாட்களாகக் காண ஆவல் கொண்டிருக்கும் இவ்வுத்தம ஸ்தானத்தை ஒன்றுமறியாத இடையர்களுக்குக் காட்டினான் என்றால் கண்ணனின் கரைபுரண்ட கருணையை நாம் என்னவென்று சொல்லுவோம்! இடையர்களும் முற்பிறவியில் என்ன தவம்தான் செய்தார்களோ? யார் தான் வீண் சிரமப்பட்டு என்ன பயன்? அதிர்ஷ்டம் அல்லவோ நமக்குச் சரியாக இருக்கவேண்டும்? கொடுத்து வைத்தவனுக்குத்தானே எதுவும் கிடைக்கும்!

# 7. கோபிகா லீலை

சரத்காலம். கோபர்கள் ஸ்ரீ வைகுந்தத்தை கண்டது முதல் அதிலேயே ஈடுபட்டு மயங்கிக் கிடக்கிறார்கள். சிறுமிகள் கண்ணனுடன் கூடி விளையாடும் பாக்கியம் எப்பொழுது கிடைக்குமோவென்று அவனையே மனத்தில் கொண்டிருக்கிறார்கள். சூரியனும் மேற்கு மலையில் மறைகிறான். கிழக்குத் திக்கில் சந்திரன் ஜனங்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்திக்கொண்டு உதயமாகிறான். இதைக்கண்டு மலர்கள் மலர்கின்றன. பறவைகளும் மிக்க களிப்புடன் கூவுகின்றன. மயில்கள் தம் தோகையை விரித்து ஆனந்த நடனமாடுகின்றன. பிருந்தாவனத்தின் இயற்கையழகு கண்களைப் பறிக்கின்றது. இதைக் கண்டான் கண்ணன். ஆய்ச்சிகளுடன் கூடி இந்நிலாவில் விளையாட வேண்டுமென்ற எண்ணம் தன்னையும் அறியாது உண்டாயிற்று. குழலைக் கையில் ஏந்தி யமுனைக் கரையை அடைகிறான். அங்கு எங்கும் மணல் பறந்து இருக்கிறது. நடுவில் ஓர் மணற்குன்று. அதைச் சுற்றிலும் மேற்பக்கத்தில் குடை விரித்தாற்போல் கொடிப் பந்தர் இருந்தது. குன்றின்மேல் ஜகன்மோகனாகாரத்துடன் நீலமேக ச்யாமளனாய்க் கண்ணன் நிற்கிறான். உதட்டில் புல்லாங்குழல். இடது கால்மேல் வலது காலைச் சாய்த்து ஒற்றவைத்து கண்டார்கண்கவரும் வண்ணம் இருகைவிரல்களாலும் குழலில் துவாரங்

களை தொட்டுக்கொண்டு கோபியர்தம் மனத்தைப் பறிக்கக் கானாமிருதம் செய்கிறான்.

இவ்வினிய குழலோசை இடைச்சியருடைய செவிகளில் விழுந்தது. இதைக் கேட்ட அவர்களால் மன்மத வேதனை தாங்கமுடியவில்லை. கண்ணனிடம் மயங்கி அவன் இருப்பிடத்திற்கே அனைவரும் ஓடி வருகிறார்கள். அந்தோ! கோபியர்கள் கண்ணனிடம் கொண்டிருந்த காதல்தான் என்னே! இக்குரலைக் கேட்டு பால் கறப்பதையும் விட்டுவிட்டு ஓடி வருகிறாள் ஒருத்தி; அடுப்பில் காய்ந்துகொண்டிருக்கும் பாலை கீழே எடுத்து வைக்காமலேயே ஓடி வருகிறாள் மற்றொருத்தி; தனது கணவனுக்கு உணவு இடுவதையும் நிறுத்திவிட்டு விரைந்து சிலர் ஓடி வருகிறார்கள்; சில பெண்கள் பால் ஊட்டிக் கொண்டிருக்கும் குழந்தைகளையும் விட்டுவிட்டு அலங்கோலமாக ஓடிவருகிறார்கள்; தாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது நடுவில் அதை நிறுத்தி விட்டுத் தலைகால் தெரியாமல் சில பெண்கள் ஓடி வருகின்றார்கள்; தாங்கள் செய்துகொண்டிருந்த அலங்காரங்களை நிறுத்தி, குதிரை வேகத்தில் சிலர் ஓடுகிறார்கள்; அவனைக் காணும் வேகத்தில் காதில் அணியும் ஓலையை மூக்கிலும், மூக்கில் அணியும் மூக்குக்குத்திகளைக் காதிலும், கால் காப்புகளைக் கைகளிலும், கை வளையல்களைக் கால்களிலும், ஒட்டியாணங்களைக் கழுத்திலும், சங்கிலிகளை இடுப்பிலும் இவ்வாறு மாற்றி யணிந்துகொண்டு சிலர் செல்கிறார்கள். கண்ணபிரானின் மனத்தை

மயக்கும் மன்மத உருவத்தில் மயங்கி, வீட்டிலுள்ள வர்கள் தடுப்பதைச் சிறிதும் சட்டை செய்யாமல் மாயமாய் மாயனிடம் ஓடிச் செல்கிறார்கள். ஏதோ சில பெண்களால் மட்டும் வீட்டிலுள்ளோர் வார்த் தையை மீறிச் செல்ல முடியவில்லை. அவர்கள் துக்கம் தாங்கமுடியாது அவனையே மனத்திற் கொண்டு சித்திரம் எழுதினாற்போல் அப்படியே நின்று விடுகிறார்கள். தன்னை சுற்றி நின்று கொண்டு, தனது வடிவழகில் மயங்கித் தன்னையே பார்த்துக்கொண்டிருக்கும் பெண்களைக் கடைக் கண்களால் நோக்குகிறான் பரமன். அவனுக்கு மிக்க க்கிழ்ச்சி. புன்னகை செய்கிறான்.

## பெண்மணிகளுக்கு புத்திமதி

அப்பெண்மணிகளின் உண்மைக் காதலை அறிய ஆவல்கொண்டு அவர்களைப் பார்த்து, ''கோபியர்காள்! உங்களுக்கு நல்வரவு. எங்கு நடுநிசியில் தனியாக இவ்வளவு தூரம் வந்தீர்கள்? புலி கரடி முதலிய பல துஷ்ட மிருகங்கள் இங்கு வசிக்குமே? சீக்கிரமே உங்கள் வீடு சேருங்கள். தவிர வீட்டிலுள்ளவர்கள். உங்களைக் காணாமல் தேடி அலைவார்கள், இளங் குழந்தைகள் பால் குடிக்க நினைந்து அழுதுகொண்டிருக்கும். நீங்கள் என்னமோ இல்வளவு தூரம் தனியாக வரவும் வந் தீர்கள். இவ்வனத்தின் அழகைக் கண்டு, சீக்கிரமே வீடுபோய்ச் சேருங்கள். நீங்கள் என்னிடம் வைத் திருக்கும் காதலை நான் நன்கு அறிவேன். இது

எனக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. கணவனுக்குப் பணி செய்வதே பெண்களுக்கு உத்தமமான தர்மம். அதுவே நன்மையை அளிக்கக் கூடியது. கணவன் குருடனாயிருந்தாலும், குரூபியாயிருந்தாலும், சாமர்த்தியமற்றவனாயிருந்தாலும், எப்படியாக இருந்தபோதிலும் அவனை அன்புடன் உபசரிப்பதே உங்கள் கடமை. ஆகவே ஆவலுடன் உங்கள் வரவை எதிர்பார்க்கும் கணவர்களுடன் கூடிக் காலத்தைக் கழியுங்கள். வீணாக என்னிடம் ஏன் காதல் கொள்ளுகின்றீர்கள் ? என்னுடைய கலியாண குணங்களை வாயாரப் பாடுவதாலும், என்னைக் கண்குளிரக் காண்பதாலும், என்னை அன்புடன் தியானிப்பதாலுமே நான் அதைச் செய்வோர்களிடம் மிகப் பிரீதி கொள்ளுகிறேன். அப்படியிருக்க, என்னுடன் கூடி விளையாடுவதில் என்ன விசேஷம் ? அதனால் நான் ஏதாவது உங்களிடம் அதிக ப்ரீதி கொள்ளப் போகிறேனா ?'' என்று மாயப் பேச்சுக்களால் மயக்குகிறான்.

இதெல்லாம் கேட்ட ஆய்ச்சியர்க்கு நாராசமாய் இருந்தது பாவம், துக்கம் தாங்க முடியவில்லை. அவனை விட்டுப் போகமுடியாமல் அப்படியே தலை குனிந்து நின்றுகொண்டு, ''கண்ணா ! நீ பரம புருஷன். உன்னுடன் கூடி விளையாட நாங்கள் ஆவல் கொண்டிருக்கிறோம். அதற்காகவே, நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். அல்லும் பகலும் உன்னையே நினைத்து உருகும் எங்களை ஆட்

கொண்டுதான் ஆகவேண்டும். உன்னையே சரணம் அடைந்தோம். இனி நீ என்ன சொன்னாலும் வீடு திரும்பமாட்டோம்'' என்று அவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்கள். கண்ணன் பார்த்தான். மிக்க கருணை உண்டாயிற்று. யமுனைக் கரையில் கோபிகளுடன்கூடி, மிக்க சந்தோஷத்துடன் விளையாடுகிறான். இடைப் பெண்களும் அதிக ஆனந்தம் அடைந்து மனப் பூரிப்படைகிறார்கள். கண்ணனைக் காதலனாகக் கொண்ட அவர்கள் நற்கதி அடைந்துவிட்டார்கள். பரமனிடம் காதல் கொண்டதனால் என்ன தவறு? எப்படியாவது பரமனிடம் திடமான நம்பிக்கையல்லவோ நமக்கு வேண்டும்!

## மாயன் மாயமாய் மறைந்தது

கண்ணன் இரவில் வெகுநேரம்வரை யமுனைக் கரையில் பெண்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறான். இடைச்சியர்க்கு மிக்க மகிழ்ச்சி. பரமனைக் கணவனாக அடைந்து அவனுடன் விளையாடும் பாக்கியம் பெற்ற தம்மை, மிக்க புண்ணியவதிகள் என்று கர்வப் படுகிறார்கள். திருமகள் ஒருத்திக்கே சொந்தமான இத் திவ்விய மங்கள மூர்த்தியுடன் கலந்து அனுபவித்த இவர்கள், இவ்வாறு நினைப்பதில் என்ன தவறு? பார்த்தான் கண்ணன். அப்பெண்களின் அளவுகடந்த கர்வத்தை அடக்குவதற்கு எண்ணங்கொண்டு திடீரென்று மறைந்து விடுகிறான். கண்ணனை எங்கும் காணோம். பெண்கள் அலைகிறார்கள். அவனைக்

காணாது பைத்தியம் பிடித்தாற்போல் புலம்பு கிறார்கள். படாத பாடெல்லாம் பட்டுக் கிடைத்த கண்ணன் எங்கேயோ மறைந்து விட்டானேயென்று தவிக்கிறார்கள். அந்தோ! அப் பெண்களுக்கு ஏற்பட்ட துயரம்தான் என்னே! காதலனின் பிரிவினால் ஏற்படும் வருத்தம் பெண்களுக்கல்லவா தெரியும்? காடுதோறும் சென்று, "சண்பகமே! நீ கண்ணனை எங்கேயாவது பார்த்தாயா? கொடிகளே! கண்ணன் இங்கு எங்கேயாவது வந்தானா? மரங்களே! கண்ணனைக் கண்டீர்களா? புல்லே! கண்ணனைப் பார்த்தாயா?" என்று இப்படியெல்லாம் வேதனையால் உயிருள்ளவை, உயிரில்லாதவை என்பதையுமறியாமல் தேடிக் கொண்டு செல்கிறார்கள்.

சிறிது தூரம் சென்று "இதோ கொடிகளெல் லாம் கலைந்து கிடக்கிறது, கண்ணன் இப்படித்தான் சென்றிருக்கவேண்டும். இக்கொடிகள் என்ன அதிர்ஷ்டம்தான் செய்தனவோ?" என்று இப்படிப் பலவாறாகச் சொல்லி அழுதுகொண்டு திரிகிறார்கள். கண்ணனை எங்கு தேடியும் காணோம். கர்வப் படுவதற்கும் அளவில்லையா? அதிகம் கர்வப்பட்டால் இப்படி அனுபவித்துத்தான் தீரவேண்டும். "கண்ணனை எங்கு தேடியுங்காணாமல் அவனைப் பிரிந்து நாம் உயிர் வாழ்வது கடினம். ஆகவே, அவன் திவ்ய லீலைகளையெல்லாம் அப்படியே செய்தாவது உயிர் தரிப்போம்" என்றெண்ணி, கோபியர்கள் அவ்வாறே செய்யத் தொடங்கினார்கள்

ஒருத்தி, தன்னைக் கண்ணனாக நினைத்து மற்றொரு இடைச்சியைப் பூதனையாக வைத்து விளையாடுகிறாள். மற்றொருத்தி, கண்ணனைப் போல் தொட்டிலில் படுத்துக்கொண்டு ஒருத்தியைச் சகடாசுரனாக எண்ணிக் காலால் உதைக்கிறாள். இன்னும் ஒருத்தி தான் திருணாவர்த்தனாக இருந்து ஒருத்தியைக் கண்ணனாகப் பாவித்து உயர எடுத்துச் செல்வதுபோல் நடிக்கிறாள். ஓர் இடைச்சி, கண்ணனைப்போல் வேடந்தரிக்கிறாள். சில இடைச்சிகள் கோபியர் சிறுவர்கள் வேடம் பூண்டு அவனுடன் விளையாடுகிறார்கள். சில பெண்கள் தம்மைக் கன்றுகளாக நினைத்துக் கீழே மேய்வது போல் பாவிக்கிறார்கள். கண்ணன் வேடங்கொண்ட ஒருத்தி, கீழே மேய்ந்துகொண்டிருக்கும் ஒருத்தியின் இரு கால்களையும் பிடித்துச் சுழற்றி வெகு தூரத்தில் எறிவது போல் அபிநயம் செய்கிறாள். ஒருத்தி, வெகு தூரம் சென்று கண்ணனைப்போல் உரத்த குரலில் இடைச் சிறுவர்களைக் கூப்பிடுகிறாள். மற்றோராய்ச்சி மரக்கிளையிலுட்கார்ந்து குழலூது வதுபோல் பாசாங்கு செய்கிறாள். ஒரு இடைச்சி தனது விரல்களால் கோவர்த்தன மலையைத் தூக்குவதாக எண்ணி தனது மேல் வஸ்திரத்தை விரித்து அதுபோல் உயர ஏந்துகிறாள். மற்றவர்கள் அதனுள் நுழைந்து மழையினிடமிருந்து தப்புவது போல் பாசாங்கு செய்கிறார்கள்.

ஓர் பெண், யசோதையாகப் பாவித்து, ''ஏண்டா கண்ணு! மண்ணைத் தின்றுவிட்டாயே, வாயைத்

திற பார்ப்போம்'' என்று மற்றொருத்தியை மிரட்டு கிறாள். கண்ணனிடம் காதல் கொண்டவர்களாய் அவன் திவ்ய லீலைகளை இவ்வாறு எல்லாம் செய்து கொண்டு காடு முழுவதும் சுற்றினார்கள். சிறிது தூரத்தில் கண்ணபிரானின் காலடி மணலில் தென் பட்டது. கூடவே, ஓர் பெண்மணியின் காலடியும், அதன் நடுவில் இருந்தது. இதைப் பார்த்த இவர்கள் மனம் நொந்து, ''நம் எல்லோரையும் விட்டுவிட்டு, ஏதோ ஒருத்தியை மட்டும் அழைத்துக் கொண்டு இந்த வழியே கண்ணன் போயிருக்கிறான். அப்பெண்மணி என்ன பாக்கியம்தான் செய்தாளோ'' என்றுபுலம்பிக்கொண்டு சிறிது தூரம் செல்கிறார்கள். அங்கு ஓரிடத்தில் கண்ணனின் காலடி மணலில் அழுந்தித் தெரியும்படி கிடந்தது. இதைப் பார்த்து, ஒருத்தி, ''பார்த்தீர்களா, கண்ணன் தனக்கு மிக்க பிரியமான ஒருத்தியைத் தோளில் தூக்கி இவ்வழியே செல்லும்போது அதிக பாரத்தால் அவன் காலடி மணலில் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது'' என்று மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டு வயிற்றெரிச்சல் படுகிறாள். இன்னும் சிறிது தூரத்தில் ஓர் செடியின் ஓரத்தில் மலர்கள் கீழே விழுந்து கிடக்கின்றன. செடியின் அடியில் கண்ணனின் பாதி காலடி ஊன்றிக் கிடக்கின்றது. இதைப் பார்த்த கோபியர்கள், ''பார்த்தாயா, கண்ணன் தனது காதலியின் பொருட்டு இச்செடி ஓரத்தில் முன் காலைப் பதிய வைத்து மலரைப் பறித்திருக்கிறான்'' என்று சொல்லிக்கொண்டு மிக்க கவலைப் படுகிறார்கள்.

இன்னும் சற்று சமீபத்தில் தலைமயிர்கள் உதிர்ந்து கிடந்தன. இதைக்கண்ட ஆய்ச்சிகள், ''பார்த்தாயா, கண்ணன் தனது காதலியின் தலையைத் தனது கைகளால் வாரி அவளுக்கு மலர்களைச் சூட்டியிருக்கிறான்'' என்று கூறி பொறாமைப்படுகிறார்கள். இப்படி இவர்கள் கண்ணுக்கு அகப்படாமல் வேறிடத்தில் கண்ணன் ஒருத்தியோடு விளையாடிக்கொண்டிருக்கிறான். அப்பொழுது அவள் மிக்க கர்வம் கொண்டு கண்ணனைத் தனக்கு அடிமையாக எண்ணி ''என்னால் இனி நடக்க முடியாது. தோளில் ஏற்றிச் செல்'' என்று கூறுகிறாள். அவள் கர்வத்தையடக்க அவளையும் விட்டு திடீரென மறைந்து விடுகிறான். பாவம்! புலம்புகிறாள். அச்சமயம் மற்றையிடைச்சிகள் கண்ணனைத் தேடியலைந்து அவளிடம் வருகிறார்கள். அவ்வாய்ச்சியும் தான் கண்ணனிடம் ஏமாந்து போன சமாசாரத்தைத் தெரிவிக்கிறாள். எல்லோரும் ஒன்றுகூடி யமுனைக் கரைக்குச் சென்று அவனையே மனத்தில்கொண்டு அவன் திவ்ய லீலைகளை உரத்த குரலில் பாடத் தொடங்கினார்கள். கண்ணனைப் பிரிந்த அப்பெண்களின் மனம் எபபடித்தான் துடித்திருக்குமோ? கைக்குக் கிட்டிய பொருளை நழுவ விடுவது நரகத்திலும் கொடியது!

# 8. இராஸ க்ரீடை

கோபியர்கள் எவ்வளவு பாடியும் கண்ணன் வரவில்லை. அவன் வராததால் வருந்தி அவனைப் பிரிந்திருக்க முடியாது உரத்த குரலில் அழத் தொடங்கினார்கள். இது கண்ணன் காதில் கேட்டது. உடனே பரமன் புன்னகையுடன் அவர்கள் முன் தோன்றுகிறான். அவனைக் கண்ட அப்பெண்களுக்கு மிக்க சந்தோஷம். கண்ணனைத் தமது கண்களால் பருகுவதுபோல் வைத்த கண்ணை வைத்தபடியே நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் ஆய்ச்சிமார்கள். அவனைக் கண்ட மகிழ்ச்சியால் ஒருத்தி தனது இரு கரங்களாலும் கண்ணனது கையைப் பிடித்துக் கட்டிக்கொள்ளுகிறாள். பரமனின் மிருதுவான கைகளை எடுத்துத் தன் தோளில் வைத்து முத்தமிடுகிறாள் மற்றொருத்தி. இரு கைகளாலும் அவன் உமிழும் தாம்பூலத்தை ஏந்திக் கொள்கிறாள் இன்னொரு பெண். ஊடலினால் புருவத்தை நெறித்து உதடுகளை கடித்துக்கொண்டு உற்று நோக்குகிறாள் ஓர் இடைச்சி. இப்படி இடைச்சியர் என்ன செய்வதென்றறியாமல் அவனைச் சுற்றிக்கொண்டு தங்கட்குத் தோன்றிய முறையில் அனுபவித்தனர். சிறிது காலம் பிரிந்திருந்த கணவனைக் கண்ட பின் பெண்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சியை யாரால்தான் அளவிட முடியும்!

இப்படியே வெகு நேரம்வரை யமுனைக்கரையில் இடைப் பெண்களுடன் கூடிப் பலவிதமாக விளையாடி னான் பரம புருஷன்.

இராச க்ரீடை நிகழ்த்த வேண்டுமென அவன் மனத்தில் எண்ணம் உதித்தது. கோபியர்கள் இவனைச் சுற்றி வட்டமாக நிற்கிறார்கள். கண்ணன் பல உருவங்களை எடுத்து ஒவ்வொருத்தியின் அருகிலும் நின்று அவர்களுடைய வலது கையைத் தனது இடது கையாலும், இடது கையைத் தன் வலது கையாலும் மாறிப் பிடித்துக்கொண்டு வட்ட மாய்ச் சுற்றி ஒவ்வொருத்தியுடனும் நர்த்தனமாடு கிறான். கோபியர்களும் பாடிக்கொண்டே சுற்றி நின்று அவனுடன் கூடி ஆடுகின்றனர். பெண்களின் கைவளைகள் ஒன்றுடன் ஒன்று மோதுவதால் இனிய தோர் ஒலி உண்டாகின்றது. ஆகாயத்திலுள்ள தேவர்கள் இதனைக் கண்டு பூமாரி பெய்கின்றனர். விரைந்து ஆடும் அவர்களின் தலைகளிலிருந்து அவர் கள் அணிந்த மலர்கள் விழுகின்றன. மிக்க களைப் பால் அவர்களின் முகத்திலிருந்து வியர்வைத் துளிகள் கீழே சொட்டுகின்றன. கண்களில் இட்ட மை கரைந்து அந்நீருடன் பெருகுகின்றது. இப்படித் தங்களை மறந்து அவனுடன் வெகு நேரம் நீடித்து ஆடுகின்றனர். அவர்களுக்குச் சிறிது களைப்பு உண்டாகின்றது.

அதன் காரணமாக ஒருத்தி, கண்ணனின் பரந்த மார்பில் சாய்கின்றாள். மற்றொருத்தி அவனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு கீழே விழாதபடியாக

சமாளித்துக்கொள்கிறாள். இன்னொரு பெண் அவன் தோள்மேல் சார்ந்து நிற்கிறாள். இவ்வாறு இராஸ க்ரீடையும் இனிது முடிந்தது. அவர்களுடன் ஆடிய காரணமாக அவனுக்கு ஏற்பட்ட களைப்பை நீக்கிக்கொள்ள அருகிலுள்ள யமுனையில் இறங்கி அவர்களுடன் கண்ணன் நீரில் விளையாடுகிறான். இதற்குள் சந்திரன் மறைகிறான். யாவரும் வீடு சேர்ந்தனர். இவ்வாறே சரத்கால முழுவதும் கண்ண னுடன் கூடி இரவு காலத்தில் விளையாடி வந்தனர்.

## விருஷபாஸுர வதம்

கண்ணன் கோபர்களுடனும் கோபியர்களுடனும் கூடி நாளொரு மேனியும் பொழுதோர்வண்ணமாய் வளர்ந்து வருகிறான். கம்ஸ தூதனாகிய ஓர் இராக்ஷஸன் மலைபோல் ஓர் பெரும் காளைமாடு வடிவங் கொண்டு கண்ணனைக் கொல்ல கோகுலம் வருகிறான். பயந்தோன்றக்கூடிய ஓர் பெரும் வடிவம். மலைப்பாம்பு போல் நீண்ட வால். மரங் களின் அடிபோல் நீண்ட பருத்த இரு கொம்புகள். எல்லோரையும் அச்சப்படச் செய்யும் இடியோசையைப் போன்ற பெரும் முழக்கம். குளம்புகள் கீழே படுவ தால் பூமியிலிருந்து மண் கிளம்பி எங்கும் பரவு கின்றது. இக்கோர உருவத்தைக் கண்டு பசு மாடு கள் எல்லாம் வாலைத் தூக்கிக் கொண்டு பயந்து ஓடு கின்றன. குழந்தைகள் அழுகின்றன. பெண்கள் பயப்படுகின்றனர். சிறுவர்கள் கண்டு அச்சத்தால் வீட்டிற்குள் சென்று மறைந்து கொள்ளுகிறார்கள்.

எல்லோரும் கூடி இக் காளையினிடத்திருந்து தப்ப, கண்ணனைச் சரணடைகின்றனர்.

அடுத்தவரைக் காக்கும் அவனும் கோபர்களைச் சமாதானஞ் செய்து அவ்வரக்கனை அணுகுகிறான். அக் காளையும் கண்ணனைக் கொம்புகளால் முட்டிக் கொல்ல முயல்கின்றது. இரு கொம்புகளையும் கைகளால் பற்றி, அதனைச் சுழற்றி ஓங்கி எறிகிறான் பரமன். மறுபடியும் எழுந்து அவனை முட்ட அவனிடம் அக்காளை மாடு வருகின்றது. அதன் இரு கொம்புகளையும் மறுபடியும் பிடித்து, அதனைக் கீழே தள்ளி மிதித்துக் கொல்கின்றான் கண்ணன். உடம்பெல்லாம் முறிந்து வாயால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு கீழே மடிகிறது.

**கம்ஸன் கண்ணனைக் கொல்ல சூழ்ச்சி செய்தல்**

கம்ஸன் ஒவ்வொரு அசுரனாக கண்ணனைக் கொல்ல அனுப்பி வருகிறான். கண்ணபிரானும் வந்தவர்களெல்லோரையுங் கொன்று அவ்வெல்லோர்க்கும் தன் ஸம்பந்தத்தால் நற்கதியளித்து வருகிறான். இவ்விதமே பல அரக்கர்கள் மடிந்து வந்தனர். கம்ஸன் மட்டும் இன்னும் ஒழிந்தபாடில்லை. தேவர்களால் இவன் தொல்லையைத் தாங்க முடியவில்லை. ''தேவகியின் எட்டாவது புதல்வன் கண்ணன் கோகுலத்தில் வசித்து வருகிறானென்பதும் அவனே இவ்வசுரர் அனைவரையும் கொன்று வருகிறான் என்பதும் இதுவரையில் கம்ஸனுக்குத் தெரியாது. இவ்வுண்மையை அவன் அறிந்துகொண்டால் இவனி

டமிருந்து தப்புவதற்காகக் கோபம் மிக்கு, கண்ணனைக் கொல்ல வருவான். அப்பொழுது அப்பரமனும் கம்ஸனைக் கொன்று விடுவான். இதுவே கம்ஸனைக் கொல்ல சரியான உபாயம். இவ்வுண்மை கம்ஸனுக்குத் தெரியாதவரை நமக்கு கஷ்டம்தான்'' என இவ்வாறு தேவர்கள் ஆலோசனை செய்து கண்ணபிரானின் அவதார உண்மையைக் கம்ஸனிடம் தெரிவிக்க, நாரதரை மதுரைக்கு அனுப்புகிறார்கள்.

## நாரதர் 'கலகம்'

நாரதருக்குக் கலகம் செய்வது இயற்கையாய் இருந்தது. இவர்கள் நாரதரிடம் கூறியது, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல ஆயிற்று. உடனே கம்ஸனிடம் சென்று, ''ஹே, கம்ஸா! இதுவரை இவ்வுண்மையை அறிந்து கொள்ளாமல் ஏமாந்து போனாயே. இனியாவது நான் சொல்வதைக கேள். தேவகிக்கு எட்டாவது குழந்தை பெண்ணல்ல, ஆண் குழந்தை தான். இக்குழந்தை இங்கேயே இருந்தால் வழக்கம் போல் அதையும் நீ கொன்று விடுவாய் என்று பயந்து உடனே அதை வசுதேவர் தமது நண்பரான நந்தகோபரின் பத்தினி யசோதையிடம் கொண்டுவிட்டு அப்பொழுதே அவளுக்குப் பிறந்திருக்கும் பெண் குழந்தையைத் தேவகியிடம் கொண்டு விட்டு விட்டார். இவ்வுண்மையை அப்பொழுது நீ உணரவில்லை. அப்பெண் குழந்தையைத் தேவகியின் எட்டாவது குழந்தையாக

எண்ணி, அதை நாம் கொன்றுவிட்டபடியால் இனி உயிருக்கு ஆபத்து இல்லையென்று எண்ணியிருக்கிறாய். தவிர, தேவகியின் ஏழாவது கர்ப்பமும் கரையவில்லை. பகவன் மாயையால் கொண்டு வரப்பட்டு உரோகணியின் வயிற்றில் வைக்கப்பட்டு பலராமனாகப் பிறந்து கண்ணபிரான் வீட்டில் வசித்து வருகிறான். கண்ணன்தான் உன்னால் அனுப்பப்படும் அத்துணை அரக்கர்களையும் கொன்று கொண்டே இருக்கிறான். உன்னையும் அவனே கொல்லப் போகிறான். இனியும் நீ ஏமாந்து மோசம் போகாதே. கண்ணனைக் கொன்று உன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழி தேடிக்கொள்'' என்று சொல்லி நாரதர் தன் இருப்பிடம் சேர்ந்தார்.

இதைக் கேட்டான் கம்ஸன். அவனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. உதடுகள் துடித்தன. பற்களைக் கோபத்தால் கடிக்கிறான். உடம்பெல்லாம் சிலிர்க்கின்றது. ''என்னைக் கொல்லப் போகின்றவனுமா இன்னும் உயிருடன் இருக்கிறான்? அவனை ஒரே நொடியில் ஒழிப்பேன்'' என்று மனத்திற்கொண்டு ''வசுதேவா! கண்ணனை மறைத்து வைத்து இப்படியா சூழ்ச்சி செய்தாய்? நீ என்ன செய்வாய், பாவம்! உன் போதாத காலமன்றோ உன்னை இவ்வாறு செய்யத் தூண்டியது?'' என்று சொல்லி, வசுதேவரையும் தேவகியையும் மறுபடியும் விலங்கிட்டுச் சிறையில் வைத்தான் கம்ஸன். உடனே, முஷ்டிகன், சாணூரன் முதலிய மந்திரிகளை வர

வழைத்து, அவர்களை நோக்கி, ''என் மந்திரிகளே! இதுவரை நமக்கிருந்த பயம் இன்றோடு நீங்கியது.

இனி நாம் பயமின்றி மகிழ்ச்சியோடிருக்கலாம். என்னைக் கொல்லப் போகிறவன் யார் என்பதை நாரதரிடமிருந்து நான் நன்கு அறிந்தேன். நந்தகோகுலத்தில் நந்தனுக்குக் குழந்தையாகப்பிறந்திருக்கும் கண்ணனே என்னைக் கொல்லப் போகிறனாம். தேவகியின் எட்டாவது குழந்தையும் அவனே தான். வசுதேவர் நமக்குத் தெரியாமல் கண்ணனைக் கோகுலத்தில் மறைத்து வைத்திருக்கிறார். முதலில், கண்ணனைக் கொன்று விட்டால் நாம் சுகமாய் வாழலாம். அவனைக் கொல்லுவதற்கு என் மனத்தில் ஒரு உபாயம் தோன்றுகிறது. வரும் சதுர்த்தசி நாளன்று தனுர்யாகமொன்று செய்யத்தொடங்குவோம். அதற்காகப் பல தேசங்களிலிருந்து பல அரசர்கள் இங்கு வருவார்கள். இவ்வைபவத்தைக் காணக் கண்ணனும் கோபர்களுடன் மதுரைக்கு வருவான். அதற்குள் நீங்கள் யாகத்தின் பொருட்டுச் செய்யவேண்டுவனவற்றைச் செய்து முடியுங்கள். குவலயாபீடம் என்னும் பெரிய யானையைக் கண்ணனைக் கொல்லுவதற்காக யாகசாலையின் முன்னர் நிறுத்தி வையுங்கள். நீங்கள் கண்ணன் வந்தவுடன் அவனை மல்யுத்தத்திற்கு அழைத்து அவனைக் குத்தி வீழ்த்துங்கள். உங்களிடமிருந்து ஒருவேளை தப்பித்தாலும் அப்பெருயானையிடமிருந்து அவன் தப்புவது மிக அரிது. நம்மிடம் அகப்பட்டபின் அவன் வலையில் சிக்கிக் கொண்ட மான்போல் அல்லவோ உயிருக்

கஞ்சி நிற்பான் !'' என்று சொன்னான். மந்திரிகளும் இதை ஒப்புக்கொண்டு யாகத்திற்கு வேண்டுவனவற்றைச் செய்யத்தொடங்கினர். ஆங்காங்கு பல தேசங்களிலுள்ள அரசர்களை அழைத்துவர அவன் தூதர்கள் சென்றார்கள். யாரை அனுப்பினால் கண்ணனை இங்கு அழைத்து வரமுடியும் என்று ஆலோசித்துக் கடைசியாக அக்ரூரர் என்பவரைக் கோகுலஞ் சென்று அழைத்து வருமாறு கட்டளையிடுகிறான் கம்ஸன். கேசி முதலிய அரக்கர்களும் கம்ஸன் கட்டளைப்படி கண்ணனைக் கொல்லக் கோகுலம் செல்கின்றார்கள்.

## கேசியின் சம்ஹாரம்

கேசி என்பவன் ஓர் இராக்ஷஸன். இவன் கம்ஸனின் தூதன். கம்ஸனால் அனுப்பப்பட்டு பெரும் குதிரை வடிவெடுத்துக் கண்ணனைக் கொல்லக் கோகுலம் வருகிறான். மரத்தின் அடி போல் பெருத்த கால்கள் ; குகைபோல் விசாலமான வாய் ; பார்ப்போர்க்கு பயத்தை உண்டாக்கும் கோர ரூபம் ; இக்குதிரை, மனோ வேகத்தில் கோகுலம் முழுவதையும் சுற்றிக் கண்ணனைக் கொல்ல அவனருகே வருகின்றது. கண்ணனும் இவ்வசுரனைக் கொல்ல எண்ணி அதன் இரு கால்களையும் பிடித்து வெகு வேகமாகச் சுழற்றி தூரே எறிகிறான். மறுபடியும் அக் குதிரை உயிர் பிழைத்து அவனை முட்டி கொல்ல வருகின்றது. தனது இடது கை முழுவதையும் அக் குதிரையின் வாயினுள் நுழைக்கின்றான் கண்ணன்.

அக்கை அதன் வயிற்றினுட் சென்று மலைபோல்
வளர்ந்து அக் குதிரை மூச்சு விடமுடியா
மல் திண மடிகிறது.

### வியோமாசுரனை வதைத்தது

அருமைக் கண்ணனுக்கு ஏழு முடிந்து எட்டாவது வயது பிறக்கின்றது. அதற்குள்ளாகவே அவன் எல்லோரும் வியக்கத்தக்க சில செயல்களைச் செய்து தனது பெருமையைக் காட்டி வந்தான். வழக்கம் போல் ஒரு நாள் காடுகளில் பசுமாடுகளைமேயவிட்டு இடைப் பிள்ளைகளுடன் உல்லாசமாக விளையாடிக் கொண்டிருக்கிறான் கண்ணன். திடீரெனத் திருடன் விளையாட்டு விளையாட வேண்டுமென்று கண்ணனுக்கு எண்ணம் தோன்றியது. அங்கிருந்து இடைப் பிள்ளைகளுள் சிலரை ஆடுகளாகவும், சிலரை ஆடு மேய்ப்பவர்களாகவும், சிலரைத் திருடர்களாகவும் வேடம் பூணச்சொல்லி, ஆடுகளைத் திருடர்கள் திருடிச் செல்வது போலும், அவைகளைக் கோபர்கள் மீட்பது போலவும், இவ்வாறெல்லாம் விளையாடிக் கொண்டிருக்கும் போது, மயனுடைய பிள்ளையாகிய வியோமாசுரனென்பவன், இடைச் சிறுவன் வேடங் கொண்டு அவர்களுடன் விளையாடுவது போல் காட்டி, ஆடுகளைத் திருடுவது போல் பாசாங்கு செய்து, இடைச் சிறுவர்களெல்லோரையும் எடுத்துக் குகைக்குள் வைத்து, மறைத்து விடுகிறான். கடைசியாக ஐந்து அல்லது ஆறு சிறுவர்களே விளையாட்டில் மீதமாய் நின்றனர். மற்றெல்லோரையும்

அங்குக் காணோம். இதைப் பார்த்தவுடன் ணுக்குத் திடுக்கிட்டது. உடனே, இதனை அரக் கனின் சூழ்ச்சியென்றுணர்ந்து, பெரிய உருவத் தோடு வந்த அவ்வரக்கனைக் கொன்று, சிறுவர் களை மீட்டு வீடு சேர்கின்றான்.

## பக்த அக்ரூரர்

கதிரவன் உதயமாகிறான். யதுகுல திலகரான அக்ரூரரும் கம்ஸனின் கட்டளைப்படி கண்ணனை மதுரைக்கு அழைத்துவர தேரேறி, கோகுலத்திற்குப் புறப்படுகிறார். இவர் பகவத் பக்தி உடையவர். பரமனே கண்ணனாகப் பிறந்திருக்கும் உண்மை இவருக்கு நன்கு தெரியும். கம்ஸனால் வைகுண்ட நாதனான கண்ணபிரானை நேரில் தரிசிக்கப் பேறு பெற்றோமே யென்று இவருக்கு மிக்க மகிழ்ச்சி. ''வெகு நாட்களாக எதிர்பார்த்திருந்த பொரு ளொன்று சமீப காலத்திலேயே கிடைக்கப் போகிற தென்றால் மனிதன் மகிழ்ச்சி அடைவது இயற்கையே யன்றோ?'' ''நான் முற் பிறவியில் என்ன புண்ணி யம் செய்திருந்தேனோ? பரமனைத் தரிசிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. மிக்க துஷ்டனான கம்ஸனும் என்வரையில் நல்லவ னென்றே கூற வேண்டும். அவனாலல்லவோ இப் பாக்கியம் எனக்குச் சமீபத்தில் கிடைக்கப்போகிறது. துஷ்டனிடத்தில் வேலை செய்வதுங்கூட ஒரு சமயம் நல்லதாகவே முடிகிறது. பரமயோகிகளும் எவனு டைய திருவடிகளைக் காணத் தவித்துக் கொண்டிருக்

கிறார்களோ அவனுடைய திருவடித் தாமரைகளைத் தரிசிக்கப் போகிறேன். நான் கம்ஸனுக்குத் தூதனாக வந்திருந்தபோதிலும் எனக்குத் தன்னிடத்திருக்கும் நிலைபெற்ற பக்தியை யுணர்ந்து எனது இரு கரங்களையும் பிடித்து என்னை மிக்க சந்தோஷத்தோடு கண்ணன் கட்டிக்கொள்ளப் போகிறான்.'' இவ்வாறாக அக்ரூரர் தன் மனத்தில் தோன்றியவாறு மனக்கோட்டைககளைக் கட்டிக் கொண்டே சென்று கொண்டிருக்கிறார்.

கட்டின கோட்டையெல்லாம் பிறகு அப்படியே நடப்பது சில பெரியோர்களுக்கே, எதிர்பார்த்த பொருள் கிட்டுவதற்கு முன் அது கிடைத்ததாகப் பாவித்து மனக்கோட்டை கட்டுவது ஜனங்களின் வழக்கம்தான். அக்ரூரர், பக்தசிகாமணியாதலால் அவர் எண்ணியபடி பரமனின் தரிசனம் அவருக்குக் கிடைத்தது. எண்ணம் சுத்தமாயிருந்தால் நினைத்தது கைகூடுவது திண்ணம். பக்தி அதிசயத்தால் கண்ணனின் திருமேனியை மனத்திற் கொண்டு மெய்மறந்து நடுவழியில் அப்படியே நின்று விடுவார். குதிரைகளும் செலுத்துபவன் இராது அவ்விடத்திலேயே நின்றுவிடும். திடீரென விழித்துக் கொண்டு தேரை ஓட்டுவார். சற்று தியானத்திலமர்ந்து தேரை ஓட்டாது அவ்விடங்களில் நின்று சென்ற காரணமாக அக்ரூரர் கண்ணனை யடைவதற்கு வெகு நேரமாய் விட்டது. இவரும் கோகுலமடைந்தார். சூரியனும் அஸ்தமனகிரியைக் கிட்டினான்.

கோகுலத்தைச் சுற்றி பூமியில் கண்ணபிரானின் திருவடி அடையாளங்கள் காணப்பட்டன. இதைக் கண்டார் அக்ரூரர். அவருக்கு மிக்க மகிழ்ச்சி யுண்டாயிற்று. உடம்பு மயிர்க்கூச்செறிந்து ஆனந்தக் கண்ணீர் பார்வையை மறைத்தது. அவர் தேரை விட்டிறங்கி கண்ணன் திருவடி அடையாளங்களில் புரளுகிறார். கண்ணா கண்ணா வென்றெல்லாம் புலம்புகிறார். திருவடி அடையாளங்களில் இருந்த மண்ணையெடுத்துப் பூசிக் கொள்ளுகிறார். பைத்தியம் பிடித்தவன் போல் அலைகிறார். உண்மையான பக்தர்களின் நிலை இவ்வாறன்றோ இருக்கும்! உடனே பூமியிலிருந்து எழுந்து தேரேறி விரைந்து செல்கிறார். ஓர் மாட்டுக் கொட்டகையில் கண்ணன் மேய்த்து வந்த மாடுகளை யெல்லாம் கட்டிக் கொண்டிருக்கிறான். கையில் மாடு மேய்க்குங்கோல், கழுத்தில் வனமாலை, இடுப்பில் புல்லாங்குழல் செருகி யிருந்தது. வெகு தூரத்திலிருந்து இக்கோலத்தைக் கண்ட அக்ரூரர் விரைவாக ஓடி வந்து ஆனந்தக் கண்ணீர் பெருக ஒன்றுஞ் சொல்ல முடியாமல் வாய்புலற்றி கண்ணனின் கால்களில் வணங்குகிறார். இவருடைய உண்மையான பக்தியை யுணர்ந்தான் கண்ணன். அக்ரூரைக் கண்ணன் தனது இரு கரங்களாலும் எடுத்துச் சேர்த்து அணைத்துக் கட்டிக் கொள்ளு கிறான். என்ன ஆச்சரியம்! யதுகுலத்திற் பிறந்த அக்ரூரர் செய்த பெரும் புண்ணியம்தான் என்ன! தான் முன் நினைத்தபடியே பகவானைக் கட்டித் தழுவும் பாக்கியம் கிடைத்தது. பகவானிடத்தில்

உண்மையில் பக்தி கொண்டிருந்தால் அவனிட மிருந்து நாம் எதைத் தான் அடைய முடியாது? பகவானைச் சிறிது கண்டால் போதும் என்று தவிக்கும் பக்தசிகாமணிகள் பலர் காத்திருக்கும் பொழுது அவ்வக்ரூரரைக் கண்ணன் தானாகச் சேர்த்து அணைத்துக் கொண்டானென்றால் மாயனின் மாய வேலையை நாம் என்னவென்று கூறுவது?

உடனே அக்ரூரரை வீட்டிற்கு அழைத்துச் சென்று பீடத்தில் அமர்த்தி நன்கு உபசரித்து, பொதுவாக மதுரா வாசிகளின் க்ஷேமத்தையும் முக்கியமாகத் தனது தாய் தந்தையரின் நலத்தையும் அவர் கோகுலத்திற்கு வந்த காரணத்தையும் கண்ணன் கேட்கலானான். கண்ணனைக் கொல்ல கம்ஸன் செய்திருக்கும் சூழ்ச்சியையும் அதற்காகத் தான் அழைத்துப் போக வந்திருப்பதையும் தெரிவித் தார் அக்ரூரர். கம்ஸனைக்கொல்ல சமயம் எப்பொழுது கிடைக்குமென்றெண்ணியிருந்த கண்ணனுக்கு இச்செய்தி மிக்க சந்தோஷத்தை யளித்தது. மதுரைக்குச் செல்ல பிரயாணம் சித்தம் ஆகிறது. சூரிய உதயமான பின் நந்தன் முதலிய கோபர்கள் தமக்குத் தலைவனான கம்ஸனுக்குக் காணிக்கையாகத் தயிர் முதலிய பண்டங்களை எடுத்துக்கொண்டு வண்டிகளில் புறப்படுகிறார்கள். கண்ணபிரான் பலராமனுடன் அக்ரூருடைய தேரில் அமர்கிறான். கண்ணன் மதுரைக்குச் செல்லுவது கோபியர்களுக்குத் தெரிந்தது. ''ஐயோ தெய்வமே!

ப்படியா அநியாயம் செய்வது? கண்ணனை எங்களுடன் சேர்த்து வைப்பது போல் செய்து இப்படித் திடீரெனப் பிரித்து விடுகிறாயே! அவன் திருமுக மண்டலத்தைக் காணாது எங்கள் உயிரை எவ்வாறு தரிப்போம்? அவனைப் பிரிந்த பிறகு நாங்கள் மட்டும் வாழ்ந்து பயன் என்ன?'' என்று கோபியர் புலம்புகிறார்கள். ஆமாம் பாவம்! கஷ்டமாகத்தானே இருக்கும்! கண்ணனுடன் கோபியர்கள் அடியோடு சேராமல் மட்டும் இருந் திருந்தால் அவர்களுக்கு இவ்வித துன்பம் ஏற் பட்டிருக்காது. சிறிது காலம் சேர்ந்திருந்து பின் காதலனைப் பிரிவது தான் பெண்களுக்குப் பெருங் கஷ்டம். தன்னை விட்டுப்பிரிய மனமிராமல் தவிக்கும் இடைச்சியர்களை நோக்கிப் ''பெண்மணிகாள், ஏன் நீங்கள் வீணே வருத்தமடைகிறீர்கள்? போன காரியத்தைச் சிறிது காலத்திற்குள் முடித்துக் கொண்டு வந்து உங்களைக் களிக்கச் செய்கிறேன்'' என்று சமாதானம் செய்து பின் மதுரைக்குப் புறப் படுகிறார் கண்ணன்.

நந்தன் முதலிய கோபர்கள் வண்டியிலேறிக் கொண்டு அவனைத் தொடர்ந்து செல்கிறார்கள். தேர் கண்ணுக்குத் தெரியாமல் மறையும் வரை இடைச்சிகள் அப்படியே நின்று கண்ணனைப் பார்த்துவிட்டுப் பிறகு வீட்டிற்குச் சென்று கண்ணனின் திவ்விய லீலைகளைப் பாடியே காலத் தைக் கழித்து வந்தார்கள். தேரும் யமுனைக் கரையை அடைந்தது. அங்கு அதனை நிறுத்திக்

கண்ணன் காலையில் தான் செய்ய வேண்டியவை களைச் செய்து முடித்து இரதத்தில் ஏறிக் கொண்டான். அக்ரூரரும் யமுனைக்குச் சென்று நீராடுவதற்கு நீரினுள் மூழ்கியிருக்கிறார். பக்தனான அக்ரூரனுக்கு, தனது உண்மையான ரூபத்தைக் காட்டக் கண்ணனுக்கு எண்ணந் தோன்றியது. ஸ்ரீ வைகுண்டம், ஆயிரந்தலைப் பாம்பின் மேல் பரமன் வீற்றிருக்கிறான். ஓர் கரத்தில் சங்கம், மற்றொரு கரத்தில் சக்கரம், இதர புஜங்களில் மற்றுமநேக ஆயுதங்கள், நாபி கமலத்தில் நான்முகன் வீற்றிருக் கிறான். இக்கோலத்தைக் கண்ட அக்ரூரர் பரம் பொருளைப் பலவாறு துதித்துப் பிறகு கண்ணனிடம் வருகிறார். சூரியன் மறையும் வேளைக்கு இவர்கள் மதுரையை அடைந்தார்கள். அந்நகருக்கு அருகிலுள்ள ஓர் நந்தவனத்தில் கண்ணனை இறக்கி அக்ரூரர் இரதமேறி வீட்டை யடைகிறார். கண்ணபிரான் மற்ற கோபர்களுடன் இரா முழுவதை யும் அவ்விடத்திலேயே கழித்தான்.

## வண்ணானைக் காத்தது

சூரியோதயம் ஆகிறது. கண்ணன் நீராட்டம், பூஜை முதலியவைகளை முடித்துவிட்டு பலராமனை யும் மற்றுமனேக இடைச் சிறுவர்களையும் அழைத் துக் கொண்டு மதுரையின் அழகைக் காணுமாறு இராஜ வீதியோடு செல்கிறான். அந்நகரின் இயற்கையழகு மனத்தை அபகரிக்கக் கூடியதாய் இருந்தது. பட்டினத்தின் நான்கு புறத்திலும்

இரத்னக் கற்களாற் கட்டப்பட்ட உயர்ந்த கோபுரங்கள். நகரைச் சுற்றி வளைத்தாற்போன்று அகழிகள். எங்கும் பல குடையும் வாவிகள். நறுமணம் வீசும் மலர்களையுடைய பல உத்தியான வனங்கள் சுற்றி எப்புறமும் இருந்தன. வான் அளாவிய பல இரத்தின மயமான உப்பரிகைகள். வரிசை வரிசையாய்க் கடை வீதிகள். விசாலமான ராஜ மார்க்கங்கள். தெருக்கள் தோறும் எங்கும் மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன. வீதிகள் யாவும் இரத்தினக் கற்கள் கொண்டே அமைக்கப்பட்டிருந்தன.

நகரிலுள்ள பெண்கள் தெருவில் வந்து கொண்டிருக்கும் கண்ணனைக் காணும் பொருட்டு அவசரமாக மாடிகளில் ஏறி, அவன் வடிவழகைக் கண்டு மயங்கி செயலற்று நிற்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி காரணமாக அவன் மேல் மலர்களை வாரி இறைக்கிறார்கள். பிராமணப் பெண்கள் அக்ஷதை முதலியவைகளை அவன் மேல் போட்டு அவனை ஆசீர்வதிக்கின்றனர். கண்ணனையே எப்பொழுதும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க கோகுலவாசிகளான இடைச்சிகள் என்ன பாக்கியம் தான் செய்தார்களோ என அப்பெண்மணிகள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள். இவ்வாறு கண்ணன் ராஜ வீதியோடு சென்று கொண்டிருக்கும் பொழுது கம்ஸனுடைய ஆடைகளை வழக்கம் போல் சலவை செய்து வரும் வண்ணான் அவைகளையெல்லாம் வண்டியிலேற்றிக் கொண்டு கம்ஸனுக்குக் கொடுப்பதற்காகக் கண்ணனுக்கு எதிரில் வெகு வேகமாக

மிகுந்த கோபங்கொண்டு தனது கரங்களால் அவன் தலையையறுத்து, ஆடைகள் எல்லாவற்றையும் தன் இஷ்டப்படி உடுத்து, மிகுந்தவற்றை தன்னுடனிருந்த நண்பர்களுக்குங் கொடுத்து மகிழ்ந்தான். பகவத் ஸம்பந்தம் பெற்ற அவ்வண்ணான் நற்கதியடைந்ததைக் கூறவும் வேண்டுமோ? ஆயிரக்கணக்கான வருஷங்கள் மண்ணோடு மண்ணாகக் கலந்து, உடலை உலர்த்தி இந்திரியங்களை அடக்கி அவனையே மனதிற் கொண்டிருக்கும் பெரிய யோகிகளை அவன் திரும்பிப் பார்ப்பதுங்கூட இல்லை. தன்னைக் கவனியாது தெருவில் சென்று கொண்டிருந்த பரம நீசனான இவ்வண்ணானை வலிய அழைத்து அவனுக்கு மோக்ஷத்தையளிக்கிறான். இது மிக்க வேடிக்கையாகத்தான் இருக்கிறது. யார் செய்த அதிர்ஷ்டம் யாருக்குத் தெரியப் போகின்றது!

## சுதாமா செய்த பாக்கியம்

சுதாமா என்றொரு மாலை கட்டுபவன் இருந்தான். அவன் பூமாலை கட்டி அவைகளை விற்று வயிறு வளர்த்து வந்தான். இயற்கையிலேயே அவனுக்குப் பரமனிடத்து மிகுந்த பக்தியுண்டு. கண்ணபிரானை நேரில் தரிசிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு வெகு நாட்களாகவே இருந்துவந்தது. சுதாமாவுக்குக் காட்சியளித்து, அவனைப் பரம பாகவதனாக்க வேண்டுமென்று கண்ணன் கோபர்களுடன் அவன் வீட்டிற்குச் செல்கிறான். நாம்

பகவானிடத்தில் திடமான பக்திகொண்டு அவனைத் தரிசிக்க ஆவலுடன் காத்திருந்தால் பரமன் ஏன் தானாக நம் வீடேறி வந்து தரிசனத்தை அளிக்க மாட்டான்! நாம் செய்யும் முயற்சியளவே பயன் வரும். கண்ணனைப் பார்த்த சுதாமாவுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''இன்றைக்குத் தான் என் பிறவி பயனை அடைந்தது. துஷ்டர்களைப் போக்கி நல்லவரைக் காக்கக் கண்ணனாக அவதரித்த இப்பரம்பொருளைத் தரிசிக்க நான் முற் பிறவியில் என்ன பாக்கியந்தான் செய்திருந்தேனோ?'' என்று சொல்லி மகிழ்ந்து கண்ணனை ஆசனத்திலமர்த்தி நன்கு உபசரித்து அவனுக்காகவே தனியாகக் கட்டி வைத்திருந்த ஓர் நறுமண மாலையை அவன் கழுத்திலிட்டான் மாலைக்காரன். பரமன் மிக மகிழ்ந்து அவனுக்குப் பல செல்வங்களை யளித்துத் தன்னிடத்து என்றும் மாறாத பக்தியுண்டாகுமாறு அனுக்கிரகித்துச் சென்றான். இன்று பரமனுக்குச் சாத்திய மாலைக்கிருந்த மணமும் ஒளியும் இதற்குமுன் ஒரு மாலைக்கும் இருந்ததே இல்லை. எந்தப் பொருளாக இருந்தாலும் பரமனின் ஸம்பந்தம் பெற்றால் அதற்குத் தனிப் பெருமை இருக்கத்தானே செய்யும்?

## கூனக்கிழவியைச் சிறு பெண்ணாக்கியது

கண்ணன் இடுப்பில் சரிகை வேஷ்டியையும் கழுத்தில் பூமாலையையுமணிந்து கொண்டு கோபர்களுடன் இராஜ மார்க்கமாகவே செல்கிறான். கம்ஸ

னுடைய வேலைக்காரியான ஓர் கூன் கிழவி வழக்கம் போல் கம்ஸனுக்கு நறுமணம் வீசும் சந்தனத்தை எடுத்துக் கொண்டு எதிரில் வந்து கொண்டிருக் கிறாள். இவளுடைய கோணல் உடம்பைப் போக்கிச் சிறுபெண்ணாகச் செய்ய வேண்டுமென்று கண்ண னுக்கு எண்ண முதித்தது. கூன் கிழவியிடத்திலுமா இவனுக்கு இவ்வளவு கருணை? ஸ்வதந்திரனான அவனுக்குத் தோன்றும் எண்ணங்களை ஏனென்று கேட்க நாமா அதிகாரிகள்! கூனியை நோக்கி, ''பெண்ணே! நீ யார்? யாருக்குச் சந்தனம் எடுத்துச் செல்கிறாய்? வாசனை வீசும் இச்சந்தனத்தைப் பூசிக்கொள்ள வேண்டுமென்று எனக்கு ஆசையாய் இருக்கிறது. இதை நீ எனக்குக் கொடுத்தால் உனக்கு வேண்டிய செல்வங்களையெல்லாம் தரு கிறேன்'' என்று கூறினான் கண்ணன்.

|வன் வடிவழகில் மயங்கி ''பிரபோ! நான் கம்ஸனுடைய வேலைக்காரி. அவனுக்குத் தினந் தோறும் சந்தனம் சேர்த்து கொடுத்துவருவது வழக் கம். உங்களுக்கு வேண்டுமானால் இதைக் கொடுக் கிறேன்'' என்று சொல்லிச் சந்தனத்தைக் கண்ண னுக்குக் கொடுக்கிறாள் கூனி. கண்ணன் உத்ஸா கத்துடன் அதை மார்பில் பூசிக்கொண்டு, தனது கை ஸ்பர்சத்தால் அவள் கோணலை நிமிர்த்தி, சிறு பெண்போல் இருக்கும்படி செய்துவிடுகிறான். பருவ மடைந்த அவளுக்குக் கண்ணனை அனுபவிக்க எண்ணமுண்டாகி அவனைத் தன் வீட்டிற்கு வருமாறு அழைக்கிறாள். பிறகு வருகிறேன் என்று கூறிச்

செல்லுகிறான் கண்ணன். கூனிக்கு பகவத் தர்சனம் கிடைக்க வேண்டிய காலம் வந்துவிட்டால் அது கிடைத்துத்தானே தீரும்! நாம் வீணாக அவனிடத்தில் பொறாமை கொண்டு என்ன செய்வது? அல்லது பரமனைப் பழித்துத்தான் என்ன பயன்? அவரவர்கள் செய்த கருமத்திற்குத் தக்கபடிதான் அவர்களுக்குப் பயன் கிட்டப் போகின்றது!

## வில்லை முறித்தல்

இடுப்பில் சரிகை வஸ்திரம். மார்பில் சந்தனம். கழுத்தில் மாலை. சுற்றிலும் இடைச்சிறுவர்கள். இடது பக்கத்தில் பலராமன். இக்கோலத்தோடு பட்டினத்து ஜனங்களை விசாரித்துக்கொண்டே தனுர் யாகம் நடக்குமிடத்திற்குச் செல்கிறான் பரமன். அங்கு ஆகாயம் வரை பரவியிருக்கும் ஓர் பெரிய வில் வைக்கப்பட்டிருக்கிறது. பல அரக்கர்கள் அதைச் சுற்றிக்கொண்டு காக்கிறார்கள். அதற்குப் பூக்களால் பூஜை நடக்கிறது. கண்ணன் அதை வெகு இலேசாக எடுத்து நாண்தொடுத்து, கரும்பையொடிப்பதைப்போல் எளிதில் முறித்துவிடுகிறான். கம்ஸனின் சேனை முழுதும் மிக்க கோபம்கொண்டு கண்ணனைக் கொல்ல வருகிறது. அச்சேனை முழுவதையும் கண்ணன் ஓர் இமைப்பொழுதில் அழிக்கிறான். இதற்குள் மாலைக்காலம் வந்தது. கண்ணனும் தாங்கள் இறங்கியிருக்கும் உத்தியான வனத்

திற்கே செல்கிறான். வில் முறிந்து போனதும், தொடர்ந்து சேனையழிந்ததும், கம்ஸனுக்குத் தெரிந்தது. அசரீரி கூறியபடி கண்ணனால் தனக்கு ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி, பயத்தால் இரவு முழுவதும் தூங்கவில்லை. பல துர்நிமித்தங்களும் காணப்பட்டன. கண்ணன் தன்னை எங்கு கொன்று விடப்போகிறானோ என்று பயந்துகொண்டிருந்தபடியால் கம்ஸனுக்கு எங்கும் கண்ணன் மயமாகவே தோன்றிற்று. எப்பொருளை நாம் கண்டு அஞ்சுகிறோமோ அதுவே நம் கண்முன் எப்பொழுதும் எங்கும் இருப்பதாகத் தோன்றுவது இயற்கையே.

# 9. குவலயாபீட வதம்

சூரியன் உதயமானான். நகரில் மல்யுத்தத் திற்குத்தக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றது. ஓரி டத்தில் விசாலமான பந்தல் ஒன்று அமைக்கப்பட்டி ருக்கின்றது. அதனுள் பல நாட்டரசர்கள், மதுரா நகரவாசிகள், பெண்கள், சிறுவர்களெல்லோரும் சுற்றிலும் ஆசனத்தில் அமர்ந்துள்ளார்கள். கொட்டகை வாசலில் குவலயாபீடம் என்னும் ஓர் பெரும் யானை கையில் சூலமேந்திக் கண்ணனைக் கொல்வதற்காக தயாராகக் காத்திருக்கின்றது. முஷ்டிகன், சாணூரன் முதலிய பெரும் குத்துச் சண்டை செய்வோர் கொட்டகையின் நடுவிலிருக்கும் ஓர் மேடையின்மேல் நின்றுகொண்டு கண்ணனை வீழ்த்திக் கொல்ல அவன் வரவை எதிர்பார்க்கிறார் கள். கம்ஸன் இவைகளைப் பார்த்துக்கொண்டு அருகிலுள்ள ஓர் ஆசனத்து அமர்ந்திருக்கிறான். எங்கும் வாத்திய முழக்கம். கண்ணன் கோபர் களுடன் அதைப் பார்க்க வருகிறான். வழியில் பெரும் யானை மலைபோல் வழியை மறைத்துக் கொண்டு நிற்கின்றது. அதன்மேல் யானைப்பாகன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். "அப்பா! நாங்கள் உள்ளேசெல்ல வேண்டும். சற்று யானையை ஓர்பக்கம் விலக்கி வழிவிடு. இல்லாவிடில் உன்னை

யும் யானையையுஞ் சேர்த்து யமலோகத்திற்கு அனுப்பி விடுவேன்'' என்றுமிரட்டுகிறான் கண்ணன். யானைப் பாகன் கோபங்கொண்டு அவனைக் கொல்ல யானையை ஏவுகிறான். குவலயாபீடம் அவனைத் தனது துதிக்கையால் எடுத்துக் கீழே அறைகிறது. உடனே அதன் கையிலிருந்து விடுபட்டு, பின்புறஞ் சென்று வாலைப் பிடித்து வேகமாகச் சுழற்றிக் கீழே தள்ளி அதையும் யானைப்பாகனையும் அழித்தான் பரமன். தேவர்கள் பூமாரி தூற்ற, கோபர்களுடன் பந்தருள்ளே நுழைகிறான் கண்ணன்.

## மல்லர்கள் மாய்ந்தது

பரமன் உள்ளே நுழைந்தான். சபையிலுள்ளோர் அனைவரும் அவனைக்கண்டு மிக்க சந்தோஷ மடைந்தனர். ''கண்ணன் பரமபுருஷன். உலகத்தைக் காக்க கண்ணனாகத் தேவகியிடம் பிறந்திருக்கிறான். இவனால்தான் இவ்வளவு அசுரர்களும் மடிந்தார்கள்'' என்று இவ்வாறெல்லாம் ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்ளுகின்றனர். முஷ்டிகன், சாணூரன் முதலிய பெரிய மல்லர்கள் அங்குவந்த கண்ணனை நோக்கி ''கண்ணா! நாம் அனைவரும் அரசனுக்கு அடிமைப்பட்டவர்கள். அவனுக்குப் பிரியமான காரியத்தைச் செய்து அவனை மகிழ்விப்பதே நம் கடமை. ஆகவே நாம் இருவரும் கலந்து மல்யுத்தம் செய்வது கண்டு அரசன் சந்தோஷமடையட்டும்'' என்று சொன்னார்கள்.

கண்ணனும் அவ்வாறே இசைந்தான். இவர்களுக்குள் பின் யுத்தம் தொடங்கிற்று. ஒருவர்க்கொருவர் கட்டிக் கொண்டு கீழே விழுகிறார்கள். குத்திக்கொள்கிறார்கள். ஒருவர் மற்றொருவர் மேலேறி அழுத்துகிறான். ஒருவர்க்கொருவர் கை கால்களை மாட்டிக்கொண்டு அவ்வாறே நிலையற்று இருக்கிறார்கள். கண்ணனுடைய பெருமை நன்கு தெரிந்திருந்தபோதிலும் கண்ணனுக்கு என்ன ஆபத்து நேருமோவென்று வசுதேவர், நந்தர் முதலியோர்கள் இச்செயலைக் கண்டு சிறிது அஞ்சினர். சிறிது நேரத்திற்கெல்லாம் கண்ணன் மல்லர்களை, உடம்பைப் பிளந்து கொல்கிறான். இதை நோக்கிக் கோபர்கள் ஜய கோஷஞ் செய்கின்றனர்.

# 10. கம்ஸ வதம்

சேனை முழுதும் மடிந்தது. மல்வீரர்களெல்லாம் கீழே சவமாகக் கிடக்கின்றனர். நிதிபோல் கம்ஸன் எண்ணியிருந்த குவலயா பீடமும் பொடியாயிற்று. இவைகளைக் கண்ட கம்ஸனுக்குக் கோபம் மிகுகின்றது. கண்ணனைக் கொல்ல வேண்டுமென்று கம்ஸனுக்குத் தோன்றிற்று. ஆனால் இது மனித சக்திக்கப் பாற்பட்டசெயல் என்றும் அவனுக்கு எண்ணமுண்டாயிற்று. கம்ஸன் கடைசியாகப் பார்த்தான். இனி இவர்களை நகரை விட்டுத் துரத்துவதுதான் நம்மால் செய்யக் கூடியது என்றெண்ணி முடிவு செய்து, அங்கிருந்த தன் தூதர்களை நோக்கி, ''இந்த இடைப் பையனாலல்லவோ இவ்வளவு சேனையும் மாண்டது. ஆகையால் இவனை இப்பட்டினத்தினின்றும் துரத்தியடியுங்கள். மற்று மிங்குள்ள இடையர்கள் கொண்டுவந்த சொத்துகளையெல்லாம் பிடுங்கிக் கொண்டு அவர்களைத் துரத்தி ஓட்டுங்கள். நந்தன், வசுதேவர் இவர்களைச்சித்திரவதை செய்து கொல்லுங்கள்'' என்று மனம் பதைத்துக் கட்டளையிட்டான். கண்ணனுக்கு மிகுந்த கோபம் வந்தது. கம்ஸனுக்கு ஆயுள் முடிவுக் காலமும் கிட்டி விட்டது. பரமன் கம்ஸன் உயிரைக் கவரத் தாவினான். கம்ஸன் என்ன செய்வதென்றறியாது கண்ணனைக் கொல்ல இடுப்பிலிருந்து வாளையெடுத்து உருவி நிற்கின்றான். அவன் கைவாளைப் பிடுங்கி,

அவனை ஆசனத்திலிருந்து கீழே தள்ளி அவன் மேலேறிக் குத்திக் கொன்றான் பரமன். பகவத் ஸம்பந்தத்தால் மிகக் கொடிய கம்ஸனுக்கும் முக்தி கிடைத்தது. கண்ணன் பிறகு மாமாவான கம்ஸ னுக்குச் செய்ய வேண்டிய அக்னிக்கிரியைகளெல்லாம் செய்து முடித்து கம்ஸ வதத்தால் துயரமுற்றிருக்கும் வசுதேவர், தேவகி முதலியோரை நல்வார்த்தை களால் சமாதானப்படுத்தினான்.

## எல்லாம் நன்மைக்கே

ஜீவன்கள் யாவும் பரமனுக்குக் குழந்தைகளே. ஆங்காங்கு சம்சாரத்தில் அகப்பட்டுத் தவிக்கும் எல்லா ஜீவன்களையும் தன்னிருப்பிடம் அழைத்துச் சென்று அவைகளுடன் உல்லாஸமாகக் காலத்தைக் கழிக்க வேண்டுமென்ற எண்ணம் பரமனுக்குப் பல நாட்களாக இருந்து வந்தது. இதற்காகக் கண்ண னாகப் பூமியில் பிறந்தான். அவன் பிறந்திருக்கும் நோக்கத்தை யறிந்துகொண்டு கோபர்கள், கோபியர் கள், ஸுதாமா முதலியோர்கள் தாமாகவே அவனைப் பணிந்து ஸ்ரீ வைகுண்டம் சென்றனர். இவர்களைப் அழைத்துச் செல்லப் பரமனுக்கும் அவ்வளவு சிரமம் உண்டாகவில்லை. கம்ஸன் முதலிய அரக்கர்களை எப்படி அழைத்துச் செல்வது என்று பெருங்கவலை ஏற்பட்டது. அவர்களோ மிக்க துஷ்டத்தனம் உடையவர்கள். பரமனின் பெருமை அவர்களுக்குச் சிறிதும் தெரியாது. அவர்களை இங்கேயே விட்டு விட்டுச் செல்வோமென்றால் அதற்கும் அவனுக்கு

மனம் வரவில்லை. குழந்தைகள் கஷ்டப்பட்டிருக்கும் போழ்து அவைகளை விட்டுச் செல்லத் தகப்பனுக்கு எப்படி மனது வரும்? நல்வழியில் அவர்களை அழைத்துச் செல்ல எவ்வளவோ முயன்றும் பலிக்கவில்லை. கடைசியாகத் தனது வார்த்தையைக் கேளாது, கெட்ட வழியிற் செல்லும் பிள்ளையை அப்படியே விட்டு விடாது, அடித்தாவது அவனை நல்வழிச் செலுத்துவிக்கும் தகப்பனைப் போல, உலகத்துக்கெல்லாம் தந்தையான பரமன் கெட்ட மார்க்கத்திற் செல்லும் கம்ஸன் முதலிய அரக்கர்களையுங் கொன்று தன் ஸம்பந்தத்தை அளித்து அவர்களையும் ஸ்ரீ வைகுண்டம் அழைத்துச் சென்றான். கண்ணன் கம்ஸனைக் கொன்றான். இந்த அசுரனைக் கொன்றான், அந்த அசுரனைக் கொன்றான் என்றெல்லாம் உலகத்தவர் கூறுவது மிகத் தவறு. அவன் எவரையும் கொல்லவில்லை. கொல்வதற்குச் சம்மதிக்கவும் இல்லை. இவர்களைக் கொல்வதுபோல் பாசாங்கு செய்து இவர்களை மோக்ஷத்திற்கன்றோ அனுப்பினான்? எல்லோரையும் தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்ற கருத்துக் கொண்ட பரமனுக்கு அவர்களைக் கொல்ல எண்ணமிருந்தால் இவ்வளவு சிரமம் கொண்டு பூமியில் அவதரிப்பானேன்? தகப்பன் குழந்தை விஷயத்தில் செய்யும் ஒவ்வொன்றும் நன்மையாகவே முடிவதுபோல், பரமன் ஜீவன்களைக் கொல்வது போல் பாசாங்கு செய்தாலும், அடித்தாலும், சம்ஸாரத்தில் தள்ளி வாட்டினாலும் எது செய்

தாலும் எல்லாம் நம் நன்மைக்கே என்று நாம் திடமாக எண்ணியிருக்க வேண்டும்.

## குருகுலவாசம்

கண்ணன் தனது எட்டாவது வயதில் கம்ஸனைக் கொன்று தாய்வழிப் பாட்டனான உக்ரஸேனனை மதுரைக்குத் தலைவனாக்கினான். நந்தன் முதலிய கோபர்கள் கண்ணனிடம் விடைபெற்று அவனைப் பிரிய மனம்வராமல் கோகுலம் சென்றனர். இதுவரை தன்னைப் பிரிந்து வருந்தியிருந்த தாய் தந்தை யரைச் சந்தோஷப் படுத்துவதற்காகக் கண்ணன் பலராமனுடன் மதுரையிலேயே வசித்து வருகிறான். கண்ணனைப் பெற்றதுதான் தேவகி கண்டது. பிறகு அவள் அவனைப் பார்ப்பதற்குக்கூட கொடுத்து வைக்கவில்லை. அவனுடன் கூடியிருந்து களிக்கும் பாக்கியம் எட்டு வருஷங்களுக்குப் பின்தான் அவளுக்குக் கிடைத்தது. குழந்தையை ஒருகணம் பார்க்காவிட்டாலேயே தாய்மார்கள் தவிப்பார்கள். தேவகி எட்டு வருஷ காலம் கண்ணனைப் பார்க்காது பொறுத்தனள் என்றால் தேவகியின் பொறுமைக் குணத்தை நாம் என்னென்போம்? பகவானின் அருளால் அரக்கர்களின் தொல்லையொழிந்து மதுரா ஜனங்கள் மிக்க களிப்புடன் இருந்தார்கள்.

இப்படியே சிறிது காலஞ் செல்லக் கண்ணனுக்கு வயது பதினொன்று ஆகி விடுகிறது. உபநயன காலமும் கிட்டி விட்டது. சாஸ்திர முறைப்படி

தங்களுக்குக் குலகுருவான கர்க்க முனிவரை வரவழைத்து, கண்ணனுக்கும் பலராமனுக்கும் உபநயனம் செய்வித்தார் வசுதேவர். உபநயனம் ஆனபின் பிள்ளைகளை வித்தியாப்யாஸம் செய்து முடிக்கும்வரை குருவினிடத்தில் விட்டு வைப்பது முற்கால வழக்கு. இதையே குருகுலவாசம் எனப் பெரியோர் கூறுவர். எல்லா சாஸ்திரங் களையும் கற்றுணர்ந்தவரான சாந்தீபனி என்னும் ஓர் பிராம்மணோத்தமர் காசியில் வசித்துவந்தார். இவரிடம் குசேலர் முதலிய பல பிள்ளைகள் குருகுல வாசம் செய்துவந்தனர். உபநயனமானவுடன் கண்ணனும் பலராமனும் வசுதேவரின் கட்டளைப்படி இப்பிராம்மணனிடம் வந்து குருகுலவாசம் செய்யத் தொடங்கினர். இவர்களுடைய குருபக்திக்கும் புத்திசாலித்தனத்திற்கும் மெச்சி, சாந்தீபனி இவர் களுக்கு மற்றப்பிள்ளைகளுடன் சாஸ்திரங்களைக் கற்பித்து வந்தார்.

குருவுக்கு வேண்டிய பணிவிடைகளையெல்லாம் செய்துகொண்டு, கண்ணன் வித்யாப்யாஸம் செய்து வரும்பொழுது ஒருநாள் குருபத்தினி கண்ணன் முதலிய பிள்ளைகளை அழைத்து விறகுவெட்டி வரக் காட்டிற்கு அனுப்புகிறாள். கண்ணன் முதலியோரும் காட்டிற்குச் சென்று ஒருவர்க்கொருவர் விளையாட் டாகவே பேசிக்கொண்டு விறகுவெட்டிக் கொண்டிருக் கிறார்கள். அதற்குள் சூரியன் மறைகிறான். காற்றுமழையும் வேகமாய் வருகிறது. பெரும் இடி முழக்கம், கண்களைப் பறிக்கும் மின்னல், திக்குகள்

எல்லாம் இருளடைந்து இருக்கிறது. சுற்றிப் பார்த்தால், கண்ணுக் கெட்டியவரை ஒன்றும் புலப் படவில்லை. மழையோ விடாமல் பெய்துகொண் டிருக்கிறது. தரையில் இடுப்புவரை வரக்கூடிய ஜலம் ஓடுகிறது. பிள்ளைகள் எங்கும் போக முடியாமல் ஒருவர்க்கொருவர் கையைப் பிடித்துக் கொண்டு இரவு முழுவதையும் காட்டிலேயே கழித்தார்கள். சூரியோதயமானவுடன் மழை சற்று நிற்க, வெகுநேரம் வரை பிள்ளைகள் திரும்பி வராததால் குருவும் அவர்களைத் தேடிக் கொண்டு அவர்கள் இருப்பிடம் வந்து பார்க்கிறார். பாவம்! பிள்ளைகள் இரவு முழுவதும் மழையில் நனைந்த படியால் குளிரால் தவித்துக்கொண்டு நிற்கிறார்கள். சாந்தீபனியும் இவர்களுடைய திடமான குரு பக்தியை மெச்சி, அவர்களுடன் வீடுசேர்கிறார்.

இவ்வாறெல்லாம் கண்ணன் பிள்ளைகளுடன் குருவுக்குப் பணிவிடை செய்துகொண்டு இருந்து வருகிறான். கண்ணபிரான் குருவினிடம் வந்து அறுபத்துநான்கு நாட்கள் ஆயின. இதற்குள்ளாகக் கண்ணன் சகல கலைகளையுங் கற்று அவைகளில் நன்கு தேர்ச்சி பெற்றான். கண்ணபிரானோ பரம புருஷன். எல்லா உலகிற்கும் காரணமானவன். ஜீவன்கட்கு ஞானப்பாலை ஊட்டுபவனும் அவனே. இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த கண்ணபிரான் குருகுல வாசஞ்செய்து சாஸ்திரங்களைக் கற்றான் என்றால் இதை யார்தான் நம்புவார்கள்? தான் பூமியில் மனிதனாகப் பிறந்திருப்பதால் அவர்கள்

செய்யவேண்டியவைகளெல்லாம் செய்தால்தான் இவ்வுலகத்தோர்க்குப் பொருத்தமாக இருக்கும் என்று அவன் குருவினிடம் சாஸ்திரங்களைக் கற்பதுபோல் பாசாங்கு செய்தானே யொழிய உண்மையில் அவன் குருவினிடமிருந்து ஒன்றையும் தெரிந்து கொள்ளவில்லை. எந்த வேஷம் போடுவதாக இருந்தாலும் அதற்குத் தக்கபடி நடந்துகொண்டாலல்லவோ உலகம் அதன்மேல் நம்பிக்கை கொள்ளும் ?

முற்காலத்தில் பிள்ளைகள் குருகுலவாசம் முடிந்தவுடன் குருவுக்கு ஏதாவது தக்ஷிணை கொடுத்துத் திரும்புவது வழக்கம். அவ்வாறே, கண்ணனும் குருவைப் பார்த்து நீங்கள் எதைத் தக்ஷிணையாகக் கேட்கின்றீர்கள் என்றான். பல செயல்களால் கண்ணனைப் பரமன் என்றறிந்த அக்குருவும் சிறுவயதில் சமுத்திரத்தில் விழுந்து இறந்த தன் மகனைப் பிழைக்கச் செய்து அவனை மீட்டளித்தால் அதுவே தக்ஷிணை கொடுத்ததாகுமென்றார். அவ்விதமே கண்ணன் யமலோகஞ் சென்று அங்கிருந்த குரு புத்திரனை உயிரடையச் செய்து கொண்டுவந்து குருவுக்கு தக்ஷிணையாக அளித்தான். பரமன் மனது வைத்தால் நடக்காமல் என்ன ? நினைத்த மாத்திரத்தில் இருந்த இடத்திலேயே புதிதாகவே ஓர் பிள்ளையை சிருஷ்டித்துக் கொடுக்கச் சக்தியிருக்கும் பரமனுக்கு இறந்துபோன பிள்ளையை மீட்டு உயிருடன் கொடுப்பதில் வியப்பென்ன இருக்கிறது ?

# 11. உத்தவர் தூது

மதுரையில் உத்தவர் என்றொரு யாதவர் இருந்தார். இவர் பிருகஸ்பதியின் பிரிய சிஷ்யர். கண்ணபிரானின் சிறந்த நண்பர்களில் இவரும் ஒருவர். தன்னைப்பிரிந்து உயிர்தரிக்க முடியாது தவிக்கும் கோகுலவாசிகளைத் தனது ஸந்தேசத்தால் சமாதானஞ் செய்து வர உத்தவரை கோகுலத்திற்குத் தூது அனுப்புகிறான் கண்ணன். உத்தவரும் தேரேறி கோகுலம் புறப்படுகிறார். சூரியன் மறைகிறான். அவரும் கோகுலம் அடைகிறார். பிருந்தாவனத்தின் இயற்கையழகைக் கண்ட அவர் மனம் மிக்க சந்தோஷத்தை அடைந்தது. மாடுகளும் கன்றுகளும் பகல் முழுவதும் காடுகளில் மேய்ந்து வீட்டிற்குத் திரும்புகின்றன. கன்றுகள் பசுக்களின் பின் கத்திக்கொண்டே தொடர்கின்றன. மா( மேய்க்கும் சிறுவர்கள் கோலைக் கையிற்கொண்( பரிகாசமாகப் பேசிக்கொண்டும் ஆடிக்கொண்டும் அவைகளைத் தொடர்ந்து போகிறார்கள். மாடுகள் ஒன்றையொன்று தம் கொம்புகளால் முட்டிக் கொள்கின்றன. மாடுகளின் குளம்புகள் ஊன்றுவதால் புழுதி மேற்கிளம்பி ஆகாயம்வரை பரவியிருக்கின்றது. இடைச்சிகள் யமுனைக்குச் சென்று குடங்களில் நீரேந்தி அவைகளைத் தலையிற் கொண்டு, கண்ணபிரானின் திவ்விய லீலைகளை வாயாரப்பாடி, மெய்ம்மறந்து செல்கின்றனர்.

இடைச் சிறுவர்கள் மரங்களிலும் மணலிலும் உட்கார்ந்து ஆனந்தமாய்க் குழலூதுகின்றனர். கோகுல முழுவதும் கண்ணபிரானின் பிரிவால் பெருங் கவலையில் ஆழ்ந்து கிடந்தது.

அங்கிருந்தார் அனைவரும் அவன் திருநாமத்தை எப்பொழுதும் பாடிக் கொண்டே இருந்தார்கள். கண்ணா, கண்ணா என்று கதறும் ஒலியன்றி வேறொன்றும் அங்கு கேட்கவில்லை. ''கண்ணனை எப்பொழுது பார்க்கப் போகின்றோமோ ? அவனுடன் கூடி என்று விளையாடப் போகிறோமோ? அவனு டைய அழகிய திருமுக மண்டலத்தைக் காணும் பாக்கியம் மறுமுறை எப்பொழுது கிடைக்கப் போகின்றதோ ? அவன் திவ்ய லீலைகளை மறுபடி யும் நேரில் கண்டுகளிக்கும் புண்ணியம் என்று வாய்க் குமோ ? அவன் இனிய குழலோசையை மறுமுறை யும் நம்மிரு செவிகளாலும் என்று பருகப் போகின் றோமோ ? தேனொழுகும் அவன் இனிய சொற் களை மறுபடியும் என்று கேட்பது ?'' என்றெல்லாம் அங்குள்ளவர்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு பெருந்துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றார்கள். கண்ண னின் திருநாமத்தை உச்சரிப்பதையும், அவன் திவ்ய லீலைகளைப்பாடுவதையும் தவிர வேறு எந்த வேலை யையும் செய்வதில்லை. நந்தனுக்கு உத்தவர் வந்திருக்கும் செய்தி எட்டியது. உடனே அவரைக் காண விரைந்து ஓடுகிறார். ''கண்ணனை எப்பொழுது பார்க்கப் போகிறோம். அவனிடமிருந்து நல்ல செய்தி எப்பொழுது வரப் போகின்றது ?''

என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த நந்தனுக்கு உத்தவரின் வரவு மிக்க சந்தோஷத்தை அளித்தது.

உத்தவரைக் கண்ட நந்தன் கண்ணபிரானையே நேரிற் கண்டதுபோல் மகிழ்ந்தான். அவரை எதிர் கொண்டழைத்து வீடு சென்று ஆஸனத்தில் அமர்த்தி நன்கு உபசரித்தான் நந்தன். பரமபுருஷனான கண்ணனையே நேரிற்கண்டால் எவ்வளவு ஆனந்தம் உண்டாகுமோ, அதைவிட ஆயிரமடங்கு அதிகமான ஆனந்தம் கிருஷ்ண பக்தனான உத்தவரைக் கண்ட தால் நந்தனுக்கு உண்டாயிற்று. இதில் என்ன வியத் தற்குண்டு? பரமனை விட அவனிடம் மெய்யன்பு பூண்ட பக்தர்களைத் தரிசிப்பதே எல்லா பாபங்களை யும் போக்கவல்லது. ''என்னை நேரிற்கண்டு தொழு வதைவிட எனது பக்தர்களைத் தரிசித்தால் அதுவே எனக்கு மிக்க சந்தோஷத்தை அளிக்கக் கூடியது. அதனால், நான் அவர்களிடம் மிகவும் அன்பு கொள் கிறேன்'' என்று பரமனுமல்லவா கூறியிருக் கின்றான்!

''மதுரையில் எனது நண்பரான வசுதேவர் சௌக்கியமா? எனதருமைப் புதல்வன் கண்ணன் சௌக்கியமாய் இருக்கின்றானா? என்னையும் யசோதையையும் அவன் எப்போதாகிலும் நினைப் பதுண்டா? இடைச் சிறுவர்களையும் பசுக்களையும் அவன் மறக்காமல் இருக்கிறானா? பிருந்தாவனத் தில் அவன் இளம்பருவத்தில் செய்த லீலைகள் அவன் எப்பொழுதேனும் நினைப்பதுண்டா? எப் பொழுது என் அருமைப் புதல்வன் எங்களைப் பார்க்க

வரப்போகின்றான்? எங்களைப் பல துன்பங்களி லிருந்து காப்பாற்றிய அம்மாயனைக் காணாது ஒரு கணமும் எங்களால் இருக்க முடியவில்லையே. அவன் திவ்விய லீலைகளையும் அவன் தன் புன்னகையை யும் அழகிய வடிவத்தையும் நினைக்க நினைக்க எங்கட்கு வீட்டு வேலைகளைச் செய்யச் சிறிதும் பிடிக்கவில்லை. பைத்தியம் பிடித்தாற் போன்று எப்பொழுதும் அலைகின்றோம். அவன் அங்கும் இங்கும் அலைந்து, விளையாடிய இடங்களைப் பார்க்கும்போது தான் எங்கட்குச் சிறிது உயிர் வருகிறது. கண்ணன் சாதாரண மனிதனல்லன் கம்ஸன் முதலிய அரக்கர்களைக் கொல்ல நாராயணனே கண்ணனாகத் தோன்றியிருக்கிறான் என்பதே எங்கள் உறுதி'' என்று உத்தவரிடம் கூறிக் கண்ணீர் பெருக கண்ணனை நினைத்து பைத்தியம் பிடித்தாற் போல் அப்படியே நின்று விடுகிறான் நந்தன். பாவம், யசோதையும் கண்ணனின் பால்ய லீலைகளை நினைத்து அழுது கொண்டே நந்த னுடைய அருகில் நின்று கொண்டிருக்கிறாள். குழந்தையைப் பிரிந்த யசோதையின் மனோ நிலை மையை நாம் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமேயில்லை. குழந்தையை பிரிந்தது முதல் அவள் ஆகாரமின்றி வீட்டுக்காரியங்களை ஒரு சிறிதும் கவனியாது அவனை நினைத்து நினைத்துப் புலம்பி வந்தாள். குழந்தையை எட்டு வயது வரை வளர்த்து அதனுடைய லீலைகளைக்கூட இருந்து அனுபவித்துப் பிறகு அதை ஒரு க்ஷணம் பிரிந்திருந் தாலேயே தாய்மார்க்குப் பெரும் கவலையாயிருக்கும்.

வருஷக்கணக்கில் கண்ணனைப் பிரிந்த யசோதைக்கு மனம் எப்படித்தான் இருந்திருக்கும்? கண்ணனைவிட்டுத்தனியாக உயிர்த்தரித்திருக்கத்தான் யசோதைக்கு எப்படித் தோன்றும்? மற்ற விஷயங்களில் பெண்கள் மிக்க பொறுமை யுடையர்களாக இருந்தபோதிலும் இவ்விஷயத்தில் மட்டும் அவர்களுடைய பொறுமை எங்கேயோ பறந்துபோய் விடுகின்றது. அதிகமாகச் சொல்லிப் பயன் என்ன? பெண்கள் உயிரை விடச் சம்மதித்தாலும் சம்மதிப்பார்கள். குழந்தையைப் பிரிந்திருக்க மட்டும் அவர்கள் ஒருபோதும் சிறிதும் இசைய மாட்டார்கள். குழந்தையைப் பெறாமற் போனால் கவலையே இல்லை. ஆனால் பெற்ற பின்பு அதனை விட்டுப் பிரிவதுதான் பெரிதும் கஷ்டத்தைத் தருகின்றது.

பல சம்பவங்களால் கண்ணன் பரம்பொருளென்று நந்தனுக்கும் யசோதைக்கும் நன்கு தெரியும். அப்படியிருக்க அவனை நினைத்து வீணாக வருந்த வேண்டிய அவசியம் இவர்கட்கு வேண்டாம். ஆயினும் சாதாரண மனிதர்களைப் போல் இவர்களையும் இப்பகவன்மாயை விட்டபாடில்லை. அதற்கென்ன செய்வது? இந்திரனாயிருந்தாலும் பூமியில் மனிதனாகத் தோன்றிவிட்டால் அதற்குள்ள கஷ்டங்களை அனுபவித்துத் தானே தீரவேண்டும்! இவர்களுக்குக் கண்ணனிடம் உள்ள உறுதியான பக்தியையறிந்த உத்தவர் கண்ணனின் பரத்துவத்தை இவர்கட்கு விசேடமாக எடுத்துக்

கூறிக் கண்ணன் கூடிய சீக்கிரமே இங்கு உங்களைக் காண வரப்போகின்றான் என்று சொல்லி முடித்தார். இவ்வாறு, உத்தவரும் நந்தனும் பேசிக் கொண்டே யிருக்க, விடியற்காலையாய் விட்டது. உடனே யமுனைக்குச் சென்று நீராடித் திரும்புகின்றார் உத்தவர். தங்களைச் சமாதானம் செய்வதற்காகக் கண்ணனால் அனுப்பப்பட்டு இங்கு வந்திருக்கும் உத்தவரை கோபியர்கள் எதிர்கொண்டழைத்து நன்கு உபசரித்து, கண்ணனுடைய க்ஷேமச் செய்தியைக் கேட்டு, அவன் பிரிவால் தங்கட்கு ஏற்பட்ட துன்பத்தை எடுத்துரைக்கலானார்கள். கண்ணனின் பிரிய ஸந்தேசத்தால் கோபியர்களைச் சமாதானம் செய்து, கண்ணனின் பால்ய லீலைகளை அவர்கட்குச் சொல்லிக்கொண்டும் அவன் விளையாடின இடங்களையெல்லாம் பார்த்துக்கொண்டும் நான்கு மாதகாலம் உத்தவர் அவர்களுடன் கோகுலத்திலேயே தங்கியிருந்தார். கண்ணனைப் பற்றிப் பேசிக்கொண்டே அங்கிருந்தோர் நான்கு மாதங்களையும் நான்கு வினாடிகளாகக் கழித்தார்கள். உத்தவரும் தேரேறி மதுரையை யடைந்து கோகுல வாசிகளின் பக்திமேலீட்டை கண்ணனிடம் கூறி, வீட்டை அடைகிறார்.

# 12. ஜராசந்தன் படையெடுப்பு

மகததேசத்தை ஜராசந்தன் என்ற ஓர் அரக்கன் ஆண்டுவந்தான். இவன் கம்ஸனுடைய மாமனார். துஷ்டர்களுள் முதல்வன். சாதுக்களை வருத்துவதைத் தவிர இவனுக்கு வேறெதுவும் தெரியாது. தனது மருமகனான கம்ஸன் கண்ணனால் கொல்லப் பட்ட செய்தி இவனுக்கு எட்டியது. ''அந்த இடைப் பையனா இப்படி செய்துவிட்டான்? அவனை ஒரு நொடியில் கொன்றுயாதவகுலத்தையே பூண்டோடு ஒழித்துவிடுகிறேன்'' என்று சீறிப் பல ஆயிரம் சேனையோடு வந்து மதுரையைச் சுற்றி வளைத்துக் கொண்டான் அவ்வசுரன். இதையறிந்த கண்ணனுக்கு ''நம்மையே கதியாகக் கொண்டிருக்கும் யாதவர்கட்கு இப்படிப்பட்ட துன்பம் உண்டாயிற்றே'' என்று ஒருபுறம் வருத்தம். ''பூமியிலுள்ள துஷ்டர்களனைவரையும் நமது சம்பந்தத்தால் முக்தியடையச் செய்யவே நாம் இங்கு வந்திருக்கிறோம். துஷ்டர்கள் யாவரும் ஒன்றுகூடியே இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களைக் கொன்று நமது ஸம்பந்தத்தால் முக்தியடையச் செய்ய இதுவே தக்க சமயம். நம் அவதார வேலையும் சீக்கிரமே பூர்த்தியாகி விடும்'' என்று மற்றொருபுறம் மிக்க சந்தோஷம். இனி எப்படியாவது யாதவர்களை இக்கோர விபத்தி லிருந்து மீட்கவேண்டும் என்று தீர்மானித்து அனேக

ஆயுதங்களை ஏந்தி இரதமேறிப் போர்க்களத்திற்குச் செல்கிறான் கண்ணன்.

இருவர்க்கும் வெகுநேரம் யுத்தம் நடந்தது. கடைசியில், சத்ருசேனை முழுவதும் கண்ணனுடைய பாணங்களால் அடிபட்டு மடிந்தது. யானை, குதிரை, தேர் முதலிய பரிவாரங்கள் அழிந்தன. ஜராசந்தனும் சிசுபாலனுமே களத்தில் எஞ்சி நின்றனர். அவமானம் தாங்கமுடியாமல் அவர்களும் ஓடி விட்டார்கள். இங்ஙனம் சில மாதங்கள் கழிந்தன. மறுபடியும் முன் ஏற்பட்ட அவமானத்தை நினைத்து ஆங்காங்கு பல தேசங்களிலுள்ள படைகளை ஒருங்கு திரட்டி மதுரையின்மேல் படையெடுக்கிறான் ஜராசந்தன். முறையே இப்பொழுதும் எல்லாவித படைகளும் மடிய ஜராசந்தன் மட்டுமே மீதமாக நிற்கிறான். இவ்விதமே இவன் மதுரையின்மேல் பல தடவை படையெடுத்து சேனை அனைத்தையும் மடிவித்து வீணே தன்னாடு சேரவேண்டியிருந்தது, என்ன ஆச்சரியம்! பாப காரியத்தையே தன் விரதமாகக் கொண்ட அரக்கர் சேனையல்லவோ பகவத்ஸம்பந்தத்தால் நற்கதியடைந்து விட்டது! இதைக் கவனித்தால் நாமும் கிருஷ்ணாவதார காலத்தில் ஓர் அசுரனாகவாவது பிறந்திருக்கக் கூடாதா என்றுகூட ஓர் சமயம் தோன்றுகிறது. அப்படிப் பிறந்திருந்தால் அவர்களைப்போல் பகவானுடைய பாணம் முதலியவைகளால் அடிப்பட்டு நாமும் முக்தியடைந்திருப்போமல்லவா? அப்பொழுது இப்படியெல்லாம் பகவானையடைய வீணாகக் கஷ்டப்படாமல் இருக்

கலாம். இந்த ஜன்மத்திலும் பகவானையடைய எவ்வெவ்வளவோ முயற்சி செய்கிறோம். அவைகளில் ஒன்றாவது பலிக்கிறதா? இல்லவே இல்லை. எப்பொழுதும் பாவத்தையே செய்துகொண்டு பரமனை அடியோடு நினைக்காமலிருக்கும் அவ்வசுரர்கட்கு எப்படியோ ஒருவிதத்தில் மோட்சம் கிடைத்துவிடுகிறது.

உலகத்தில் எப்பொழுதும் துஷ்டர்களுக்குத்தான் காலம் அனுகூலமாயிருக்கின்றது. அதிர்ஷ்டமும் அவர்கள் பக்கலிலன்றோ இருக்கிறது? அதிர்ஷ்டம் என்றால் இப்படியன்றோ இருக்கவேண்டும்? ஒன்றும் செய்யாமலேயே சிலருக்குப் பலன் மட்டும் எளிதில் கிடைத்து விடுகின்றது. செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்தும் சிலருக்குப் பலன் மாத்திரம் கடைசியில் கிடைப்பதில்லை. இவ்வாறு நடப்பதற்கு அதிர்ஷ்டத்தைத் தவிர்த்து வேறுஎதைத் தான் காரணமாகச் சொல்ல முடியும்? இவ்வதிர்ஷ்டம்தான் நமக்கெல்லாம் சரியாக இருக்கவேண்டும். எவனும்பூமியில் பிறந்தால் அதிர்ஷ்டத்தோடு பிறக்கவேண்டும். இல்லையேல் புவியில் அவன் பிறவாமலேயே இருக்கவேண்டும். அதிர்ஷ்டம் இன்றி மனிதன் இங்குப் பிறப்பதைவிட வேறு நரகமே அவனுக்கு வேண்டியதேயில்லை.

சில நாட்கள் கழிந்தபின் நாரதரிடமிருந்து கண்ணனின் விசேடமான வீரியத்தைக் கேட்டுக் காலன் என்னும் ஓர் பெரும் துருக்கவீரன் மூன்று கோடி சேனையுடன் கண்ணனுடன் சண்டை செய்ய மதுரை

யைச் சுற்றி வளைத்துக்கொண்டான். இதுவே சமயமென்றிருந்த ஜாரசந்தனும் சேனைகளுடன் மற்றொரு புறத்துச் சண்டைசெய்யத் தயாராய் இருக்கிறான். இதைக் கண்ட கண்ணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இவ்விரு சேனைகளிடமிருந்து யாதவர்களைக் காப்பாற்றுவதுகஷ்டம்என்று கண்ணனுக்குத்தோன்றி விட்டது. யாதவர்களனைவரையும் ஒருவரும் செல்லமுடியாத ஓரிடத்தில் வைத்துக் காக்க இயலும் மற்ற வழியால் இயலாதென்று எண்ணி விசுவகர்மாவைக் கொண்டு சமுத்திரத்தின் நடுவே துவாரகை என்னும் ஓர் அழகிய நகரை அமைத்தான், பரமன். பகவன் மகிமையால் மதுரையிலுள்ள ஜனங்கள் யாவரும் மாயமாய் ஒரு நொடியில் துவாரகையை அடைந்தனர். யாதவர்களுக்குத் தலைவனான உக்ரசேனனும் பந்துக்களுடன் துவாரகையிலேயே அரசாட்சி செய்துவந்தான்.

## முசுகுந்தன் முக்தி பெற்றது

இக்ஷ்வாகு வம்சத்தில் முசுகுந்தன் என்றொருவன் இருந்தான். அவன் போர் புரிவதில் வல்லவன். ஒரு சமயம், அசுரர்களின் தொல்லையைப் பொறுக்க மாட்டாமல் இந்திரன் முதலிய தேவர்கள் முசுகுந்தனை போர் புரிய சகாயமாக அழைத்துச் சென்றனர். யுத்தமும் முடிந்தது. அசுரர்களும் மடிந்தனர். இந்திரன் முதலியோர் பயமும் நீங்கிற்று.முகுந்தனை பார்த்து— ''உன்னுடைய உதவியினால் நாங்கள் அனைவரும் உயிர் பிழைத்தோம். இனி, உனக்கு

வேண்டிய வரத்தைப் பெற்றுப் பூலோகம் செல்'' என்றான் இந்திரன். ''தேவாசுர யுத்தத்தால் நான் மிகவும் களைத்திருக்கிறேன். சில வருஷ காலம் ஓர்வித வேலையுமில்லாமல் தனியான இடத்தில் தூங்க விரும்புகிறேன். இதற்குரிய ஓர் இடத்தைக் காட்டினால் அதுவே, நீங்கள் எனக்கு வரங் கொடுத்ததுபோல் ஆகும்'' என்று கேட்டான் முசுகுந்தன். பூலோகத்தில் ஓர் பெரும் குகையை அவனுக்குக் காண்பித்து நீ தூங்கும் சமயம் உன்னை எவன் வந்து எழுப்பினாலும் உனது பார்வையினால் அவன் எரிந்து சாம்பலாய்விடுவான் என்று அவனுக்கு வரத்தையும் கொடுத்தனுப்பினான், இந்திரன்.

முசுகுந்தனும் அவ்வாறே அக்குகையில் வெகு காலமாகத் தூங்கிவருகிறான். யாதவர்கள் அனைவரையும் துவாரகைக்கு அனுப்பிய பிறகு கண்ணன் பலராமனோடுகூட மூன்று கோடி துருக்க சேனையையும் மாய்த்து, காலனென்னும் துருக்க வீரனை முசுகுந்தனைக் கொண்டு கொல்ல எண்ணி, அவனிடமிருந்து பயந்து ஓடுவது போல் பாசாங்கு செய்து முசுகுந்தன் தூங்கிக்கொண்டிருக்கும் குகைக்குள் போய் மறைகிறான். காலனும் கண்ணனைத் துரத்திக்கொண்டே ஓடி அக்குகையினுட் சென்றான். அங்கு படுத்துக்கொண்டிருக்கும் முசுகுந்தனைக் கண்ணனே நம்மை ஏமாற்றவே இவ்வாறு தூங்குவது போல் பாசாங்கு செய்கிறான் என்று கருதி, வேகமாய் அவனை எட்டி உதைத்தான், காலன். நித்திரையை விட்டெழுந்து பார்த்த மாத்திரத்தில்துருக்கன்

எரிந்து கரிந்து போய்விடுகிறான். கண்ணனும் முசு குந்தனின் எதிரில் தோன்றுகிறான். அவனைப் பரம் பொருளென்றறிந்த முசுகுந்தன், அவனைப் பலவாறு துதித்து முக்தியளிக்க வேண்டிச் சரணடைகிறான். சரணாகத ரக்ஷகனான கண்ணன் முசுகுந்தனுக்கு முக்தி அளித்து துவாரகையை அடைந்தான். மூலை யில் தூங்கிக்கொண்டிருக்கும் முசுகுந்தனுக்கு முக்தி யளிக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலன்றோ காலனைக் கொல்லத் தனக்கு வல்லமை இருந்தும் கண்ணன் முசுகுந்தனைக்கொண்டு அவனை அழித்தது! பரமன் காலனை இங்கு அழைத்துக் கொண்டு வராவிட்டால் முசுகுந்தனுக்கு மோக்ஷம் எப்படி கிடைக்கப்போகிறது? எங்கேயோ மூலையில் தூங்கிக்கொண்டிருக்கும் அவனை யார்தான் கவனிக்கப் போகிறார்கள்?

# 13. ருக்மிணி கல்யாணம்

விதர்ப்பதேசத்துத் தலைநகராகிய குண்டினபட்டி னத்தில் பீஷ்மகன் என்றோர் அரசன் வாழ்ந்து வந் தான். அவனுக்கு ஐந்து பிள்ளைகளும் ருக்மிணி என்ற ஓர் பெண்ணும் இருந்தார்கள். பரமன் கோகுலத்தில் கண்ணனாக அவதரித்திருப்பதை அறிந்து, மஹா லக்ஷ்மியும் பீஷ்மகனுக்குப் பெண் ணாகப் பிறந்து வளர்ந்து வருகிறாள். இவள், கண்ணபிரானின் மகிமைகளையெல்லாம் கேட்டு, அவனையே கணவனாக அடைய வேண்டுமென்று எண்ணி வந்தாள். ருக்மிணிக்கு மணப்பருவம் வந்தது. இவள் விருப்பப்படி அரசனும் அவளைக் கண்ணனுக்குக் கொடுக்கச் சம்மதித்தான். ஆனால், அசுரத்தன்மையுள்ள ருக்மனுக்கு மாத்திரம், தனது சகோதரியான ருக்மிணியைக் கண்ணனுக்குக் கொடுப் பதில் சம்மதமில்லை. சிசுபாலனுக்கு இவளைக் கன்னிகாதானம் பண்ணிக் கொடுக்க வேண்டு மௌபது அவனது திடமான எண்ணம். மகாமூட னான ருக்மனுக்குப் பரமனின் பெருமை எங்கே தெரியப்போகிறது? கண்ணனால் அவமானப்பட வேண்டிய காலம் வந்தால், அதற்குத் தகுந்தபடி இப்படி எல்லாந்தானே எண்ணம் தோன்றும்? ருக்மனின் வார்த்தையை மீறி, ருக்மிணியைக் கண்ண னுக்குக் கொடுக்க அரசனுக்கு தைரியமில்லை. பிள்ளையினிடமிருந்த அன்பினால் அவ்வாறே அரச

னும் ஒப்புக்கொண்டான். இவளைச் சிசுபாலனுக்குக் கொடுப்பதாக நிச்சயம் செய்தனர்.

கண்ணனைத் தவிர, மற்ற ஆண்மகனை மணக்கச் சிறிதும் சம்மதமில்லாத ருக்மிணிக்கு இச் செய்தி பெருங்கவலையை அளித்தது. பாவம்! ருக்மிணி என்ன செய்வாள்? அவள் மிகவும் சிறியவள். தகப்பனின் வார்த்தையைத் தள்ள அவளுக்குப் பயம். சொல்லாமலிருந்தாலும் மனம் கேட்கவில்லை, ருக்மிணிக்கு. சிறிது ஆலோசித்தாள். ''இனி வாயை மூடிக் கொண்டிருந்தால் காரியம் தவறி விடும். எதுவும் நடந்தபின் வருத்தமடைவதில் பயனில்லை. எப்படியாவது தன் உண்மையான எண்ணத்தைக் கண்ணனுக்குச் சொல்லி அனுப்பினால் அவன் நம்மை ஒரு போதும் கைவிடான். அவனிடம் சரணடைவதே அவனையடைய சுலபமான வழி'' என்றெண்ணி ஓர் பிராமணனை அழைத்து, அவனிடம் ஓர் கடிதத்தை எழுதிக் கொடுத்துக் கண்ணனிடம் அனுப்புகிறாள், ருக்மிணி. கடலைக் கடந்து, துவாரகையை அடைந்தான், அவ்வந்தணன். இவனைக் கண்ட பரமன் அவனை நன்கு உபசரித்து வந்த காரணத்தைக் கேட்கிறான். தான் ருக்மிணியால் அனுப்பப்பட்டு வந்திருப்பதைத் தெரிவித்து, அவள் கொடுத்த ஓலையையும் கண்ணனிடம் கொடுக்கிறான் அந்த பிராமணன். அக்கடிதத்தில் ருக்மிணி பின்வருமாறு எழுதியிருந்தாள்.

''என் மனத்தைக் கொள்ளைக் கொள்ளும் சுகுமார! உன் குணங்களிலும் வடிவழகிலும் வீர்

யத்திலும் மயங்கி என் மனம் உன்னைக் காதலிக்கின்றது. என் உடல், பொருள், ஆவி எல்லாம் உனக்கே அர்ப்பணம் செய்தேன். உன்னை எந்நேரமும் நினைத்துருகும் என்னை மனைவியாகக் கொள்ள வேண்டும். உன்னையே கனவிலும் கருதி வரும் என்னைக் கைவிடுவது உனக்கு நியாயமன்று.

என் உள்ளத்தை உள்ளவாறு அறியாது என் தகப்பன் முதலியோர் என்னைச் சிசுபாலனுக்குக் கொடுக்கப்போவதாக நிச்சயம் செய்திருக்கிறார்கள். அது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. உன்னையே கணவனாக அடைய வேண்டுமென்பது என் ஆவல். வழக்கப்படி கலியாண தினத்திற்கு முதல் நாள் தேவியைத் தரிசிக்க ஆலயத்திற்குச் செல்லும்போது நீ அங்கு வந்து ஒருவருக்கும் தெரியாமல் என்னைத் தூக்கிச் செல்வதே என்னையடைய சரியான வழி. நீ என்னை மணக்க விரும்பாவிட்டால் பிராணனை மடித்து பலஜென்மங்களை எடுத்துக் கடைசியிலாவது உன்னைக் கணவனாக அடைவேனேயன்றி மற்ற புருஷனைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன். உன் திருவடிகளில் சரணடையும் இப்பேதையைக் காப்பது உன் கடமை'' என்று இக்கடிதத்தைக் கண்ட பிறகு தன்னிடம் ருக்மிணிக்கிருக்கும் உண்மையான பக்தி கண்ணனுக்குத் தெரிந்தது. வெகு நாட்களாக ருக்மிணியிடம் காதல் கொண்டிருந்த கண்ணனுக்கு இக்கடிதம் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போலாயிற்று. பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மனம் ஒத்துவிட்டால் ஓர் நிமிஷத்தில் கல்யாணம் ஆகி விடுகின்றது.

ருக்மிணியின் எண்ணத்தைப் பூர்த்தி செய்வதற்காகக் கண்ணன் அப்பிராமண தூதனுடன் இரதமேறி குண்டினபுரத்திற்குப் புறப்படுகிறான். மறுநாள் உதயம் முகூர்த்தம் நடக்கப் போகிறது. முதல் நாள் சாயங்காலமே, சிசுபாலன் பந்துவர்க்கங்களுடன் அங்கு வந்து விட்டான். அவனுடைய நண்பர்களான தந்தவக்த்ரன் முதலிய அரசர்களும் வந்து சேர்ந்தனர். முதல் நாள் கல்யாணப் பெண்ணுக்கு மங்கள ஸ்நானம் செய்வித்து சாஸ்திரப்படி செய்ய வேண்டிய கர்மாக்களை புரோகிதரை கொண்டு பீஷ்மகர் செய்து வைத்தார். கண்ணன் இன்னும் இங்கு வரவில்லை என்று ருக்மிணிக்கு பெருங்கவலையாக இருந்தது. தூது அனுப்பிய பிராமணனும் அதுவரை வராததால் கண்ணனுக்குத் தன்னை மணக்க எண்ணமில்லையோ என்னமோவென்று ருக்மிணிக்கு ஐயமுண்டாயிற்று. எனினும் பரமனின் சரணடைந்தவர்களை காக்கும் தன்மையை நினைத்து தைரியமாய் இருந்தாள். பல நாடுகளிலிருந்து இவ்வைபவத்தைக் காண அநேகம் அரசர்கள் வந்திருக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் பிரமாத சந்தோஷம். ருக்மிணியை மட்டும் கவலை விட்டபாடில்லை. இச்சந்தோஷ காலத்திலுங்கூட அவள் முகத்தில் சிறிது வாட்டமே காணப்பட்டது. விரும்பிய புருஷன் வராவிட்டால் சுப காலங்களிலும் பெண்கள் வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பது வழக்கம். ருக்மிணி கிடைக்கப் போகிறாளென்று சிசுபாலனுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. எப்பொழுது உதயமாகப் போகிறது, எப்பொழுது

**BOOKS BY THE SAME AUTHOR**

| | | | |
|---|---|---|---|
| 1. | Sri Krishna Leela—in Tamil | Rs. | 1-50 |
| 2. | Ezhu Nataka Kathaigal (Short stories of Seven Sanskrit Dramas) | ,, | 1-25 |
| 3. | Tiruppavai in Sanskrit | ,, | 0-30 |
| 4. | Tirukkural in Sanskrit (Arattupal) | ,, | 1-50 |
| 5. | Krishna Katha Sangraha (Skt. Poetry in Print) | ,, | |
| 6. | Vemanapadyamulu (in Sanskrit Slokas with Tamil Translation) | ,, | 3-00 |
| 7. | Vemanapadyangal (in Tamil) | ,, | 1-25 |

*Copies can be had of :*

**S. N. Srirama Desikan,**
(Author)

25, Burkit Road, T. Nagar, Madras-17

சென்று தேவியைப் பணிந்து வீடு செல்லத் தேரேறு கிறாள். அப்பொழுது மாயக்கண்ணன் மாயமாய் வந்து ருக்மிணியை எடுத்துத் தேரில் வைத்துச் செல் கின்றான். இதைப் பார்த்த ஜராசந்தன், சிசுபாலன் முதலியோர்க்குக் கோபம் தாங்க முடியவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் இவ்விடைப் பையன் நம்மை இப்படித்தான் அவமானம் செய்து வருகிறான். இச்சமயம் இவனை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று கருதி, சிசுபாலன் முதலியோர் சேனைகளுடன் கண்ணனுடன் யுத்தம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் எல்லா சேனைகளையுமிழந்து அவமானம் தாங்காமல் அவர்கள் மட்டும் உயிர் பிழைத்து ஓடுகின்றார்கள்.

பகவானிடம் போட்டிபோட்டு எங்கேயாவது வெல்ல முடியுமா ? பரமன் விரும்பும் பொருளையே பரமநீசனான மனிதனும் விரும்பினால் அது பரமனுக் குக் கிடைக்காமல் மனிதனுக்கா கிடைக்கப் போகின் றது ? உண்மையை அறிந்து சிசுபாலன் முதலிலேயே ருக்மிணியை விரும்பாமலிருந்தால் நன்றாக இருந் திருக்கும். அறிவில்லாதவனான சிசுபாலனுக்கு இவ்வளவு தத்துவ ஞானம் ஏற்பட்டால் பிறகு உல கத்தில் வேறென்ன இருக்கிறது ! தனது தங்கை யைப் பலாத்காரமாக அபகரித்துச் செல்லும் கண்ண னைக் கண்ட ருக்மனின் மனம் பதைத்தது. கண்ண னைக் கொன்று ருக்மிணியை மீட்டு வராமல் தான் வீடு திரும்புவதில்லை என்று சபதம் செய்து பெருஞ் சேனைகளுடன் போர் செய்கிறான். கண்ண

னுடைய பாணங்களால் சேனை முழுவதும் மடிய ருக்மன் ஒருவனே உயிரோடு மீண்டான். ருக்மிணியின் விருப்பப்படி அவனைக் கொல்லாமல் தனது தேரில் கட்டி தலையை மொட்டையடித்து, அவமானப்படுத்தினான் கண்ணன். கண்ணனும் ருக்மிணியும் துவாரகையை அடைந்தனர். அங்கு இருவருக்கும் விவாகம் சிறப்புடன் நடந்தேறியது.

ருக்மன் முதலிலேயே கண்ணன் மகிமையைத் தெரிந்துகொண்டு வாளா இருந்திருந்தால் ஒருவித அவமானமும் ஏற்பட்டிருக்காது. மனிதனுக்கு இவ்வளவு தோன்றிவிடுகின்றதா? ஜீவன்களெல்லாம் இப்படித்தான் பரமனின் மகிமையைத் தெரியாது முதலில் அவனை விரோதித்துக்கொண்டு கடைசியில் வீண் அவமானத்தை அடைகின்றன.

# 14. திருமணங்கள்

## ஜாம்பவதியின் மணம்

துவாரகையில் சத்திராசித்து என்ற அரசன் இருந்தான். இவன் சூரிய பக்தன். இவனுடைய பக்தியை மெச்சி, சூரியன் சியமந்தகம் என்னும் மணியை இவனுக்குப் பரிசாக அளித்தான். அம்மணி கோடி சூரியர் ஒரே காலத்தில் தோன்றியதுபோல் அவ்வளவு ஒளியுடையதாய் இருந்தது. அது தன்னை வைத்துப் பூஜித்தோர்க்கு தினமும் முப்பது பாரம் பொன்னை அளித்து வந்தது. ஓர் நாள், சத்திராசித்து மணியைக் கழுத்தில் கட்டிக்கொண்டு இராஜ வீதியில் சென்றான். என்ன ஆச்சரியம்! எவ்வித விளக்கம்! பட்டினம் முழுவதும் இதன் ஒளியால் காந்திமயமாகத் தோன்றிற்று. அவனைப் பார்த்தவுடன், சூரியனே ஒருவேளை கண்ணனைத் தரிசிக்க இங்கு வந்திருக்கிறானோ என்று ஐயம் கொண்டு அவ்வொளியில் மதிமயங்கி இடையர்கள் இச்செய்தியைக் கண்ணனுக்கு அறிவிக்கின்றனர். கண்ணன் இம்மணியின் உண்மையைத் தெரிந்து கொண்டான். இதை எவ்வாறாகிலும் அவனிடமிருந்து தனது பாட்டனான உக்கிரசேனனுக்கு வாங்கிக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று.

நாம் எங்கேயாவது உயர்ந்த ஒரு பொருளைக் கண்டோமானால் அதை நமக்கு வேண்டியவர்கட்கு வாங்கிக்கொடுக்க வேண்டுமென்றெண்ணுவது இயல்பே. ஆனால் நாம் விரும்பும் பொருளெல்லாம் நம்மைப் போன்றவர்கட்குக் கிடைப்பது அரிது. பரமன் எதை விரும்பினாலும் அவனுக்கு எவ்வாறேனும் அப்பொருள் எளிதில் கிடைக்கின்றது. கண்ணன் மணியைத் தனக்கு வேண்டுமென்று கேட்டும் அவன் மகிமையை அறியாது பண ஆசையால் சத்திராசித்து அதனைக் கொடுக்க மறுத்தான். தான் இருந்த இடத்திலிருந்தே அம்மணியைக் கண்ணனால் வரவழைக்க முடியாதா என்ன ? முடியும். அவன் தானாகத் தன் பிழையை அறிந்து மணியைக் கொண்டு வந்து கொடுக்கட்டும் என்ற எண்ணத்தினால் அவனைக் கண்ணன் ஒன்றும் செய்யாதிருந்தான். ஜீவன்கள் தன் பரத்துவத்தை அறியாது தன்னை அவமானஞ் செய்தாலும், "பாவம் ! இவைகட்கு நற்காலம் வந்து நற்புத்தி உண்டானால் அச்சமயம் நம் பெருமையைத் தாமாக உணரும். எதற்கும் காலமன்றோ முக்கிய காரணம்" என்று பரமன் அவைகளைப் பொறுத்துப் பார்ப்பானே தவிர, அதற்காக விரைந்து அவைகட்கு ஓர் தீங்கையும் செய்ய நினைப்பதில்லை. வெகுநாட்கள்வரை பொறுத்துப் பார்த்தும் கடைசிவரை போதாத காலத்தால் கம்ஸன் முதலியோரைப்போல் நல்ல புத்தி வராமல் தனக்குத் தீங்கையே புரிந்து வருவோரையும் கடைசியில்தான் கொல்லப் பரமன் சம்மதிப்பான். அந்தோ ! பரமனின் பொறுமைதான் என்னே !

இவ்வாறிருக்க, ஓர் நாள் சத்திராசித்தின் இளையவனான பிரசேனனென்பவன் அம்மணியைக் கழுத்திலணிந்து காட்டில் வேட்டையாடச் சென்றான். அப்பொழுது ஓர் சிங்கம் அவனையும் அவன் குதிரையையும் கொன்று அம்மணியை எடுத்துக் கொண்டு ஓர் குகையினுள் நுழைந்தது. அக்குகையில் வெகுநாட்களாக வசித்துவந்த ஜாம்பவான் அங்கு வந்த சிங்கத்தைக் கொன்று அம்மணியை எடுத்துத் தன் குழந்தையிடம் விளையாடக் கொடுத்தான். வேட்டையாடச் சென்ற தன் சகோதரன் வெகுநேரம்வரை வராததால், ''கண்ணனுக்கு மணியைக் கேட்டும் கொடுக்காததால் நம்மிடத்து அவனுக்கு கோபம் உள்ளது. அம்மணியை எடுத்துக் கொள்வதற்காக அவன்தான் என் சகோதரனைக் கொன்றிருக்க வேண்டும்'' என்று சத்திராசித்துக்கு உறுதியுண்டாயிற்று. இக்கெட்ட எண்ணமும் மெள்ள மெள்ள பட்டினம் முழுவதும் பரவி, கண்ணனுக்கு இச்செய்தி எட்டியது. உலக அபவாதம் பரமனையும் விட்டபாடில்லை. யோக மகிமையால் மணி களவுபோன செய்தியை அறிந்து அதை மீட்டுவந்து அவனிடம் கொடுத்துத் தனக்கு வந்த அபவாதத்தைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தால் கண்ணன் தன் சேனையுடன் காடு சென்றான்.

அங்கு ஓர் குகையின் வாயிலில் பிரசேனன், குதிரை, சிங்கம் அம்மூன்றும் மடிந்து கிடப்பதை நோக்கி, சேனையை வெளியே நிறுத்தித் தனியே உள் நுழைந்தான் கண்ணன். அங்கு குழந்தை

மணியை வைத்துக்கொண்டு விளையாடிக்கொண் டிருக்கிறது. மணியை களவாடும் நோக்கத்தோடு வந்திருக்கும் அவன் பெருமையை அறியாது, அவ னுடன் சண்டை செய்கிறான் ஜாம்பவான். இருபத் தெட்டு நாட்கள் இருவருக்கும் இடையீடின்றிப் போர் நடந்து கடைசியில் ஜாம்பவான் யுத்தம் செய்ய இயலாது களைப்படைந்து, கண்ணனைப் பரம னென்றறிந்து தான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ள, வேண்டி தன் குமாரியான ஜாம்பவதியை மணியோடு கூட அவனுக்குக் கொடுத்தான். ஜாம்ப வதியுடன் கூட கண்ணன் துவாரகையை அடைந்து அவளை மணந்தான். மணி கிடைத்த வரலாற்றைச் சத்திரா சித்திற்குத் தெரிவித்து அதனை அவனிடத் துக் கொடுத்துத் தன் வீண் பழியையும் போக்கிக் கொண்டான் பரமன்.

## பாமா பரிணயம்

சத்திராசித்திற்கு மணி கிடைத்துவிட்டது. கண்ணன் மூலம் அது அகப்படாமற்போன காரணமும் அவனுக்குத் தெரிந்தது. "கண்ணன் அதனை எடுக்காமலிருந்தும் நாம் வீணாக அவன்மேல் பழியைச் சுமத்தினோமே, இனி அவன் நம்மை என்ன நினைப்பான்? அவன் பெருமையெல்லாம் அறிந் திருந்தும் அறியாத் தன்மையால் அவ்வாறு செய்து விட்டேன். அவன் சீறிவிட்டால் நாம் இவ்வுலகின் கண் வாழ்வதே அரிதாகி விடுமே. எப்படியாவது அவனைச் சமாதானஞ் செய்ய வேண்டும். தவிர,

"இவன் பகவானிடம் வீண்பழி சுமத்தியவன் என்று உலகத்தோரும் என்னை பழிப்பரே? பொன்னாசையால் மோசம்போய் குற்றமற்ற அவனிடம் குற்றத்தைக் கற்பித்த என் பேதமையை என்னவென்று கூறுவது?" என்றெண்ணி அவன் புலம்பலானான். பூதேவியின் அவதாரமாய் அவனுக்குப் பெண்ணாய்த் தோன்றியிருக்கும் சத்தியபாமாவைக் கண்ணனுக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதைவிட அவனைச் சமாதானம் செய்ய வேறு வழியில்லையென்று நினைத்து பாமாவை மணியுடன் கல்யாணம் செய்து கொடுத்தான் சத்திராசித்து. கண்ணனுக்கும் பாமாவுக்கும் கல்யாணம் இனிது நடந்தேறியது. உலகில் உத்தமமான எப்பொருள் இருப்பினும் அவைகளைப் பரமனுக்குக் கொடுப்பதே செய்ய வேண்டியது. அநேக அரசர்கள் பாமாவைக் கல்யாணம் செய்துகொள்ளத் தயாராயிருந்தும் கடைசியில் கண்ணனையே அவள் கணவனாக அடைந்தாள். பாமா பரமனுக்கு மனைவியாக ஆகவேண்டியிருக்கும் போது அதெப்படி அவளுக்கு மற்றொருவனுடன் மணம் நிகழும்? நதிகள் அனைத்தும் கடலினை அடைவதை ஒப்ப, உயர்ந்த பெண்மணிகள் பரமனை அடைந்தால் அதுவே அவர்கட்குத் தனிப்பெருமை தான்.

## பொன்னாசை

த்திராசித்தென்பான் உண்மையிலேயே பரம பக்தன் கண்ணனின் தனிப் பெருமையை அறிந்தவன். கண்ணனோடு இவனுக்கு மிக்க நட்பு

இருந்து வந்தது. முதலில், கண்ணன் மணியைக் கேட்டபோது ஒன்றும் கூறாது அவன் கொடுத்திருக் கலாம். பைத்தியக்காரன், அவன் மணியைத்தான் கொடுக்கவில்லையே. பிறகு, அது காணாமற்போன பின்பாவது, நாம் வீணாக பகவானுக்குத் தீங்கு செய்தோம். அதனால் அது தொலைந்து விட்ட தென்றெண்ணிக் கண்ணனிடம் வீண் பழியைச் சுமத் தாது இருந்திருக்கக்கூடாதா? எப்படிப்பட்ட பக்தர் கட்கும் ஜன்மாந்திர கர்மவசத்தால் இவ்வாறு புத்தி திடீரென மாறிவிடுகின்றது. இது கிணறு, அங்கு நாம் சென்றால் அதில் விழுந்துவிடுவோம் என்றறிந் தும் அதில் வீழ்வதைப்போல், ''கண்ணன் பரமன். அவனிடம் அபசாரப்பட்டால் நாம் நசிந்துவிடு வோம்'' என்றறிந்தும் சிலர் அவனிடம் பிழை செய் கின்றனர். வீணாக, இவ்விஷயத்தில் யாரிடத்தும் பழிசுமத்த இடமில்லை.

பொன் என்பது இயற்கையிலேயே இப்படிப்பட்ட குணம் உடையது. அதைத்தான் நாம் முதலில் நிந்திக்க வேண்டும். அது, எப்படிப்பட்ட மகான் களுடைய புத்தியையுங்கூட ஓர் நொடியளவில் மாற்றி விடுகின்றது. உலகத்தில் ஏற்படும் எத்தகைய சண்டை சச்சரவுகள் எவற்றிற்கும் இதுவே முதற் காரணம். மக்களின் மனத்தை மாற்றி அவர்களை நரகக் குழியில் கொண்டு சேர்ப்பதற்கு இஃது லாகிரியைப்போன்றது. அப்படிப்பட்ட பகவானிடத்து மன்றோ இது பெரியதோர் ஐயத்தை விளைவித்து விட்டது! தெரியாமலா சிறந்த அறிவுடைய நம்

மூதாதையர் பொன்னை மண்ணுக்குச் சமமாக எண்ணி அதை உதைத்துத் தள்ளினார்கள். குடி, கொலை, விபசாரம் முதலியவைகளிலுங்கூட இது மனிதனை இறங்கச் செய்து விடுகின்றதல்லவா? இதைக் கைப்பற்றினால் மனிதனுக்கு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்ற புத்தியுங்கூடப் பறந்து போகிறது. உலகத்தை அடியோடு ஒழிக்கும் பொருட்டு ஏற்பட்டிருக்கும் விஷமே பணமென்பது. படைப்பு முதல் இன்றுவரை இதைக் கைப்பற்றின எவன்தான் உருப்பட்டான்? தான் போன எவ்விடத்துத்தான் இது நன்மையை உண்டுபண்ணியிருக்கிறது? இதன் இயல்பு இவ்வாறானது. இதில் நல்லதேது, கெட்டதேது? விஷத்தில் நல்லது கெட்டது என்ற வேறுபாட்டை என்றேனும் கேட்டதுண்டா?

உலகத்திலுள்ள துஷ்டர்களைக் கொல்ல எடுக்கும் பகவதவதாரங்களுள் பணமும் ஓர் அவதாரமே. ராம கிருஷ்ணாதி அவதாரங்கள் எடுத்துப் பல தீயோரைக் கொல்வதுபோல் ஆதி முதல் இன்றுவரை பண அவதாரம் ஒவ்வொருவருக்கும் சண்டையை விளைவித்து எத்துணையோரைக் கொன்றிருக்கிறது? இதில் ஆசையை வைத்துத்தானே பல அரசர்கள் போர் செய்து பல கோடி சைனியங்களை இழந்தனர்? இதனால்தானே மகாகோரமான மஹாபாரத யுத்தம் நடந்து மக்கள் மடிந்தது? இதனால்தான் இப்பொழுது வெளிநாடுகளிலும் யுத்தம் நடந்து கோடிக் கணக்கில் உயிர் துறந்தனர். மனிதனை உயிருடன்

கொல்லும் பணத்தில்போய் ஜனங்களுக்கு எவ்வளவு ஆசை? பணம் என்பது யமனாயிற்றே? போயும் போயும், யமனிடத்திலா ஆசையை வைப்பது? ஏன் இவ்வாறு பண யமனை அறிந்துகொள்ளாமல் மோசம் போகின்றார்கள்? உண்மை யமனை ஒருவேளை நம்பினாலும் நம்பலாம், பண யமனை மட்டும் ஒரு வேளையும் நம்பவேகூடாது. யமன் குறிப்பிட்ட காலம் வந்தால்தான் ஜனங்களை எடுத்துச் செல்வான். பண யமனுக்கு வேளையொன்றும் வேண்டாம். இருந்தபடி இருந்து இருவர்க்கும் சண்டையை உண்டுபண்ணி திடீரென எடுத்துச் செல்கின்றான். இப்படிப்பட்ட விஷத்திற்குச் சமமான பணத்தை சம்பாதிப்பதற்கு ஆயுள் முழுவதும் செய்யும் முயற்சியை பகவானை அடையும் விஷயத்தில் செய்தால் ஜனங்கள் சுலபமாய் முக்தியை அடையலாமன்றோ? இருபத்து நான்குமணி நேரத்தில் மற்ற எல்லா சமயங்களிலும் பணத்தையடைய வழி தேடி விட்டு கடைசியில் ஒருமணி நேரமாவது அம்மாயனையடைய ஜனங்கள் ஏன் வழி தேடக்கூடாது?

''நாம் இப்படி ஸ்ரீவைகுண்டத்திலிருந்து பூமியில் வந்து எத்துணை அவதாரங்களெடுத்து எவ்வளவு கஷ்டப்பட்டும் தீயார் ஒழிந்தபாடில்லை. நமக்கும் வருவதும் போவதும் வீண் கஷ்டமாய் இருக்கிறது. பணமாகிற விஷத்தை அனுப்பிவைத்தால் உலகில் துஷ்டர்கள் அதை அடைய ஆசைப்பட்டு விளக்கின் கண் விட்டிற் பூச்சியைப்போல் தாமாகவே மடிவார்கள். நாமும் யாதொரு கவலையுமின்றி இங்கேயே

இருக்கலாம்,'' என்றெண்ணிப் பரமன், ஒருவேளை பணத்தை படைத்தானோ என்றுகூட நாம் நினைக்க வேண்டியிருக்கின்றது. இப்போது உலகத்திலும் இவ்வாறுதான் நடந்து வருகின்றது. இப்பணத் தாலேயே பகவானின் விருப்பம் நிறைவேறிவிடுவதால் இனி வரப்போகும் யுகங்களில் அவன் வீணாக அவதாரங்களை எடுக்காமலுமிருக்கலாம். வேதம், புராணம், இதிஹாஸம் முதலியவைகளுங்கூட இனி அவசியமில்லை, அதற்குத் தகுந்தபடிதான் அவை களையும் ஜனங்கள் ஆதரித்து வருகின்றார்கள். கலி பிறந்து இப்போது சில ஆண்டுகள்தான் கழிந்திருக் கின்றது. இதற்குள்ளாகவே இத்தகைய ஆர்ப் பாட்டம்! இன்னும் சில ஆண்டுகள் கடந்தபின் உலகம் எவ்வாறிருக்கும் என்பதை நினைத்துப் பார்க் கும்போது மனம் பதறுகிறது. பணத்தினிடம் வைக் கும் ஆசையை இனிப் பகவானிடம் வைப்பின் நலம். இன்றேல், எத்துணையாண்டுகள் கழியினும் கலி மாறுதலடையாது. உலகமும் அழிவது திண்ணம்.

## காளிந்தியை மணந்தது

துரியோதனன் பாண்டவர்களைக் கொல்ல எவ்வளவோ முயற்சி செய்தான். பரமனின் கிருபை யால் எல்லா ஆபத்துகளையும் கடந்து, பாண்டவர்கள் தாயாருடன் இந்திரப்ரஸ்தத்தில் வசித்து வருகின் றார்கள், தனது அத்தான்மார்களான பாண்டவர்கள் கோர விபத்திலிருந்து மீண்ட செய்தியை அறிந்து, அவர்களையும் தனது அத்தையான பிரதையையும்

காணக் கண்ணன் இந்திரப்ரஸ்தம் வருகிறான். கண்ணனைத் தரிசித்த பாண்டவர்க்கு மிக்க ஆனந்தம். அவனை ஆஸனத்தில் அமர்த்திப் பூஜித்தார்கள். பாண்டவர்க்கும் கண்ணனுக்கும் குசல ப்ரஸ்னம் நடந்தேறியது. தங்கட்குத் துரியோதனனால் உண்டான கஷ்டங்களையெல்லாம் தன் மருமானிடம் கூறிப் புலம்புகிறாள், பிரதை. அவர்களின் துக்கத்தைப் போக்கக் கண்ணன் சில ஆண்டுகள் அவர்களுடனேயே இருந்தான். ஓர் நாள், அர்ச்சுனன் கண்ணனுடன்கூட வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். வேட்டை முடிந்தவுடன் களைப்பினால் கண்ணனும் அருச்சுனனும் யமுனைக்குச் சென்று நீராடி களைப்பைத் தீர்த்துக் கொள்ளுகின்றார்கள். அச்சமயம் அழகிய ஓர் பெண் யமுனையில் நின்று தவஞ்செய்து கொண்டிருப்பதைப் பார்த்தான் அருச்சுனன். அதன் காரணத்தை அறிந்துகொள்ள அவளிடம் சென்று அவள் வரலாற்றைக் கேட்க, ''நான் சூரியன் மகள். என் பெயர் காளிந்தி. பரம புருஷனைக் கணவனாக அடையும் பொருட்டு வெகு நாட்களாக நான் இங்கு தவஞ்செய்து வருகிறேன். என் மனோரதம் நிறைவேறும் வரை இவ்விரதத்தைக் கைவிடமாட்டேன்'' என்று பதிலளித்தாள், காளிந்தி. அவள் விருப்பத்தை ஈடேற்ற அவளைத் தேரில் ஏற்றிக் கண்ணனிடம் கொண்டுவந்து விடுகிறான் அர்ச்சுனன். துவாரகையில் கண்ணனுக்கும் காளிந்திக்கும் மணம் இனிது சிறப்புடன் முடிந்தது. எவனும் தொடங்கிய காரியத்தை விடாமல் செய்து முடித்தால் முடிவில் அவன் பலமடைவது உறுதி.

எப்படியாவது பரமனைக் கணவனாக அடைய வேண்டுமென்ற திட ஸங்கல்பத்தால் விடாமல் தன் வேலையைச் செய்து வந்ததாலன்றோ காளிந்தி பரமனைக் கணவனாக அடைந்தாள் !

## சத்தியா விவாகம்

அயோத்திக்குத் தலைவனான நக்னசித் என்பவனுக்கு சத்தியா என்றொரு பெண் இருந்தாள். இவள் அழகில் ரதியைப் போன்றவள். தன்னிடத்திலிருக்கும் ஏழு காளைமாடுகளை எவனொருவன் தன் வலிமையால் அடக்குகிறானோ அவனுக்கே சத்தியாவைக் கல்யாணஞ் செய்து கொடுப்பதாக ஏற்பாடு செய்திருந்தான், அரசன். பல நாட்டு மன்னர்கள் வந்து அம்மாடுகளை அடக்க முடியாது அவைகளிடமிருந்து காயமடைந்து ஓடி இருக்கிறார்கள். இதையறிந்த கண்ணன் அவளை மணக்கும்பொருட்டு தன் சேனையோடு அங்கு வந்தான். கண்ணனை நேரில் பார்த்த பின்பு அவனையே கணவனாக அடைய வேண்டுமென்று சத்தியாவுக்கு எண்ணமுண்டாயிற்று. அரசனிடம் சென்று, ''உனது பெண்ணை நான் மணக்க விரும்புகிறேன். அவளை எனக்கு மணம் செய்து கொடுக்கவேண்டும்'' என்று கேட்டான் பரமன். ''பிரபோ ! நீ பரமபுருஷன். உன்னைவிட உயர்ந்த வேறு வரன் எனக்குக் கிடைக்கப்போவதில்லை. முன் ஜன்மங்களில் செய்த புண்ணியத்தால் உன்னை நான் மருமகனாக அடையப்போகிறேன். ஆயினும், என் பிரதிக்ஞைப்

படி காளைமாடுகளை அடக்கிப் பிறகு அவளை மணந்துகொள்'' என்றான் அரசன். ஏழு உருவங்கள் எடுத்து அவ்வேழு காளைகளையும் அடக்கி, அவை களைக் கயிறுகளால் கட்டிப் பிணித்துத் தரையில் இழுத்தான், பரமன். உடனே அரசனும் தனது பெண்ணைக் கண்ணனுக்குக் கல்யாணஞ்செய்து கொடுத்து வரிசைகளுடன் அவளைப் புக்ககத்திற்கு அனுப்புகிறான். இவ்வாறு, மித்திரவிந்தை, பத்திரை, இலக்ஷ்மணை முதலிய மற்ற அரசகுமாரி களையும் மணந்து துவாரகையில் இருந்து வரு கிறான், பரமன்.

# 15. பாரிஜாதம்

இடம், துவாரகை. ருக்மிணியின் அந்தப்புரம். அங்கு, பஞ்சணையில் ருக்மிணியும் கண்ணனும் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நாரதர் பாரிஜாத மலரொன்றை எடுத்துக்கொண்டு சுவர்க்கலோகத்திலிருந்து கண்ணனைக் காண அங்கு வருகிறார். திவ்விய தம்பதிகள் நாரதருக்குத் தரிசனம் அளிக்கின்றார்கள். தேவலோகத்தில் மட்டும் கிடைக்கும் அப்பாரிஜாத மலரைப் பரமனுக்குக் கொடுத்துத் தம் இருப்பிடம் அடைகிறார் நாரதர். சமீபத்திலிருந்த ருக்மிணியின் தலையைத் தானாக வாரி, இப்புதிய மலரை அவள் தலையில் சூட்டினான் பரமன். தனக்கு ஏதாவது ஓர் புதிய வஸ்துவைக் கணவன் கொடுத்தால் அதைக்கண்டு சக்களத்திகள் பொறாமைப்படுவார்கள், என்ற செய்திதான் ருக்மிணிக்குத்தான் நன்றாகத் தெரியுமே! அவள் அம்மலரைச் சூட்டிக்கொண்டு வெளியே செல்லாமல் உள்ளேயே இருக்கக்கூடாதா? வீண் ஜம்பத்தால் ருக்மிணி சத்தியபாமாவின் வீட்டிற்குச் சென்றாள். எப்பொழுதும் பெண்களிடத்தில் மட்டும் இத்தகைய அசட்டுத்தனம் உண்டு. கணவன் மற்றவர்கட்குத் தெரியாமல் தனக்கு மிக்க பிரியமான ஒருத்திக்கு ஏதாகிலும் ஓர் புதிய பொருளைக் கொண்டுவந்து கொடுத்தால் அவர்கள் அதைச் சக்களத்திமார்க்குக் காட்டாமல் வைத்துக்கொள்ளுவதில்லை.

எல்லோரையும்விட கணவன் தன்னிடம் விசேஷமான பிரீதி கொண்டிருக்கிறானென்பதைச் சக்களத்திமார்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற வீண் ஜம்பத்தால் அவர்கள் முதலில் அதைக் காட்டுவது வழக்கம். சக்களத்திகள் இதைக் கண்டு கஷ்டப்பட்டால் அதுவே இவர்கட்குப் பரமானந்தம். தேன் மழை பெய்ததைவிட அதிக ஆனந்தம். பெண்களுக்குத் தாங்கள் சந்தோஷப்பட்டால் மட்டும் போதாது. முதலில் சக்களத்திகள் கஷ்டப்படவேண்டும். உலகில் நாமும் சந்தோஷப்பட்டு அவர்களுமா சந்தோஷப்படுவது என்பது அவர்களுடைய நோக்கம். இப்படிப்போய் ஓர் பெரும் கெட்ட குணம் பெண்களிடத்தில் வெகுகாலமாக இருந்து வருகிறது. லோக மாதாவாகிய பிராட்டியிடத்திலேயே இது இருக்கும்போது இப்பொழுது சாதாரணப் பெண்களிடத்தில் இருப்பதைப் பற்றிக் கேட்பானேன்?

ருக்மிணியின் தலையில் சூட்டியிருக்கும் பாரிஜாத மலரைக் கண்டாள் பாமா. சுவர்க்க லோகத்திலிருந்து இம்மலர் இங்கு வந்த காரணத்தையும், அதைக் கண்ணன் தானாக அவள் தலையில் சூட்டியதையும் கலகக்காரரான நாரதரால் பாமா முன்னமேயே தெரிந்து கொண்டாள். "எப்பொழுதுமே கண்ணனுக்கு அவளிடத்தில் அதிக பிரீதி. அவன் நம்மை எப்பொழுதும் கவனிப்பதில்லை. அவன் எதைக் கொண்டு வந்தாலும் முதலில் அவளுக்குத்தான் தருகிறான். வீணாக நம்மிடம் விசேஷ பிரீதி வைத்திருப்பதுபோல் வேஷம் போட்டுத் தேனொழுகும்

வார்த்தைகளால் ஏமாற்ற வருகிறான். இனி, கண்ணன் இங்கு வரட்டும் ; திரும்பிப் பார்க்கிறேனா பார். அவன் மாய வேலைகளெல்லாம் இப்பொழுது தான் வெட்ட வெளிச்சமாயிற்று. ருக்மிணிக்குத்தான் என்ன கர்வம்! பூவைச் சூட்டிக்கொண்டதுமின்றி என் எதிரில்வேறு வந்து மினுக்குகிறாள். ஆகட்டும், இவள் கர்வத்தை நான் அடக்குகிறேன். இவள் மினுக்கலையும் குலுக்கலையும் இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் சொல்லுகிறேன்'' என்று சொல்லி, அலங்கோலமாய்த் தரையில் படுத்து அழுதுகொண்டிருக்கிறாள், பாமா.

கண்ணன் ருக்மிணியின் வீட்டைவிட்டு சத்திய பாமையின் வீட்டிற்கு வருகிறான். வழக்கமாகக் காணப்படும் சந்தோஷக் குறிகள் அன்று ஒன்றும் தென்படவில்லை. என்றும் போல் வாசலில்வந்து பாமாவும் தன்னை எதிர்கொண்டழைத்துச் செல்லக் காணோம். வாயிற் கதவுகள் திறந்தே கிடந்தன. இதையெல்லாம் கண்ட கண்ணனுக்குப் பெரியதோர் ஐயம் பிறந்தது. ''சரி, நாரதர் இங்கு வந்தாரன்றோ? அவர் ஏதோ இங்குவந்து பாமா வுக்குத் தூபம் போட்டுவிட்டாற்போல் இருக்கின்றது. நாரதர் நமக்கு நல்ல உத்தியோகந்தான் கொடுத் தார். பொழுது போனால் பொழுது விடிந்தால் ஒருத்தி தவிர்த்து மற்றொருத்தி கோபித்துக் கொள்ளுவதும் அவர்களை நாம் போய் சமாதானஞ் செய்வதுமே தொழிலாய்விட்டது. நன்றாய் இருக் கின்றது. நம் உத்தியோகம்! இரண்டு பெண்டாட்டிக்

காரன் திண்டாட்டம் என்றும் இப்படித்தான்'' என்றெண்ணிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

நினைத்தபடியே அங்கு நடந்திருக்கிறது. பாத்திரங்களெல்லாம் நான்கு புறங்களிலும் உருண்டு கிடக்கின்றன. கட்டில் கவிழ்ந்து கிடக்கின்றது. தலையணைகள் நான்கு புறங்களில் நான்கு கிடக்கின்றன. பழங்கள் மூலைக்கொன்றாய் வீசிக் கிடக்கின்றன. பால் கீழே வெள்ளமாய்ப் பெருகிக் கொண்டிருக்கின்றது. தலையில் இருந்த மலர்கள் கசங்கி தூரே விழுந்து கிடக்கின்றன. ஒட்டியாணம், வளை, முதலிய ஆபரணங்கள் ஒடிந்து கீழே விழுந்து கிடக்கின்றன. தலையை விரித்துக்கொண்டு ஓர் புறம் சாய்ந்து இடது கையைத் தலையணையாக மடக்கி வைத்துக் கொண்டு, வலது கையால் மேல் துணியை எடுத்து முகத்தை மூடிக்கொண்டு இரு கால்களையும் மடக்கிப் படுத்துக்கொண்டு தூங்குவது போல் பாவனை செய்கிறாள், பாமா. இதைக் கண்ட கண்ணன் திடுக்கிட்டான். சரி, இவளைச் சமாதானப் படுத்துவதற்கு இன்று முழுவதும் நமக்கு சரியாய்ப் போய்விடப் போகின்றது என்று கருதி, ''பாமா! பாமா! பாமா!'' என்று மும்முறை அவளைக் கூப்பிடுகிறான். பதிலைக் காணோம். பெருங் கவலையாய்விட்டது. பொழுதுபோனால் பொழுது விடிந்தால் அவர்களுடன் பாடுபட்டு வரும் அவனுக் கல்லவோ அதன் கஷ்டம் தெரியும்! எத்தனை தடவைகள் கூப்பிட்டும் அவள் விழித்துக்கொள்ள வில்லை. உண்மையாகத் தூங்குபவளை எழுப்ப

லாம். தூங்குவதுபோல் பாசாங்கு செய்வோரை எங்கேயாவது எழுப்ப முடியுமா? கடைசியாக பாமா வுக்கும் மனம் சற்று இறங்கியது. ஆனாலும் பிடிவாதத்தை மட்டும் அவள் விடவில்லை. பெண்கள் உண்மையில் கணவனிடம் பேசவேண்டுமென்று எண்ணியிருந்த போதிலும் திடீரென அவசரப்பட்டுப் பேசிவிடமாட்டார்கள். தனக்கு இருக்கும் காதலை யும் அவசரப்பட்டு வெளிப்படுத்தாமல் உள்ளேயே வைத்திருப்பார்கள். பார்க்கப்போனால் புருஷனை விடப் பெண்களுக்குத் தான் அதிகமான காமம் உண்டு. ஆனால் அதை வெளிப்படுத்தாமல் உள்ளேயே வைத்திருப்பதால்தான் புருஷர்கள் அங்கு போய் தமக்கிருக்கும் விருப்பத்தை அவசரப்பட்டு வெளிப்படுத்தி வீணாக ஏமார்ந்து போகின்றார்கள். இப்படி அசாதாரணமான சக்தியை உடைத்தாயிருப்ப தால்தான் பெண்களெல்லாம் புருஷர்களைத் தம் வலைகளில் சிக்கவைக்கிறார்கள்.

கடைசியில் மெள்ள எழுந்து தனது கோப காரணத்தைக் கண்ணனிடம் பாமா கூறுகிறாள். ''அட! பைத்தியமே! இதற்காகவா கோபித்துக் கொள்கிறாய்? எனக்கும் அவளுக்கும் எவ்வளவு பொருத்தம் என்பது உமக்கு தெரியாததா? ஏதோ நான் அங்கே இருந்தபோது நாரதர் மலரைக் கொண்டுவந்து கொடுத்தபடியால் ஏதோ போகட்டும் என்று அதை அவளுக்குக் கொடுத்தேன். அதனால், நானே அவளுக்கு அடிமைப்பட்டதுபோல் அவள் எண்ணிவிட்டாற்போல் இருக்கின்றது. இவ்வாறு

நினைத்ததுமன்றி தன் விண்ஜம்பத்தை உன்னிடம் வேறு காட்ட வந்துவிட்டாளோ? அந்த அசடுதான் அல்ப சந்தோஷி என்று உனக்குத் தெரியுமே; நீ ஏன் வீணாகக் கவலைப்படுகிறாய்? சுவர்க்க லோகத்திலிருந்து பாரிஜாதச் செடியையே வேறோடு பிடுங்கிவந்து உன் தோட்டத்தில் நட்டுவிடுகிறேன் பார். இது பிரமாத காரியமா?'' என்று சொல்லி அவளைச் சமாதானஞ் செய்தான்.

அவளுக்குச் சற்று முகம் மலர்ந்தது. கண்ண பிரானின் வீர்யம் மற்றவர்களிடத்தில் பலிப்பது போல் பெண்களிடத்தில் மட்டும் பலிப்பதில்லை. பெண்கள் பிடித்த காரியத்தைச் சாதிக்காமலும் இருப்பார்களோ? கணவன் எத்தகைய முரடனா யிருந்தாலும் அவனை ஓர் நொடியில் மயக்கிப் பெண் கள் தம் வழிக்குக் கொண்டுவந்து விடுவார்கள். இவ்வளவு வேலையும் அந்த நாரதர் பண்ணினது தான். நாரதர் வரத்தான் வந்தாரே; ஒன்றும் கொண்டு வராமல் இருந்திருக்கக் கூடாதா? அப்படிக் கொண்டுவந்தால் இரண்டு மலர்களையாவது அவர் கொண்டுவந்திருக்கலாம். ஓர் மலரைக் கொண்டு வந்து இத்தகைய அமர்க்களஞ் செய்து விட்டார், மஹானுபாவர். ஏதாவது குறும்புகள் செய்யாவிட் டால் மட்டும் அவர்க்குப்பொழுது போவதில்லை. ஆனால் அவர் செய்வது ஒவ்வொன்றும் நன்மை யிலேயே முடிகின்றது. ஏதாவது ஒரு அரக்கனைக் கொல்லவேண்டுமென்று நினைத்தால் அதற்குமுன்ன

தாக ஏதாவது இப்படிக் குறும்புகள் செய்து, கண்ணனை அக்காரியத்தில் தூண்டுவது வழக்கம்.

## நரகாசுரவதம்

பிராக் ஜோதிஷ் என்னும் ஓர் அழகிய பட்டினம். அதைச் சுற்றிலும் நீர் அகழிகள் உள்ளன. சுற்றி வளைத்ததுபோல் பெரிய மலைகள். ஆயுதபாணிகளாய் முரன ிய அசுரர்கள் அந்நகரைக் காத்து வருகின்றார்கள் பூமியின் புதல்வனான நரகாசுரன் அதை அரசாண்டு வருகிறான். நரகனால் பலாத்காரமாகக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான அரச குமாரிகள் கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருக்கிறார்கள். அயல் பெண்களை வீணாக அழச் செய்தால் மனிதன் எங்கேயாவது உருப்படுவானா ? வீட்டில் பெண்கள் கண்ணீர்விட்டால் அதுவே வீடு நாசமடைவதற்கு முதற்காரணம். எல்லாவற்றையும்விடப் பெண்பாவம் மிகவும் பொல்லாததன்றோ ? அயல் பெண்களை வீணாக அழச் செய்துதானே இராவணன் பூண்டோடு மடிந்தான். அதுபோல் நரகனுக்கும் கால முடிவு ஏற்பட்டு விட்டாற்போலிருக்கிறது. இல்லாவிட்டால் அவனுக்கு ஏன் இப்படி அயல் பெண்களை வருத்த எண்ணம் தோன்றுகிறது ?

நரகன் ஒருநாள் தேவலோகம் சென்று இந்திரனுடன் சண்டை செய்து அவனுடைய குடை முதலிய சின்னங்களைப் பிடுங்கி அவமானப்படுத்திவிட்டான்.

பாவம் ! இந்திரனுக்குப் பிரமாத கோபம். அவமானம் தாங்கமுடியவில்லை. சாதாரண மனிதர்களுக்குள் ஒருவன் மற்றொருவனைச் சிறிது அவமதித்துப் பேசிவிட்டாலே பெரிய சினம் உண்டாகிறதே ! தேவர்களுக்குத் தலைவனான ஒருவனை சாதாரண மனிதன் போய் அவமானஞ் செய்தால் அவனுக்குக் கோபம் வருவதைப்பற்றிக் கேட்பானேன் ! கண்ணனைச் சரணடைவதைத் தவிர நரகனைக் கொல்ல வேறு வழியில்லை என்றறிந்து இந்திரன் துவாரகைக்கு வருகிறான். இதே இந்திரன் அன்று கோகுலத்தில் தனது பூஜைக்குக் குறுக்காக வந்தபோது கண்ணனை, ''இடைப் பையன்'' என்று அவமானஞ் செய்தான். இன்று தனக்கு அவமானம் வரவே அவனே இப்பொழுது கண்ணன் திருவடிக் கமலங்களிலேயே வந்து விழுகிறான். காரியம் வந்தால் காலைப் பிடிப்பதும் காரியம் முடிந்தால் கழுத்தை இறுகப் பிடிப்பதுமாகிய தன்மை மனிதரிடத்து மட்டும் நின்றுவிடவில்லை.

பாமாவின் வீட்டில் அவளைச் சமாதானஞ் செய்து அவளோடு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருக்கும் கண்ணனுடைய திருவடிகளில் ஓடிவந்து விழுந்து தனக்கு நரகனால் ஏற்பட்ட அவமானத்தை முறையிட்டு அவனைக் கொல்வதற்கு வேண்டுகிறான், இந்திரன். உடனே கண்ணன் பாமாவுடன் இரதமேறி நரகாசுரனின் இருப்பிடம் சேர்கிறான். நகரைக் காவல் செய்து வந்த முரனென்னும் அசுரன் கண்ணனுடன் போர் செய்து கடைசியில் சக்கரத்தால்

தலையறுக்கப்பட்டு மடிந்தான். அசுரச் சேனை முழுவதும் கண்ணனுடைய பாணங்களால் அடிபட்டு மடிந்தன. வெகுகாலம் சண்டை செய்து நரகாசுர னும் முடிவில் உயிர் துறந்தான். அவ்வசுரனால் ஜெயிலில் வைக்கப்பட்டு வருந்தி வந்த பதினாறா யிரம் அரசகுமாரிகளும் கண்ணபிரானைக் கணவனாக அடைய விரும்பினார்கள். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற அவர்களை துவாரகைக்கு அனுப்பித் தான் மட்டும் பாமாவுடன் தேவலோகம் சென்று இந்திரனைச் சமாதானஞ் செய்து அங்கேயிருந்த பரிமளம் மிகுந்த பாரிஜாதத்தை வேரோடு பிடுங்கி வந்து பாமாவின் வீட்டுத் தோட்டத்தில் வைத்து அவளைத் திருப்தி செய்ததோடு, பதினாறாயிரம் அரச குமாரிகளை மணந்து, தான் அவ்வளவு உருவங்கள் எடுத்து ஒருவருடைய மனமும் கோணாத வாறு நடந்துவந்தான் பரமன். அப்பெண்மணி களும் பல பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.

□ ○ □

SRI GOMATHI ACHAGAM
MADRAS-5 Ph : 844554